# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

GAZETTEER UNIT 408/ 17 JUN 1965 MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS-8



மலர் 2 ] விகாரி மாசி மார்ச் 1960 [ மணி 6

சென்னை அரசாங்க அறநிலையப்



வடபழனியில் திருமுறை ஊர்வலம்

## பொருளடக்கம்


1. திருவிழாக்கள்
2. உய்யக்கொண்டான் மலை
3. திருப்பராய்த்துறை
4. திருப்பாண்டிக்கொடுமுடி
5. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
6. அமர்நீதி நாயனர்
7. வைஷ்ணவம்
8. கிருஷ்ணுவதாரம்
6. திருநெடுங்களம்
10. நவதிருப்பதியநுபவம்
11. திருவுந்தியார்


(முகப்புப்படம் - உய்யக்கொண்டான் மலைக்கோயில் பிட்சாடனர் திருவுருவம்)


# திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,

நுங்கம்பாக்கம் ஹைரோடு,

சென்னை -6.

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 2] விகாரி மாசி - மார்ச் 1960 [மணி 6


GAZETTEER UNIT 408/ 17 JUN 1965 MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS-8

## திருவிழாக்கள்

மண்ணினிற் பிறந்தார்
பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை
அமுது செய்வித்தல்
கண்ணிலுல் அவர்
நல்விழாப்பொலிவு கண்டார்தல்
உண்மையாமெனில் உலகர்முன்
வருகென உரைப்பார்

—சேக்கிழார்.

*ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர் துய்ப்பனவும்
காணதே போதியோ பூம்பாவாய்
தொல் கார்த்திகைநாள்...விளக்கீடு
காணதே போதியோ பூம்பாவாய்
ஆதிரைநாள் காணதே
போதியோ பூம்பாவாய்
தைப்பூசங் காணதே
போதியோ பூம்பாவாய்
மாசிக்கடலாட்டு...நடமாடல் காணதே
போதியோ பூம்பாவாய்
பங்குனி உத்தரநாள் ஒலிவிழாக் காணதே
போதியோ பூம்பாவாய்
அட்டமிநாள் கண்ணுரைக் காணதே
போதியோ பூம்பாவாய்
பொற்றுப்புக் காணதே
போதியோ பூம்பாவாய்
பெருஞ்சாந்தி காணதே
போதியோ பூம்பாவாய்.

திருக்கோயில்களில் அமைக்கப்பெற்றிருக்கும் திருவுருவங்களுக்கு நித்திய, நைமித்திக, காமிய பூசைகள் நடைபெற்று வருவதை யாவரும் அறிவோம். நித்திய பூசை அந்தந்த ஆலயத்தின் தகுதிக்கேற்ப ஒரு காலம் முதல் ஆறுகாலம் வரை நடத்தப்பெறுகின்றது. நைமித்திக பூசை என்பது உற்சவம் அல்லது திருவிழா என்று கொண்டாடப் படுவது. இந்த இரண்டுவகையான பூசைகளும் பொதுவாகச் செய்யப் படுபவை. காமிய பூசை என்பது இறைவனிடம் ஏதாவது ஒரு குறித்த பிரார்த்தனையை நிறைவேற்றும் நோக்கத்துடன் தனிப்பட்டவர்களால் செய்யப்படுவது. திருவிழா என்பது சிறப்பாகச் செய்யப்படும் பூசனையாதலால் அதனைச் சிறப்பென்றே திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

'சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு'

என்ற குறளுக்கு பரிமேலழகர் உரையில் நாள் தோறும் செய்யும் பூசனையின் குறைவை நிவர்த்திக்க நைமித்திக பூசைகள் செய்யப்படுகின்றன என்று விளக்கியுள்ளார். திருவிழாக்கள் குறைகள் இல்லாமல் செய்யப்படவேண்டுவது மிகவும் அவசியம். அவற்றில் ஏற்படும் குறைகளுக்கு மன்னிப்பு கேட்பது தவிர வேறு பிராயச் சித்தம் இல்லை. உற்சவங்களின் அங்கங்கள் பதினெட்டு என

* குறிப்பு:—இவ்விழாக்கள் சென்னை கபாலீசுவரர் கோயிலில் இப்போது நடத்தப் பட்டுவருகின்றன. பொற்றுப்பு என்பது வசந்தகாலத்தில் பொன்னூசல் விழாவாகவும், பெருஞ்சாந்தி குடமுழுக்கு நினைவாக வருடோற்சவமாகவும் நடைபெறுகின்றன,

158337

திருப்பாதிரிப்புலியூர் - ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் விளக்கியுள்ளார்கள்.

அவையாவன: (1) ரிஷப பூசை. இது விருஷப யாகம் என்றும் கூறப்படும். (2) கொடியேற்றல். (3) பிரஹத்தானம். (4) மிருத்சங்க்ரஹணம்; மண் கொண்டு வருதல்; விதை போடுதல். அவை முளைத்தல் முதலிய சிறப்புக்கள். (5) யாகசாலை. (6) அஸ்திரம். இதற்கு ஆறு அங்கம் என்று பெயர். ஷடாங்க மந்திரம் என்றும் கூறப்படும். இப் பூசையில் அங்கங்களைத் தொட்டுப் பார்த்தல் விரோதமின்மையைக் காட்டுகிறது. அதுபோது சிறிய மேளம் உபயோகிக்கப்படும். (7) பலிதானம் பிண்டம் போடுதல். (8) யானக் கிரமம். இது வாகனக்கிரமம் என்றும் கூறப்படும். (9) பரிவேடம். (10) நிராதனை. இதை ஆலத்தி என்றும் கூறுவர். (11) கௌஸ்துபம். இது சந்தோஷத்தைக் குறிப்பது. (12) தீர்த்த சங்கிரஹணம். இது நீர் கொண்டு வரல் எனப்படும். (13) சூர்ணோற்சவம். இதற்குப் பொற்சுண்ண விழா என்று பெயர். இவ் விழாவில் வாசனைப் பொடிகள் உபயோகிக்கப்படும். (14) தீர்த்தம். (15) அவரோகணம் (கொடியிறங்கல்) ருக் என்ற பதத்துக்கே வளர்த்தல் என்று பொருள். (16) ஸ்தாபனம் (தனியாகப் பூசித்தல்). (17) விவாகம். (18) அடியார்களைப் பூசித்தல்.

திருவிழாக்களில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களும் அறிவுறுத்தப் பெறுகின்றன. பொதுவாக, புற்றுமண் எடுத்தல், முளையிடுதல், கொடியேற்றம் இவை படைப்பைக் குறிக்கும். வாகனம், யாகம், பலி, முதலியவை காத்தல் தொழிலைக் குறிப்பதாகக் கொள்ளலாம். தேரோட்டம், பரிவேட்டை, சாந்து அணிதல் முதலியவை அழித்தல் தொழிலைக் குறிக்கும். மௌன விழா, முளையை விடுதல் முதலியவை மறைத்தலைக் குறிக்கும். தீர்த்தவாரி அருளலைக் குறிக்கும்.

1. கொடியேற்றம்: அந்தந்த திருக்கோயில்களில் ஆகம விதிகளுக்கேற்ப இடபம் (சிவபெருமான்), மூஷிகம் (விநாயகர்), சேவல் (முருகன்), கருடன் (மகாவிஷ்ணு), சிம்மம், (அம்பிகை), யானை (ஐயனர்) முதலிய வடிவங்கள் அமைக்கப்பெற்ற கொடிகளை கொடிமரத்தில் கயிறுகொண்டு மேலே ஏற்றுவது மரபு. இந்த கொடி அறத்தின் வடிவாகவும், ஆன்மாவின் வடிவாகவும், கொடிமரம் இறைவனின் வடிவாகவும், கயிறு பாசத்தின் வடிவாகவும் அமைந்துள்ளன. அறத்தையும் உயிர்களையும் மேல் நிலைக்கு உயர்த்துவதையே இக் கொடியேற்றம் உணர்த்துகிறது. 'திரிமலத்தே குளிக்கும் அருள்கூடும்படிக் கொடி கட்டினனே' (கொடிக்கவி - உமாபதிசிவம்).

கற்பக விருட்சம்: கற்பகதரு தேவலோகத்திலுள்ள ஐந்துமரங்களில் ஒன்று. இந்த வாகனம் படைப்புத் தொழிலையும் குறிக்கும். மரத்தின் கிளைகள் இலைகள் எண்ணிறந்த ஜீவன்களையும், மரமும் மரத்தின் வேரிலமைத்த பீடமும் உமாமகேசுவரர் உருவமாக விளங்கும். மரத்தின் பழங்களின் உள்ளிருக்கும் விதைகள் இறைவன் உயிர்க்குயிராய்க் கலந்து நிற்கும் தத்துவத்தை விளக்கும். அடியார்களின் வேண்டுகோட்களை அருள்வான் என்ற குறிப்பில் இம் மரத்தடியில் அமர்ந்து காட்சியளிப்பார். "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்", "கருத்தறிந்து முடிப்பான் தன்னை", "கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தை", "நிலையிலா நெஞ்சந்தன்னுள் நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற கற்பகமே" என்பவை அப்பர் அருள்வாக்குள். "பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானை" என்பது சுந்தரர் தேவாரம். "வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ" என்பது திருவாசகம். "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணைமா கடலை" என்பது திருவிசைப்பா.

2. சூரிய சந்திர பிரபைகள்: இதை விருத்திக் கிரமதிதிக்கோலம் என்பர். இறைவன் சூரிய சந்திர பிரகாசமாய் ஞானக்கினிமயமாய் விளங்கி, பகலில் பிரகாசிக்கின்ற சூரியனுகவும், இரவில் தண்ணளி பரப்புகின்ற சந்திரனுகவும் விளங்கி ஆன்மாக்கட்குரிய சுகபோகங்களையும் அளித்து நிற்கும் தன்மையை உணர்த்தும்.

3. சென்னை காபலீசுவரர் கோயிலில் காலையில் அதிகார நந்தியின்மீதும், இரவில் பூதவாகனத்தின் மீதும் பெருமான் எழுந்தருளுவார். இவைகளை விருத்திக் கிரம சங்காரகோலம் என்பர். அதிகார நந்தி "அங்கணன் கயிலைகாக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு நம் குருமரபிற்கெல்லாம் முதல் குருநாதனுகி" என்றும், 'செம்பொருள் ஆகமத்திறன் தெரித்து நம்பவம் அறுத்த நம்நந்தி வானவன்' என்றும் கூறப்பட்டிருக்கிறது. 'ஆதியிலும் திருநந்தி அனுதியிலும் திருநந்தி, வாதனையால் விளையாட வருமிடமும் திருநந்தி, தீதிலாத் திருநந்தி திகழ்பெருமைத் திசைமுகனுர், ஓதிடினும் அவர்க்கு வாய் ஒருகோடி போதாவே' என்றும் கூறப்பட்டிருக்கிறது.

"வந்திறையடியிற் றாழும்
வானவர் மகுடகோடி
பந்தியின் மணிகள்சிந்த
வேத்திரப் படையாற்றுக்கி
அந்தியும் பகலுந் தொண்டர்
அலகிடுங் குப்பையாக்கு
நந்தியெம்ப பெருமான் பாத
நகைமலர் முடிமேல்வைப்பாம்"

அதிகாரநந்தி ஆன்மாக்களுள் சிறந்த சிவசாருப பதவிபெற்ற விஞ்ஞானகலருள் முதல்வர். பூத கணங்கள் உடல்களின் நீங்கிய உயிர்களைக் கொண்டு போகும் தொழிலை உடையன. நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் ஐம்பூதங்களாகவும்,

ஐம்பூதங்களின் பரிணமை உருவான உடலை இயக்கு கின்ற இயவுள் சிவபெருமான் என்பதை உணர்த் தும்.

'இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய்
எரியும் காற்றுமாகி
அருநிலையதிங்களாய் ஞாயிருகி ஆகாசமாய்
அட்டமூர்த்தியாகி'

என்பது அப்பர் தேவாரம். மற்ற கோயில்களில் பூதவாகனத்தில் இறைவன் காட்சியளிப்பார்.

4. கைலாசவாகனம்: சிவபெருமானுக்கு உகந்த இடம் திருக்கயிலாயம். மனோவாக்குக் காயங்களுக்கு அப்பாற்பட்ட இறைநிலையைக் குறிக்கும்.

"அண்ணல் வீற்றிருக்கப் பெற்ற தாதலின்
நண்ணும் மூன்றுலகும் நான்மறைகளும்
எண்ணில் மாதவஞ் செய்யவந்தெய்திய
புண்ணியம் திரண்டுள்ளது போல்வது"

—*பெரியபுராணம்.*

அப்பர் சுவாமிகள் "கயிலாயத்துச்சி யுள்ளான்" "கயிலை மலையானே போற்றி போற்றி" என்றும், திருஞானசம்பந்த சுவாமிகள் 'இடியகுரலால் இரி யும் மடங்கல் தொடங்கும் முனைச்சாரல், கடிய விடைமேல் கொடியொன்றுடையார் கயிலை மலை யாரே" என்றும், சுந்தர மூர்த்திகள் "நொடித் தான் மலை உத்தமனே" என்றும் கூறியிருக்கின்ற னர். இத்தகைய பெருமை வாய்ந்த கயிலை மலையை ஆணவமே உருவான இராவணன் தூக்க முயன்றான். உமாதேவி அஞ்சவே சிவபெருமான் தனது பாதத்தின் மெல்விரலால் அழுத்த அதன் கீழகப்பட்டு, நெடுங்காலம் வருந்தி, அழுதரற்றிப் பின்னர் ஒரு தலையையும் நரம்புகளையும் வீணையாகக் கொண்டு மீட்டி சாமகானம் பாடி, இறைவனை மகிழ்வித்து வரமும் வாளும் பெற்றான்.

"கனகமா வயிரமுந்து
மாமணிக் கயிலைகண்டு
உனகனாய் அரக்கன் ஓடி எடுத்தலும்
உமையாள் அஞ்ச
அனகனாய் நின்ற ஈசன் ஊன்றலும்
அலறி வீழ்ந்தான்
மனகனாய் ஊன்றினனேன் மறித்து
நோக்கில்லை யன்றே"

என்பதும்,

"விலங்க லெடுத்துகந்த வெற்றியானை
விறலழித்து மெய்ந்நரம்பால் கீதங்கேட்டன்று
இலங்கு சுடர்வாள் கொடுத்தார்போலும்,
இன்னம்பர்த்தான் தோன்றி யீசனாரே"

என்பதும் அப்பர் தேவாரம்.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒவ் வொரு பதிகத்திலும் இறைவன் இராவணனுக்கும் அருள்செய்த கருணைத் திறத்தைக் கூறியுள்ளனர். கொடியவராயினும் தவறை யுணர்ந்து இறைவனை அன்புடன் வழிபட்டால் நலம் பெறுவர் என்பது குறிப்பு. கயிலாயவாகனங்களில் அடியில் இராவ ணனையும் காணலாம்.

5. விருஷப வாகனம்: கடையூழி காலத்தில் எல்லாப் பொருள்களும் அழிய தருமதேவதை தான் அழியாதிருக்கும் பொருட்டு தூயவெள்ளை நிற முடைய காளை வடிவத்தில் பெருமானுடைய வாகனமாக அமைந்ததைக்காட்டும். இதன் நான்கு கால்களும் நான்கு அந்தக் கரணங்கள் என்றும், சமம், விசாரம், சந்தோஷம், சங்கம் என்னும் ஆத்ம குணங்கள் என்றும் கூறுவர். இந்த விருஷபம் ஆணவ மலத்தை யழித்து அருளொடு கூடிய ஞானப்பிழம்பாகிய இறைவனைப் பணிவுடன் ஏற்று நிற்கின்றதையும் குறிக்கும். இந்த வெள்ளேறு அருள்பெற்ற ஆன்மாவிற்கும் அறிகுறியாகும். பெரிய புராணத்தில் அடியார்களுக்கு அருள்புரியும் போதெல்லாம் அம்மையுடன் இடபாரூடராய்க் காட்சியளித்ததாகக் கூறப்படுவதைக் காணலாம்.

"தோடுடையசெவியன் விடையேறியோர்
தூ வெண்மதிசூடி"

—*சம்பந்தர்.*

"மட்டுவார்குழலாளொடு மால்விடை
இட்டமா உகந்தேறும் இறைவனார்
கட்டுநீத்தவர்க்கு இன்னருளே செயும்
சிட்டர்போலும் சிராப்பள்ளிச் செல்வரே"

"நடைமலிந்த விடையோடு
கொடியும் தோன்றும்"

"அயிராவணமேரு தானேறேறி
அமரர் நாடாளாதே"

—*அப்பர்.*

"மாட்டூர் அறவா மறவாதுன்னைப்
பாடப் பணியாயே"

—*சுந்தரர்.*

"ஏறலால் ஏறமற்றில்லையே"

—*காரைக்காலம்மையார்.*

6. யானை வாகனம்: சிருட்டிலயக்கிரமத்தில் விருட்சம்போல் விரிந்த பாகுபடுகள் எல்லாம் ஒடுங்கி ஒரே பிண்டமாக பருமனான உடம்பும் கால்களும் உடைய யானையைப் போல ஒடுங்கு வதைக் குறிக்கும். யானை வடிவத்தை யொத்த ஆன்ம ஞானத்தில் தோற்ற, சூக்கும, சிவ, மாய ஞானங்கள் உதயமாய் தும்பிக்கை போன்ற சுழு முனாடியில் அமைந்து நிற்கும் என்பர். யானையை ஆணவத்தின் சின்னமாகவும், ஐம்புலன்களின்

சின்னமாகவும் கூறுவர். இறைவன் யானைமீது அமர்ந்து வருவது ஆணவத்தையும் புலன்களையும் அருள் என்னும் அங்குசத்தால் அடக்குவதைக் குறிக்கும். தாருகாவனத்து முனிவர்கள் ஏவிய யானைத் தோலை உரித்துப் போர்த்த வரலாற்றையும் நினைவூட்டும்.

"இந்திரியக் குஞ்சரத்தை
ஞான இருங்கயிற்றால்
சிந்தனைத் தூண்பூட்டிச்
சேர்த்தியே—பந்திப்பர்
இம்மைப் புகழும்
இனிச்செல் கதிப்பயனும்
தம்மைத் தலைப்
படுத்துவார்" (அறநெறிச்சாரம்)

"உரன் என்னும் தோட்டியான்
ஓரைந்துங் காப்பான்
வரன் என்னும்
வைப்பிற்கோர் வித்து" (திருக்குறள்)

7. திருக்கல்யாணம்: சிவமாகிய பரம் பொருள் சத்தியுடன் சேர்ந்தே செயல்படுகிறது. "சிவமெனும் பொருளும் ஆதி சத்தியொடுசேரின் எத்தொழிலும் வல்லதாம், இவன் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிதரிது" என்பர். அருள்வடிவாகிய சக்தி, அறிவு மயமாகிய சிவத்தோடு சேர்ந்து தொழிற்படுதலைக்காட்டுதற்கே இத்திருவிழா நடைபெறுகிறது. நமக்கு ஒருவருடம் தேவர்களுக்கு ஒருநாள் எனவே இத்திருக் கல்யாணம் நித்திய கல்யாணமாகவே அமைகிறது. பவன் பிரமச்சாரி, பால்மொழி கன்னியென்று சாத்திரம் கூறும். திருக்கோயில்களில் நடைபெறும் திருக்கல்யாணம் நம்போன்ற மக்கள் செய்துகொள்ளும் திருமணம் போலல்ல என்பதை நன்குணரவேண்டும். இறைவன் திருக்கல்யாணச் சடங்குகளில் சொல்லப்படும் மந்திரம், "ஜகத்ஜீவன ஹேதுனு" (உலகம் உய்யும் பொருட்டு) என்பது. நம்முடைய திருமணங்களில் சொல்லப்படும் மந்திரம் 'மம ஜீவனஹேதுனு' (நாம் வாழும் பொருட்டு) என்பதாகும். அப்பர் சுவாமிகள் திருவையாற்றில் கண்ட திருக்கயிலாயக்காட்சியில் எல்லா உயிர்களையும் சிவசக்திமயமாகவே கண்டார். 'காதன்மடப்பிடியோடும் களிறுவருவன கண்டேன்', 'கோழிப்பெடையோடுங்கூடி குளிர்ந்து வருவன கண்டேன்', "இளமணநாகு தழுவி ஏறுவருவன கண்டேன்' என எல்லாம் சிவசத்திமயமாகவே அவருக்கு காட்சியளித்தன.

போகியாயிருந்து உயிர்க்குப்
போகத்தைப்புரிதல் ஓரார்
யோகியாய் யோகமுத்திஉதவுதல்
அதுவும் ஓரார்

என்பது சிவஞான சித்தியார். சிவமும் சக்தியும் திருக்கல்யாணத்தில் சடங்குகளை மேற்கொள்வது உலகில் உள்ள மக்கள் ஒரு கட்டுப்பாடுடன், ஒழுக்கத்துடனும் மணம்செய்துகொண்டு இல்லறம் நடாத்தி மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காகவே என்பதைத் திருவாசகத்தில் மாணிக்கவாசகர் நன்கு விளக்கியுள்ளார்.

தென்பால் உகந்தாடும்
தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான்
பெரும்பித்தன், காண் ஏடி!
பெண்பால் உகந்திலனேல்,
பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி
வீடுவர்காண் சாழலோ!
மலைஅரையன் பொற்பாவை
வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான்
என்னுமது என்ஏடி!
உலகறியத் தீவேளாது
ஒழிந்தனனேல் ஏல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்கள்எல்லாம்
கலங்கிடுங்காண் சாழலோ!

உயிர்கள் எல்லாம் இறைவன் முன்னிலையில் பெண்களேயாவர். இறைவன் ஒருவனே ஏக நாயகன். ஒரு கொடி கொழுகொம்பைத் தழுவி நிற்பதுபோல் உயிர்களாகிய கொடிகள் இறைவனாகிய கொழுகொம்பைப்பற்றி நிற்கவேண்டுமென் பதையும் அவ்வுயிர்களை ஏற்றுக்கொண்டு இறைவன் திருவருள் புரிவான் என்பதைத் திருமணச்சடங்கு குறிக்கும் என்பர்.

"காவிக்கமலக் கழலுடன்
சேர்த்தெனைக் காத்தருள்வாய்
தூவிக்குல மயில்வாகனனே,
துணைஏது மின்றித்
தாவிப்படரக் கொழுகொம்பிலாத
தனிக்கொடிபோல்,
பாவித் தனிமனம்
தள்ளாடிவாடிப் பதைக்கின்றதே."

—(*கந்தர் அலங்காரம்*)

"கொம்பரில்லாக் கொடிபோல்
அலமந்தனன் கோமளமே
வெம்புகின்றேனை விடுதிகண்டாய்.

—(திருவாசகம்)

8. குதிரை வாகனம்: இது லயக்கிரம சங்கார கோலத்தைக் குறிக்கும் என்பர். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு கால்களையும், ஞானகாண்டம் கர்மகாண்டம் என்னும் காது

களையும், பரஞானம் அபரஞானம் என்ற கண்களை களையும், விதியாகிய முகத்தையும், விலக்காகிய வாலையும், ஆகமங்களாகிய அணிகளையும், மந்திரங் களாகிய சதங்கை, கிண்கிணி முதலியவைகளையும், பிரணவமான கடிவாளத்தையும் உடைய வேதத் தையே குதிரை வாகனமாகக் கொண்டான் இறை வன் என்பதைக்குறிக்கும். விலங்குகளில் வேக முடையது குதிரை. யந்திரங்களின் வேகத்தைக் குறிக்கவும் குதிரை வேகத்தோடு (Horse power) ஒப்பிடுவது மரபு. மனோவேகத்தையும் குதிரை வேகம் குறிக்கும். குதிரையின் வேகத்தை யடக் குவதுபோல் மனோவேகத்தையும் ஞானமாகிய கடிவாளத்தையும், இறையருளாகிய கடிவாளக் கயிறையும் கொண்டு அடக்கவேண்டும். 'வேகங் கெடுத்தாண்ட வேந்தனடிவெல்க' என்பது திருவாசகம்.

9, திருத்தேர்: தேரோட்டம் திரிபுரதகனத் தைக் குறிக்கும் என்பர். திரிபுரதகனம் இறைவன் அருளால் மும்மலங்களையும் சுட்டெரிக்கவேண்டும் என்பதைக் குறிக்கும்.

" அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மலகாரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே "

*(திருமூலர்)*

திரிபுரதகனத்தில் முப்புரம் எரித்தபோது தேவர்கள் தேரின் பல அங்கங்களாக நின்று தொண்டு புரிந்தனர். பூமி தேராகவும், சூரியசந்தி ரர்கள் சக்கரங்களாகவும், வேதங்கள் குதிரைகளா கவும், மேருவில்லாகவும், ஆதிசேடன் நாணகவும் திருமால் அம்பாகவும் பிரமன் சாரதியாகவும் அமைந்தன.

" வரியரவு நாணக்கோத்து நினையாதார்புரம்
எரிய வளைத்தமேருச் சிலையானை "

*—அப்பர்*

தேவர்கள் தங்கள் உதவியால் தான் சிவ பெருமான் போர்செய்யச் செல்வதாகக் கருதினர். சிவபெருமான் ஆயுதம் ஒன்றும் பயன்படுத்தாமலே தன் புன்சிரிப்பினலே திரிபுரங்களையும் எரித்துச் சாம்பலாக்கினர். எனினும் முப்புரத்தில் வாழ்ந்த மூவரும் அடிபணிந்தபோது காக்கப்பட்டனர். அவருள் இருவர் திருக்கோயில்களில் திருவாயில் இருபாலர்களாகவும், மூன்றுமவர் இறைவன் திரு நடத்தில் முழவுகொட்டுபவனகவும் ஏற்றுக்கொள் ளப்பெற்றனர். தேர்வடிவம் விசுவ ரூபத்தைக் காட்டுவதாகவும் கூறுவர்.

10 நடராஜர் :—திருவிழாக்களில் படைத் தல் முதலிய ஐந்தொழில்களைக் குறிக்கும் நடராஜப் பெருமான் எழுந்தருளல். இவர் திருவுருவத்தில் படைத்தல் உடுக்கையிலும், காத்தல் அபயகரத் திலும், அழித்தல் கனலேந்திய கரத்திலும், மறைத் தல் ஊன்றிய பாதத்திலும், அருளல் எடுத்த பொற்பாதத்திலும் காணலாம்.

" தோற்றம் துடியதனில்
தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே
சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில்
உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு "

*—(உண்மை விளக்கம்)*

கடையூழிக்காலத்தில் ஏற்படும் பிரளயத்தில் பிருதிவியொடுங்கும். ஊழித்தீயில் பிரளயம் ஒடுங்கும். ஊழிக்காற்றில் ஊழித்தீ ஒடுங்கும். அக் காற்று ஆகாயத்தில் ஒடுங்கும். அக்காற்று மாயை யிலும் மாயை பராசத்தியிலும், பராசக்தி சிவத்துள் ளும் ஒடுங்க, சிவபெருமான் ஒருவரே ஏகமாய் நின்று திருநடனம் செய்வர்.

" மாநிலம் புனலிலொளிக்கும்மப்புனல்
போய்வன்னியிற் கரக்குமவ்வன்னி
யூனமில்லனிலிற் சேருமவ்வனிலிபோயுயர்
விசும்படையு மவ்விசும்பாங்
கேனையவாங்காரத்திடை யொளிக்
குமாங்கதுமகா னிடையெய்து
மானவம்மகான் போயுயர்பிர
கிருதிதன்னிடையி னிதினிமரும்."

*—(கூர்ம புராணம்)*

" தத்துவமெண்மூன்றுஞ் சென்றான்
மதத்துவத் தொடுங்கும்
வித்தையி லொடுங்குமாறுஞ்
சிவத்தினி லொடுங்குமூன்று
நித்த தத்துவமிம்மூன்று
மென்பர் களிரண்டுநின்ற
சுத்தமாஞ் சிவத்தொடுங்
தோற்றமுமிது போலாகும்."

*—(சிவஞான சித்தியார்)*

11. தீர்த்தவாரி :—இது அனுக்கிரகம் அல் லது அருளலைக்குறிக்கும். உற்சவ மூர்த்தி திருக் குளத்திற்கோ, நதிதீரத்திற்கோ எழுந்தருளி அஸ் திரதேவரை தீர்த்த மாட்டுவது தீர்த்தவாரி எனப் படும். தீர்த்தவாரியின்போது மக்கள் எல்லோரும் நீராடி புறத்தும் அகத்தும் தூய்மையடையச் செய் வதே திருவிழாவின் சிறப்புப்பகுதியாகும். 'தீர்த்தன் காண்', 'மாதேவா மாதேவா என்று வாழ்த்தி நீராண்ட புரோதாயம் ஆடப்பெற்றோம்' என்பன அப்பர் திருவாக்குகள்.

12. தெப்ப விழா : அழகாய் அலங்கரிக்கப் பட்ட தெப்பத்தில் சிவபெருமான் தேவியுடன் எழுந்தருளி, திருக்குளத்தின் நடுமண்டபத்தைச் சுற்றிவரும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகக் காண்போர் உளங்குளிர நடைபெறும். பிறவிக் கடலில் அழுந்தியுழலும் உயிர்களை, அருளாகிய தெப்பத்திலேற்றி முத்தியாகிய கரையில் சிவபெருமான் சேர்க்கிருன் என்று கூறுவர். பிரளய காலத்தில் அடியார்களைக் காப்பதற்குப் பெருமான் தோணியப்பராகக் காட்சியளிப்பதாகவும் கொள்ளலாம்.

''உருமாறிப் பிறப்பென்னும் கடல்வீழ்ந்து
கரைகாணுது உழலும் மாக்கள்
கருமாறி அருட் தெப்பம்
தனிலேற்றி முத்தியதாம் கரையிலேற்றும்
பெருமான்தாம் என்பதனை உலகுணர்த்த
ஆண்டுதொறும் பிறங்கும் தெப்பத்
திருநாளைக் கொண்டசெயல் கண்டுணர்ந்து
வாழ்மின்கள் சிறந்து நாளும்.''

—(பழம்பாடல்)

'கத்தித் திரிபிறவிச்
சாகரத்துள் ஆழாமே
பத்தித் தனித்தெப்பம்
பார்வாழாத் தந்தபிரான் ''
''பிறவிஎனும் பொல்லாப்
பெருங் கடலை நீந்தத்
துறவியெனும் தோற்றோணி
கண்டீர்—நிறை யுலகில்
பொன்மாலை மார்பன்
புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.''

விருட்சம், யானை, குதிரை, நந்தி முதலிய வாகனங்களில் இறைவன் எழுந்தருளுவது நிலத்தில் வாழும் உயிர்களுக்கு அருள்செய்யும் பொருட்டும், அன்னம், கிளி, மயில், கருடன் முதலியவற்றில் எழுந்தருளுவது பறவைகளுக்கு அருளும் பொருட்டும், தெப்பத்தில் எழுந்தருளுவது நீர்வாழ் உயிர்க்களுக்கு அருள்செய்யும்பொருட்டேயென்றும் கூறுவதுண்டு.

13. பிட்சாடனர்: பிட்சாடனக்கோலம் தாருகாவனத்திலுள்ள முனிவர்கள் அகங்காரத்தில் அழுந்தி மமதை கொண்டிருந்தபோது அவர்களைத் தடுத்தாட்கொள்ளும் பொருட்டு சிவபெருமான் பிட்சாடனவடிவத்துடன் சென்று முனிவர்களின் பத்தினிகளை மயக்கியும், முனிவர்கள் யாகங்களின் மூலம் ஏவிய மான், யானை, நாகம், புலி, பசு முதலிய ஐந்துக்களை அடக்கியும் ஒடுக்கியும் திருவிளையாடல் புரிந்தார். தாருகாவனத்து முனிவரின் மமதையை அடக்குவதற்கு மகாவிஷ்ணு மோகினி உருவம் எடுத்து அவர்கள் தவபலத்தை இழக்கச் செய்தருள்புரிந்தார். பிட்சாடனர் வடிவத்தில் மானுக்குப் புல் அளிக்கும் கோலம் இறைவன் ஆன்மாக்களுக்கு ஞானேபதேசம் செய்யும் தத்துவத்தைக்குறிக்கும். பெருமான் கேட்கும் பிட்சை அடியார்களுடைய அன்பு, தியாகம், தொண்டு முதலியவைகளே.

காரார் கொன்றைக்கண்ணி சூடிக்
கபாலங் கையேந்திக் கணங்கள் பாட
ஊராரிடும் பிச்சை கொண்டுழலும்
உத்தமராய் நின்ற ஒருவனர்

—அப்பர்

சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்
தொழும்பையு மீசற்கென்று
விரிப்பிப்ப னென்னை விடுதிகண்
டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் றேலுடைப் பிச்சனஞ்
சூண்பிச்ச னூர்ச் சுடுகாட்
டெரிப்பிச்ச னென் றேசுவனே

—மாணிக்கவாசகர்

அம்பரமாம் புள்ளித்தோல்
ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமா னுண்டசதுர்
எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமானே துடுத்தங்
கேதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத்
தன்மையன் காண் சாழலோ.

—மாணிக்கவாசகர்

சில திருக்கோயில்களில் பந்தம் பறி அல்லது திருவூடல் உற்சவம் நடைபெறுகிறது. சிவபெருமானுக்கும் அம்மைக்கும் பிணக்கு ஏற்பட்டதாகவும் அதனை ஆலாலசுந்தரர் மூலம் தீர்த்துவைப்பதாகவும் நடக்கும் இவ்வுற்சவத்தில் சுந்தரர், சிவபெருமான் அருட்திறங்களை விளக்குவதாகவும் அமைந்துள்ளது. அகத்துறையில் ஊடல் என்பது முக்கியமான பகுதி. ஊடல் உற்சவம் அனுக்கிரகம் அல்லது அருளலைக்குறிக்கும். ''கலவி வித்தகிஊடி', என்று திருவிளையாடற்புராணம் குறிக்கும். 'ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்'. ஞானமே சொரூபமாக உடைய ஞான சக்தியாகி உமாதேவியார் இறைவன் வழிநிற்பர். சக்தியும் சிவனும் கூடிஞல் உயிர்களுக்கு இன்பம் உண்டாகும். இறைவனே படைப்புக்காரணமாகிற சக்தியாகிருன். அவன் உயிர்களோடு கூடும் போது பசுபதியாக விளங்குகிருன். ஊடல் காரணமாக அன்பு பெருகும் என்று அகப்பொருள் நூல்கள்

கூறும். ஊடலின்பயன் கூடிப் பேரின்பம் பெறுவதேயாகும். ஊடுதல் என்பது ஒருவரை ஒருவர் ஊடுருவி உண்மையறிந்து கொள்ளுதல். இறைவனுடைய வடிவமே அர்த்தநாரீசுவரவடிவம். ஆண்மையும் பெண்மையும் ஓர் உருவத்திலேயே அடங்கியுள்ளன. 'அரியலால் தேவியில்லை' என்ற அப்பர் அருள் வாக்கின்படி உமாதேவியாரும் திருமாலும் இறைவனுக்குச் சக்திகளேயாவர். இதையே அகத்தில் சிவசக்தியாகவும், புறத்தில் மாயாசக்தி அல்லது திரோதான சக்தியாகவும் கூறுவர். சிவபெருமான் தமது திருமுடியில் கங்கையை யணிந்திருப்பதும், தாருகாவனத்து முனிவர் ஆணவத்தை அடக்கும் பொருட்டு பிட்சாடனர் கோலத்தொடு சென்றபோது திருமாலாம் சக்தி மோகினி உருவம் கொண்ட திருவிளையாடலும், உமாதேவியாரின் பிணக்குக்குக்காரணம் ஆயின. இந்த இரண்டு செயல்களும் மக்கள் உய்யும்பொருட்டே இறைவனால் அருளப்பெற்றவை என்று காட்டுவதற்காகவே இந்த திருவூடல் விழா ஏற்பட்டதாகத் தெரிகிறது. இந்த விழாவில் இறைவன் சுந்தரர்க்காகப் பரவையாரின் ஊடலைத் தீர்த்த வரலாற்றைப் புகுத்துவது பொருத்தமாகத் தெரியவில்லை.

சூடினார் கங்கையாளைச்
 சூடியதுழனி கேட்டங்கு
ஊடினாள் நங்கையாளும்
 ஊடலை ஒழிக்க வேண்டி
பாடினார் சாமவேதம்
 பாடிய பாணியாலே
ஆடினார் கடிலவேலி
 அதிகை வீரட்டனாரே

என்பது அப்பர் தேவாரம்.

அந்தி திரிந்தடி யாரும்
 நீரும் அகந்தோறும்
சந்திகள் தோரும் பலிக்குச்
 செல்வது தக்கதே
மந்தி கடுவனுக்குண் பழம்
 நாடி மலைப்புறம்
முந்தி அடிதொழ
 நின்றசீர் முதுகுன்றரே. —சுந்தரர்.

உற்சவ காலங்களில் காலையிலும் இரவிலும் வெவ்வேறு வாகனங்கள் உபயோகிப்பதுமுண்டு. சென்னை கபாலீசுவரர் கோயில் நான்காம் திருநாள் காலையில் புருஷாமிருக வாகனத்திலும் இரவில் நாக வாகனத்திலும் வருவதுண்டு. நஞ்சு, மாணிக்கம், படம் ஆகிய மூன்றையும் மறைத்து வேண்டும் போது வெளிப்படுத்தும் தன்மையுடையது நாகம். அதுவும் புற்றில் மறைந்திருந்து வேண்டும்போது தான் வெளிவரும். திரோபவம் அல்லது மறைத்தல் தொழிலைக் குறிப்பதாகக் கொள்ளலாம். பாம்பின் வடிவம் குண்டலினி சத்தி, சுழுமுனை நாடி முதலியவற்றையும் குறிக்கும் என்பர். புருஷாமிருகம் பீமனைவிட ஆற்றலுடையது என்பது வரலாறு. இறைவனுடைய ஆற்றல் அளவிடற்கரியது என்பதை இவ்வாகனம் காட்டும். மற்றைய நாட்களில் இறைவன் காலையில் பல்லக்கில் எழுந்தருளுவது உண்டு. பல்லக்கின் மேல் முகட்டினைப் போல விளங்கும் சிவரூபம் என்பதனையும், பல்லக்கின் ஆவரணத்திரைகளாலும் குஞ்சங்களாலும் மறைத்தல் தொழில் குறிக்கப்படும் என்பர். சில கோயில்களில் காமதேனு வாகனம், அன்னவாகனம், கிளிவாகனம் முதலிய வாகனங்களில் அம்பிகை எழுந்தருளுவது உண்டு. ஒவ்வொரு நாளும் விநாயகர் மூஷிகவாகனத்திலும், முருகன் மயில்வாகனத்திலும் சண்டேசுரர், விருஷப வாகனம் அல்லது கேடயத்திலும் பஞ்சமூர்த்திகளாக எழுந்தருளுவர். சிவபெருமான் எப்போதும் சந்திரசேகரர் உருவத்தில் அம்பிகையுடன் நின்ற கோலத்திலும், சோமாஸ்கந்தர் உருவத்தில் அம்பிகையுடன் வீற்றிருந்த திருக்கோலத்திலும், ஸ்கந்தர் நடுவில் இரண்டு புஷ்பங்களுடன் நின்ற கோலத்திலும் காட்சியளிப்பர்.

"ஏலவார் குழலிறைவிக்கும்
 எம்பிரான் தனக்கும்
பாலனாகிய குமரவேள்
 நடுவுறும் பான்மை
ஞாலு மேலறுமிரவொடு
 பகலுக்கு நடுவாய்
மாலையான தொன்றழிவின்றி
 வைகுமா றெக்கும்"

[தொடரும்]

## திருத்தம்

விகாரி—தை இதழில் 'ஆலய வழிபாட்டு முறை' என்ற தலைப்பில் தெற்குபார்த்த கோயில்கள் இருப்பதாகத் தெரியவில்லை என்று கண்டிருக்கிறது. திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோயிலுக்கு 12-2-60-ல் ஆணையாளர் சென்றபோது அந்த திருக்கோயில் மட்டும் தெற்கு நோக்கியிருப்பதை உணர்ந்தனர். இது ஆவுடையார் கோயிலாக இருப்பதாலும், இறைவன் குருந்த மரத்தடியில் தட்சணாமூர்த்தியாக குருவாய் வந்து தெற்கு நோக்கி யமர்ந்து மணிவாசகப் பெருமானுக்கு உபதேசித் தருளியதாலும் தெற்கு நோக்கியிருக்கின்றது.

சிதம்பரம் கோயில் தெற்கு நோக்கியிருப்பதாக சிலர் நினைக்கலாம். தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவ னாகிய நடராஜப் பெருமான் திருவுருவம் எல்லாக் கோயில்களிலும் தெற்கு நோக்கியிருக்கும். அதே போன்று தில்லைக் கோயில் சபாநாயகரும் தெற்குபார்க்க இருக்கிறார். ஆனால் அங்குள்ள மூலலிங்கமாகிய திருமூலட்ட நாதசுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியே இருக்கின்றது.

ஆசிரியர்.



திருமண்டங்குடியில் ஆணையர் பாசுரக்கல்வெட்டுகளைத் திறந்துவைத்தல்.

## செய்திகள்

தென்கரை, திருமூலநாதசுவாமி கோயிலில் 3-1-60-ல் அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ்., அவர்கள் தலைமையில் திருவெம்பாவை—திருப்பாவை மாநாடு நடைபெற்றது.

◆ ◆ ◆ ◆

சென்னை, 5-2-60-ல் ஏகாம்பரேசுவரர் கோயிலில் பெரியபுராண விரிவுரை விழாவை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் துவக்கி வைத்தார். கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ்செட்டியார் அவர்கள் ஒவ்வொரு வாரம் திங்கள், வெள்ளிக்கிழமைகளில் பெரிய புராண விரிவுரையை முறையாகச் செய்வார்கள்.

◆ ◆ ◆ ◆

திருநெல்லிக்காவல் : நெல்லிவனநாத சுவாமி கோயிலில் இலட்சார்ச்சனை விழா 12-2-60 முதல் மன்னார்குடி திரு. டி. எஸ். சுவாமிநாத உடையார், எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் ஆரம்பமாகி நடந்து வருகிறது.

◆ ◆ ◆ ◆

இராமேசுவரம், இராமநாதசுவாமி கோயிலில் 5-1-60—ல் திருப்பாவை-திருவெம்பாவை மாநாட்டை மதுரை அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. ஏ. சக்கரை, பி.ஏ.பி.எல். அவர்கள் துவக்கி வைத்தார்கள். திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ.பி.எல்., அவர்கள் 'சிவ விஷ்ணு' பற்றியும், திரு. ஐயம்பெருமாள்கோனர் அவர்கள் 'திருப்பாவை' பற்றியும் சொற்பொழிவாற்றினர்கள். திரு. டி. கே. பாலகிருஷ்ணய்யங்கார் இன்னிசை வழங்கினர். இராமேசுவரம் பஞ்சாயத்துக் குழுத்தலைவர் அவர்களும் இராமேசுவரம் போர்டு உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் அவர்களும் விழாவில் கலந்துகொண்டார்கள். திருப்பாவை திருவெம்பாவைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குத் துணை ஆணையர் பரிசுகள் வழங்கினர்.



உய்யக்கொண்டான் மலை—கோயிலும் குளமும்.

# உய்யக்கொண்டான்மலை

## (திருக்கற்குடி)

நீரக லந்தரு சென்னி நீடிய
    மத்தமும் வைத்துத்
தாரகை யின்னொளி சூழ்ந்த
    தண்மதி சூடிய சைவர்
போரக லந்தரு வேடர் புனத்திடை
    யிட்ட விறகில்
காரகி லின்புகை விம்முங் கற்குடி
    மாமலை யாரே

—திருஞானசம்பந்தர்.

பெண்ணவனை யாணவனைப் பேடா னுனைப்
    பிறப்பிலியை யிறப்பிலியைப் பேரா வாணி

**விண்ணவனை விண்ணவர்க்கு மேலா னானை**
**வேதியனை வேதத்தின் கீதம் பாடும்**
**பண்ணவனைப் பண்ணில்வரு பயனு னானைப்**
**பாரவனைப் பாரில்வா ழுயிர்கட் கெல்லாம்**
**கண்ணவனைக் கற்குடியில் விழுமி யானைக்**
**கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே.**

—திருநாவுக்கரசர்.

**செய்யார் மேனியனே**
**திருநீல மிடற்றினனே**
**மையார் கண்ணிபங்கா**
**மதயானை உரித்தவனே**
**கையார் சூலத்தினுய்**
**திருக்கற்குடி மன்னிநின்ற**
**ஐயா எம்பெருமா**
**னடியேனையு மஞ்சலென்னே**

—சுந்தரர்.

உய்யக்கொண்டான் மலை என்று இப்போது வழங்கும் ஊரே திருக்கற்குடி என்னும் பாடல்பெற்ற சிவத்தலம். இது திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே மூன்று கல் தொலைவிலுள்ளது. இறைவன் உயிர்களை உய்யக் கொள்வதற்காக எழுந்தருளினமையால் உய்யக் கொண்டான் திருமலை என்ற பெயர் ஏற்பட்டதென்பர். கற்பாறைகள் சூழ்ந்த ஒரு குன்றின்மேல் கோயில் இருப்பதால் திருக்கற்குடி என்ற பெயர் உண்டாயிற்று.

திருக்கோயில் சுமார் 30 அடி உயரமுள்ள பாறையின்மேல் இருக்கிறது. 64 படிகள் ஏறி மேல் அடையவேண்டும். குன்றைச் சுற்றி கோட்டைபோல மதில் இருக்கிறது. திருவீதி உள்பட கோயிலுக்கு ஐந்து பிரகாரங்கள் உள்ளன. சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியிருக்கிறது. இரண்டு அம்பாள் சந்நிதிகள் ஒன்று மேற்கையும் ஒன்று கிழக்கையும் பார்க்க இருக்கின்றன. கோயிலுக்கு மூன்று வாயில்கள்; இரண்டு தென்புறமும், ஒன்று கீழ்புறமும் உள்ளன. ஒன்றில்தான் சிறுகோபுரம் இருக்கிறது.

இறைவன் திருப்பெயர்கள் உய்யக் கொண்ட நாயனார், உச்சிவ நாதர், கற்பக நாதர், முத்தீசர் என்பன. தேவியின் திருநாமம் அஞ்சனாட்சி. சுந்தரர் தேவாரத்தில் மையார்கண்ணி என்று குறிக்கிறார். இத்தலத்தின் தீர்த்தங்கள் பொன்னொளி ஓடை, சர்ப்பநதி, ஞானவாவி என்ற முத்திதீர்த்தம், எண்கோணக் கிணறு, நாற்கோணக் கிணறு முதலியன. தலவிருட்சம் வில்வம்.


மலைக்கோயிலுக்கு வெளியில் மேல்புறம் கரன் வழிபட்டதாகச் சொல்லப்படும் ஆளுடையார் கோயில் இருக்கிறது. முன்னால் அழகிய பெரிய நந்தி காணப்படுகிறது. மலைக் கோயில் மூன்றாம் பிரகாரத்தில் பிடாரி கோயிலும் இருக்கிறது.

இத் தலத்தை வழிபட்டுப் பேறு பெற்றோர் நாரதர், மார்க்கண்டேயர், உபமன்யு முனிவர், கரன், ஈழநாட்டரசன் முதலியோராவர். கோயிலில் இரண்டு காலபூஜைதான். பங்குனி மாதம் பெருவிழா நடைபெறுகிறது. கோயில் தருமபுர ஆதீன ஆட்சியில் இருந்து வருகிறது.

இத்தலத் திறைவன் பேரில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் மூன்று பதிகங்கள் பாடியுள்ளனர். திருஞானசம்பந்தர் ஒரு பாடலில் 'துன்பமொ டின்பமதெல்லாம் கடந்தவர் காதலில் வாழும் கற்குடி மாமலையாரே' என்று கூறுகிறார். திருநாவுக்கரசர் பாடிய பத்துத் திருத்தாண்டகச் செய்யுட்களிலும் 'கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே' என அருமைபட உரைக்கிறார். கல் வெட்டுக்களில் 'கற்குடி விழுமிய நாயனார்' என்று காணப்பெறுவது ஈண்டு குறிக்கத் தக்கது. சுந்தரர் ஒவ்வொரு பாடலிலும் 'திருக்கற்குடி மன்னி நின்ற அடிகேள்......அடியேனையும் அஞ்சலென்னே' என்று அருளுகிறார். அருணகிரிநாதர் இரண்டு திருப்புகழ்ப் பாடல்களை இயற்றியிருக்கிறார். "தமிழ்க்குக் கவிக்குப் புகழ்ச் செய்ப்பதிக்குத் திருக்கற்குடிக்குப் பெருமாளே" என்றும், "உனைச்சொற்றுதிக்கத் தக்க கருத்தைக் கொடுத்துச் சித்தி உடைக் கற்குடிக்குட் பத்தர் பெருமாளே" என்பவை சிந்தித்து மகிழற்பாலன. அருணகிரியாருக்கு முருகன் அருள்புரிந்த ஆதிவயலூர் என்னும் பதி இத்தலத்திற்கு மேற்கே நாலு கல் தொலைவிலுள்ளது. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், கற்குடி மாமலை மாலை என்ற நூலைப்பாடியுள்ளார்கள். அதில் ஒரு பாடல் வருமாறு :—

மானிடப் பிறவி வந்தது மனத்தால்
வாக்கினுற் காயத்தாற் பணிசெய்
தானிடத் தைந்து மாடுநின் னடிக்கீ
ழமரவென் றறிந்திலன் சிறியேன்
கூனுடைக் குலைய குறுங்கழித் தரம்பைக்
கொழுங்கனி யிழிந்ததேன் கருப்பங்
கானிடைப் பாயும் படுகர்சூழ் தெய்வக்
கற்குடி மாமலைப் பரனே.

இக்கோயிலில் பல தமிழ், கிரந்த கல் வெட்டுக்கள் இருக்கின்றன. இத்தலம், பாண்டி குலாசனி வளநாடு, தென்கரைக் கேரளாந்தகவள நாடு, இராஜமகேந்திர வளநாடு, இராஜகம்பிர வளநாடு என்று வெவ்வேறு காலங்களில் அழைக்கப்பட்ட பகுதியில் உறையூர்க் கூற்றத்தில் உள்ளது என்றும், இராஜசிரயசதுர்வேதி மங்கலம், நந்திவர்ம மங்கலம் என்றும் குறிக்கப் பெறுகிறது. நந்திவர்ம பல்லவன் காலத்திலேயே இக்கோயில் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. இராஜராஜன் I, உத்தம சோழன், குலோத்துங்க சோழன், இராஜேந்திர சோழன் I, வீரராஜேந்திரன், பராந்தகன் I, விஜயநகர மல்லிகார்ச்சுன மகாராயர் இவர்கள் காலத்திய கல்லெழுத்துக்கள் அவை. இறைவன் பெயரைக் கல்வெட்டுக்களில் கற்குடி விழுமியார், உய்யக்கொண்ட நாயனுர், திருக்கற்குடி ஆழ்வார், உய்யக்கொண்டான் திருமலைநாயனுர், திருக்கற்குடி விழுமியதேவர், திருக்கற்குடிப் பரமேசுவரர் என்று பலவகையாகக் குறிக்கப் பெற்றிருக்கிறது. விளக்கெரிக்க ஆடுகள், பூசைக்கு நிலம், பொன், செம்பியன் மாதேவியரால் நவரத்தினப் பொன்முடி, விழாச் செலவுக்குப் பொன், கோயிலுக்கு கிராமவரிப் பணம், முதலிய தானங்கள் செய்ததைக் குறிக்கின்றன. இரண்டு கிராமங்களின் வரிப் பணத்



உய்யக்கொண்டான் திருமலைக்கோயில்

தைக் கோயிலுக்கென ஒதுக்கப்பட்டது; கோயில் நிலங்களை அளந்து (Survey) கணக்கெடுத்தது; மலையடிவாரத்தில் துறவிகளுக்கு அமுதளிக்க ஏற்பாடு செய்தது; இறைவருக்குப் பொன் ஆபரணம் அளித்தது; இன்னோரன்ன பிற அரிய செய்திகளை அவை அறிவிக்கின்றன. 18-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரும், பிரஞ்சுகாரரும், மைசூர்க்காரரும் மாறிமாறித் தங்கியிருக்கும் கோட்டை அரணாகவும் இக்கோயில் பயன்பட்டிருக்கிறது. சர்ப்பநதி அல்லது குடமுருட்டி என்ற தீர்த்தம் கல்வெட்டுக்களில் உய்யக்கொண்டான், வைரமேகவாய்க்கால் என்னும் பெயர்களால் குறிக்கப்பட்டிருக்கின்றன.

எத்தி யலவன் இடந்தெடுத்த ஆராலைக்
கொத்தி முகந்தெடுத்த கூன்கொக்குச்—சுத்த
இழையேற்றம் போன்ருெளிரும் கற்குடியே கங்கை
உழையேற்ற செஞ்சடையா னூர்

—தனிப்பாடல்.

காஞ்சிபுரம்: ஞானப்பிரகாசர் மடாலயத்தில் சமயபாட வகுப்பு ஆரம்ப விழாவை சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் 25-2-60-ல் துவக்கி வைத்தார்கள். திரு. வீ. திருஞானசம்பந்த முதலியாரவர்கள் சமயபாட வகுப்பைத் தொடங்கி நடத்துவார்கள்.

திருநெல்வாயிலரத்துரை: தீர்த்தபுரீசுவரர் கோயிலில் பிரமோற்சவ விழா 2-3-60 முதல் தொடங்கி 12-3-50 வரை சிறப்பாக நடைபெறும்.

தாராபுரம்: வேணுகோபால் கிருஷ்ண ஆஞ்சநேயர் கோயிலில் திருவரங்கம் அர்ச்சகர் திரு. ஆர். இராகவபட்டர் அவர்களால் 18-2-60 ஆரம்பித்து 19-2-60 முடிய மகாசம்ப்ரோக்ஷணம் நடத்தப்பட்டது.



திருமண்டங்குடி அரங்கநாதப் பெருமாள் கோயிலும் குளமும்.

# திருப்பராய்த்துறை

கந்த மாமலர்க் கொன்றை கமழ்சடை
வந்தபூம் புனல் வைத்தவர்
பைந்தண் மாதவிசூழ்ந்த பராய்த்துறை
அந்தமில்ல அடிகளே

—திருஞானசம்பந்தர்.

போது தாதொடு கொண்டு புனைந்துடன்
தாத விழ்சடைச் சங்கரன் பாதத்துள்
வாதை தீர்க்கஎன் றேத்திப் பராய்த்துறைச்
சோதியானைத் தொழுதெழுந் துய்ம்மினே

—திருநாவுக்கரசர்.

ஆற்றங்கரையிலிருக்கும் சிலபதிகளுக்கு துறை என்று முடியும் பெயர் உண்டு. திருமயிலாடுதுறை, திருக்கடம்பந்துறை, திருநெல்வாயிலரத்துறை முதலிய அத்தகையவை. திருப்பராய்த்துறை என்னும் பாடல் பெற்ற சிவத்தலம் காவிரியின் தென்கரையில் அமைந்திருக்கிறது அது திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருக்கிறது. திருப்பராய்த்துறை என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து அரை கல் தொலைவிலிருக்கிறது. இந்த இடத்தில் செல்லும் காவிரியை அகண்ட (அகன்ற) காவிரி என்பர். இங்கே ஆறு மிகவும் அகலமாய் இருப்பதால் அப்பெயர் ஏற்பட்டது. அப்பர் சுவாமிகள், "பரப்புநீர் வருகாவிரித் தென்கரைத் திருப்பராய்த்துறை" என்றும் "பரக்குநீர்ப் பொன்னி மன்னு பராய்த்துறை" என்றும் கூறியிருப்பது நோக்கத் தக்கது.

காவிரிக்கரையில் கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கோயில் திருப்பணி செய்யப்பட்டது. ஒன்றன்பின் ஒன்ருய் இருவாயில்களை இரண்டு கோபுரங்கள் அழகு செய்கின்றன. சிவபெருமான் சந்நிதி கிழக்குநோக்கி யிருக்கிறது. மேற்குப் பிரகாரத்தில் விநாயகர், தண்டபாணி சந்நிதிகள் உள்ளன. அம்பாள் கோயில் கிழக்குநோக்கி யிருக்கிறது. முதற் கோபுரத்தின் பக்கத்தில் பரலியிலிருந்து கொண்டு வந்து எழுந்தருளச் செய்யப்பெற்ற பரலி விநாயகர் கோயில் இருக்கிறது.

இத்தலத்து இறைவன் திருப்பெயர்கள், திருப்பராய்த்துறைநாதர், தாருகவனேசுவரர் என்பன. தேவியின் திருநாமம் பொன்மயிலம்மை. இத்தலத்தின் தீர்த்தம் காவிரியே. தலவிருட்சம்—பராய்மரம். இது மேற்குப் பிரகாரத்தில் இருக்கிறது; பால் உள்ளது; தோல்நோயுள்ளவர்கள் அம்மரத்தின் இலையை அரைத்துப் பூசிக்கொண்டால் அது நீங்குமென்று சொல்லப்படுகிறது.

பராய் மரங்கள் நிறைந்த காடு தாருகாவனம். அங்கு தவம் செய்த முனிவர்கள் மமதை கொண்டனர். அதையடக்க எண்ணிய இறைவன் பிட்சாடனர் வேடங்கொண்டு முனிவர்களின் பத்தினிகளை மயக்கினர். முனிவர்கள் யாகம் செய்ய, அதில் தோன்றிய புலியை ஏவினர். சிவபெருமான் அதன் தோலை உரித்து ஆடையாக அணிந்து கொண்டார். மான் புறப்பட்டது; அதை இடக்கரத்தில் ஏந்தினர். பல அரவங்கள் தோன்றின; அவற்றை அணிகலன்களாகப் பூண்டனர். பூதப்படைகள் உண்டாயின; அவைகளைப் பூதகணங்களாகும்படி பணித்தனர். அவர்கள் ஏவிய யானையை உரித்துத் தோலைப் போர்த்திக் கொண்டனர். முனிவர்கள் வலியிழந்து குறையிரந்து மன்னிப்பு வேண்டினார்கள். இறைவன் அவர்களுக்குத் தாருகாவனேசுவரராகக் காட்சியளித்தார். இதுவே தலபுராண வரலாறு,

இப்பதியில் ஐப்பசி மாதத்தில் துலா முழுக்கு மிகவும் சிறப்பு வாய்ந்தது. காவிரியில் நீராடப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவர். வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறும்.

திருஞானசம்பந்தர் இத்தலத்திறைவன் மீது பதினெரு பாடல்களையுடைய பதிகம்

ஒன்று அருளியுள்ளார். "பைந்தண்மாதவி சூழ்ந்த பராய்த்துறை," "பறையும் சங்கும் ஒலிசெய் பராய்த்துறை" என்று கூறுகிறார். இறைவன் திருமேனியின் அழகை விதந்தோதுகிறார். **திருநாவுக்கரசர்** பத்துப் பாடல்களையுடைய ஒரு பதிகம் பாடியிருக்கின்றார். பராய்த்துறை மேவிய பரமனைப் போற்றி னால் 'நம்வினை யுள்ளனவீடுமே' என்றும், 'பொருக்க நும்வினை போயறுங் காண்மினே' என்றும் சொல்கிறார். **அருணகிரிநாதர்** ஒரு திருப்புகழ்ப் பாடலில் "மூதறிவுந்திய திட்சை செப்பிய ஞானம் விளங்கிய மூர்த்தியற்புத மூவர் இலங்கு பராய்த்துறைப் பதிப்பெருமாளே" என்று முடித்துக் கூறுகிறார். **மாணிக்கவாசகர்,** "பராய்த்துறை மேவிய பரனே போற்றி" என்றும், "தென்பராய்த்துறையாய் சிவலோகா" என்றும் அருளியிருக்கிறார். **பட்டினத்தார்** ஒரு பாடலில் "எண்ணற்கரிய பராய்த்துறை" என்றியம்பியிருக்கிறார்.

இக்கோயிலில் இருந்த பல கல்வெட்டுக்களுக்கு அரசாங்கத்தார் படியெடுத்து வைத்திருக்கின்றனர். அவை பழைய கோயிலில் இருந்தன. புதுத் திருப்பணியின்பின் அவை காணப்படவில்லை. கோயில் பிரகாரத்தில் இருக்கும் விநாயகர் கோயிற் சுவர்களில் மாத்திரம் சில கல்வெட்டுக்கள் இப்போதும் காணப்படுகின்றன. படியெடுத்து வைக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை இராஜகேசரிவர்மன் பரகேசரிவர்மன் இவர்கள் காலத்தவை என்று கூறுகின்றன. ஆராய்ச்சியாளர் அவை முதற்பராந்தக சோழனுக்கும் முதல் இராஜராஜ சோழனுக்கும் இடையே ஆட்சிசெய்த மன்னர்களின் காலத்தனவாக இருக்க வேண்டுமென்று கருதுகின்றனர். இராஜராஜன் I, இராஜேந்திரன் I, மாறவர்மன் சுந்தரபாண்டியன், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், விஜயநகர வீரகம்பண்ண உடையார் II, கிருஷ்ணதேவ மகாராயர், விசுவநாத நாயக்கர் திருமலை நாயக்கரய்யன் இவர்கள் காலத்தில் ஏற்பட்டவை அக்கல்லெழுத்துக்கள். பெரும்பாலானவை விளக்கெரிக்க நெல், நிலம், ஆடு, பொன் முதலியவைகள் வழங்கியதை அறிவிக்கின்றன. கல்வெட்டுக்களில் கேரளாந்தக வளநாட்டு, இராஜகம்பீர வளநாட்டு உறையூர்க் கூற்றத்திலுள்ள திருப்பராய்த்துறை என்று இவ்வூர் கூறப்படுகிறது. இறைவனைத் திருப்பராய்த்துறைப் பெருமானடிகள், திருப்பராய்த்துறை உடையநாயனுர், திருப்பராய்த்துறைத்தேவர் என்று குறிக்கின்றன. ஒரு கல்வெட்டில் சோழன் குமாரத்திக்கு நரிமுகம் தீர்த்த தம்பிரானுர், பசும்பொன்னம்மை என்ற பெயர்களும் காணப்படுகின்றன. இராஜராஜன் I மாசிமகத் திருவிழாவில் ஒன்பதுநாட் செலவுக்காக நிலம் விட்டது; இறைவன்பேருக்கு நிலம் விற்றுக்கொடுத்தது; பொன்னுல் திருமேகலை செய்தளித்தது; வணிகர்களுக்குக் குடியிருப்பு நிலம் வழங்கியது; திருமண்டபம் அமைத்தது; திருப்பள்ளித்தாமத்துக்கு (பூமாலைக்கு) அறுபது தாமரைப்பூக்கள் பறித்துக்கொண்டு வருபவர்களுக்கு நெல் கொடுத்தது; இன்னோரன்ன பிறஅரிய செய்திகளைத் தெரிவிக்கின்றன. ஒரு கல்வெட்டில் 'திருப்பராய்த்துறை மகாதேவர்க்கு புறத்து வேளார் மணவாட்டி நங்கை அல்லி அரசியார் திருவிளக்கினுக்கு கொடுத்தபொன் முப்பதின் கழஞ்சு. (அதை மூவர் முட்டாமல் எரிக்க ஒப்புக்கொண்டனர்). இத்தர்மம் இரட்சிப்பாருடைய ஸ்ரீபாதம் என்தலை மேலன" என்று காண்பது அறஞ்செய்வோரின் பணிவைக் காட்டுகிறது. மற்றொரு கல்வெட்டில் ஒருவன் பெயர் "விழித்துறங்கும் பெருமாள்" என்று கூறியிருப்பது "அறிதுயிலமர்ந்த பெருமாளை"க் குறிக்கும்.

மதுரை : கள்ளழகர் கோயிலில் கஜேந்திர மோட்ச விழாவும், தெப்போற்சவ விழாவும் 12-3-60, 13-3-60 இந்த நாட்களில் சிறப்பாக நடைபெறும்.

காஞ்சிபுரம் : காமாட்சி அம்மன் கோயிலில் பிரம்மோற்சவ விழா 1-3-60-ல் தொடங்கி 13-3-60 முடிய சிறப்பாக நடைபெறும்.

**திருப்புடைமருதூர் :** நாறும்பூநாதர் கோயிலில் 11-2-60-ல் தைப்பூச பெருந்திருவிழா சிறப்பாக நடைப்பெற்றது. அன்றைய தினம் தாம்பிரவர்ணி ஆற்றில் ஆயிரக்கணக்காண மக்கள் நீராடினுர்கள்.

# திருப்பாண்டிக் கொடுமுடி

தனைக்கணி மாமலர் கொண்டு
தான்தொழுவாரவர் தங்கள்
வினைப்பகை ஆயின தீர்க்கும்
விண்ணவர் விஞ்சையர் நெஞ்சில்
நினைத்தெழுவார் துயர்தீர்ப்பார்
நிரைவளை மங்கை நடுங்கப்
பனைக்கைப் பகட்டுரி போர்த்தார்
பாண்டிக் கொடுமுடியாரே

—திருஞானசம்பந்தர்.

சிட்டனைச் சிவனைச் செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை ஆலநிழலமர்
பட்டனைத் திருப்பாண்டிக் கொடுமுடி
நட்டனைத் தொழ நம்வினை நாசமே

—திருநாவுக்கரசர்.

மற்றுப்பற் றெனக்கின்றி
நின்திருப்பாதமே மனம்பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப்
பிறவாததன்மை வந்தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்
சீர்க்கறையூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே

—சுந்தரர்.

இயற்கையில் இறைவனைக் கண்டவர்கள் தமிழர்கள். இயற்கை ஒரு போர்வை; அதனுள் ளுறை கடவுள் என்பதையும் உணர்ந்தவர்கள். "ஏரிநீர் நிறைந்தனைய செல்வன் கண்டாய்" என்றார் ஒரு அடியார். மாணிக்கவாசகர் கொங்கு நாட்டுக்கெழுந்தருளியிருக்கவேண் டும். அவிநாசியை வழிபட்டார்; அகன்ற காவிரிக்கரையிலுள்ள பாண்டிக்கொடு முடி யையும் வணங்கினர்; காவிரி கரைபுரண்டு செல்லுங் காட்சியைக் கண்டவர் அவ்வெள் ளத்தையே இறைவனாக எண்ணினர்; பாடி னர்; "அரிய பொருளே அவிநாசியப்பா பாண்டிவெள்ளமே" என்றார். கொடுமுடிக் காவிரிக் கரையில் நின்று பார்ப்போர்க்கு இவ் வுண்மை புலனாகும்.

இப்போது கொடுமுடி என வழங்குவது திருப்பாண்டிக்கொடுமுடி என்ற பாடல் பெற்றபதி. கொங்கு நாட்டில் பாடல்பெற்ற ஏழு சிவத்தலங்களில் ஒன்று. கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ளது. கொடுமுடி என்ற புகைவண்டி நிலையத்தின் அருகிலுள்ளது. கோயில் அரைகல் தொலைவிலிருக்கிறது. கறை யூர், கொடுமுடி, திருப்பாண்டிக்கொடுமுடி என்ற பெயர்களையுடையது. கொங்கு நாட் டின் உட்பிரிவாகிய மேல் கரையரைய நாட் டில் காவிரியின் மேல் கரையிலிருக்கிறது. கொங்கேழ்தலங்களில் மூவராலும் பாடப் பெற்றது கொடுமுடி யொன்றே. மற்ற ஆறும் ஒவ்வொருவரால் பாடப்பெற்றது.

கோயில் காவிரிக்கரையில் கிழக்கு நோக்கியிருக்கிறது. மூன்று கோபுரங்கள் கிழக்கிலுள்ளன. இவை இறைவன், திருமால், அம்பிகை சந்நிதிகளுக்கு நேரே இருக்கின்றன. கோயிலின் வடபாகத்தில் சுவாமி சந்நிதி கிழக்கு பார்க்க இருக்கிறது; தென்பாகத்தில் கிழக்கு நோக்கி அம்பாள் சந்நிதியும் இருக் கிறது; இவைகளுக்கு நடுவில் பின்புறம் பெரு மாள் சந்நிதி அமைந்திருக்கிறது. வடமேற்கு மூலையில் அனுமார் கோயிலும், பெருமாள் கோயிலுக்குத் தென்புறம் மகாலட்சுமி சந்நிதி யும் இருக்கின்றன.

இத்தலத்துப் பெருமானின் திருநாமங் கள் கொடுமுடிநாதர், மகுடேசர், மலைக் கொழுந்தர் என்பன. இறைவன் சுயம்பு மூர்த்தி. தேவியின் திருப்பெயர்கள் வடிவுடை நாயகி, பண்மொழியம்மை என்பன. திரு மால்-வீரநாராயணப் பெருமாள்; பள்ளி கொண்ட திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

இத்தலத்துக்குரிய தீர்த்தங்கள் நான்கு. காவிரியாறு கோயிலுக்கெதிரில் ஓடுகிறது; தேவதீர்த்தம் வன்னிமரத்திற்குப் பக்கத்தி லிருக்கிறது; பிரமதீர்த்தம் அம்மன் கோயில் பக்கமிருக்கிறது; பரத்துவாச தீர்த்தம் சுவாமி சந்நிதி முன் உள்ளது. இத் தலவிருட்சம் வன்னிமரம்; அம்மன் கோயிலுக்குப் பின் புறம் இருக்கிறது; மிகப் பழைய மரம்; பிரம சொரூபம் என்று கூறுகின்றனர்.

ஆவணியிலும் பங்குனியிலும் நாலைந்து நாட்கள் சூரியன்கதிர்கள் சுவாமி, அம்பாள் இரண்டு மூர்த்திகள் மேலும் படுகின்றன,

இத் தலத்தில் சித்திரைத்தேர், ஆடிப் பதினெட்டாம் பெருக்கு, மார்கழித் திருவாதிரை, வைகுண்ட ஏகாதசி ஆகிய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

கொடுமுடிப்பதியைப் பற்றி எழுந்த பாடல்கள், நூல்கள் பல. திருஞானசம்பந்தர் ஒரு பதிகம் பாடியுள்ளார். அவர் இங்கு வந்ததாகப் பெரிய புராணம் கூறுகிறது. இயற்கைக் காட்சியை எழில்படக் கூறுகிறார். "கானமர் மஞ்ஞைகள் ஆலும் காவிரிக் கோலக் கரைமேல்.......பாண்டிக் கொடுமுடியாரே", "கார் அகில் பன்மணி உந்திப் பரந்திழி காவிரிப்பாங்கர்ப் பாண்டிக்கொடுமுடியாரே" என்று கூறுகிறார். அப்பரடிகள் ஒருபதிகம் அருளியுள்ளார். "திருக்கொடும் முடியென்றலும் தீவினைக்கருக்கெடும் இது கைகண்ட யோகமே" என்பது அவர் திருவாக்கு. சம்பந்தர் இரண்டும் அப்பர் ஒரு பதிகமும் பஞ்சாக்கரத்திற்கெனத் தனிப்பதிகங்களாகப் பாடியுள்ளனர். சுந்தரர் இத் தலத்திற்குப் பாடிய பதிகமே பஞ்சாக்கரப் பதிகமாய் அமைந்துள்ள சிறப்புடையது. "பாண்டிக்கொடுமுடி இறைவா! நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" என்று ஒவ்வொரு பாடலிலும் கூறியுள்ள அருமை பெருமையுடையது. வதூத் முனிவர் என்பார் வடமொழியில் தலபுராணம் பாடியிருக்கிறார். சாமக்குளம்—வெங்கடரமண தாசர் என்பவர் தமிழில் செய்யுளில் தலபுராணம் இயற்றியிருக்கிறார். அதில் 12 சருக்கங்களும், 819 பாடல்களும் இருக்கின்றன. வித்துவான்—வே, ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் உரைநடையில் தலவரலாறு ஒன்று எழுதியிருக்கிறார். பதினோராம் திருமுறையில் கபில தேவநாயனரின் சிவபெருமான் திருவிரட்டை மணிமாலையில்,

நிறம்பிறிதா யுண்மெலிந்து
    நெஞ்சுருகி வாளா
புறம்புறமே நாள்போக்கு
    வாளோ—நறுந்தேன்
படுமுடியாப் பாய்நீர்
    பரந்தொழுகு பாண்டிக்
கொடுமுடியா யென்
    றென் கொடி

என்ற வெண்பாவைப் பாடியிருக்கிறார். சேக்கிழார் சம்பந்தர், ஏயர் கோன்கலிக்காமர் இவர்கள் புராணங்களில் இத்தலத்தைப் பற்றிக் கூறியுள்ளார். 'செப்பருஞ் சீர்த்திருப் பாண்டிக்கொடுமுடி', 'பொன்னித் தென் கரைக் கறையூர்க் கொடுமுடி' என்பன அவருடைய வாக்குகள். அருணகிரிநாதர் இரண்டு திருப்புகழ்ப் பாடல்களை அருளியிருக்கிறார். "குருவெனச் சிவனுக்கருள்போதா கொடு முடிக் குமரப் பெருமாளே" என்றும், "பாந்தட் சடையேந்திக் குலவிய பாண்டிக் கொடுமுடியுடையோரும்" என்றும் கூறியிருக்கின்றனர். மலைக்கொழுந்து கவிராயர் பாடிய கொடுமுடிக் குறவஞ்சி, பால பாரதியார் பாடிய காளியண்ணன் குறவஞ்சி, தெய்வ சிகாமணிக்கவுண்டர் இயற்றிய வடிவுள்ள நாயகி பஞ்சரத்தினம், கொங்குமண்டலச் செய்யுள்கள் முதலியன இத்தலத்தைப் பற்றியனவே.

கொடுமுடி நாதர் கோயிலுக்குத் தென் மேற்கு மூலையில் தேரோடும் தெருவில் மலையம்மன் கோயில் இருக்கிறது. ஊர்த்தேவதை என்பர். பர்வதவர்த்தனி கன்னிக் கோலமாக இங்கு கோயில் கொண்டுள்ளாள் எனச் சிலர் கருதுகின்றனர். அம்மன் சந்நிதியில் நந்தி இருக்கிறது. அக்கோயிலுக்குள் நாகநாதர், ஆனந்தவல்லி, பேச்சியம்மன், கருப்பண்ணசுவாமி இவர்கள் சந்நிதிகளும் உள்ளன. மலையம்மன் கோயில் அழகிய சிறு கோயில்; அவசியம் பார்க்க வேண்டியது.

கொடுமுடி நாதர் கோயில் கல்வெட்டுக்களில் அதிராஜராஜமண்டலத்துக் காவிரி நாட்டுக் கறையூர் திருப்பாண்டிக் கொடுமுடி யென்றும், இறைவன் பெயர்கள் திருப்பாண்டிக் கொடுமுடி மகாதேவர், ஆளுடைய நாயனார் என்றும், கோயிலில் பள்ளிக்கொண்ட பெருமாள், பெரிய திருவடி (கருடன்), இளைய பிள்ளையார் (முருகன்) எழுந்தருளியிருந்தனர் என்றும், கோயில் பூசனை, திருவிழாக்கள், திருப்பணி முதலியவற்றிற்கு நிலதானங்கள் வழங்கப்பட்டன என்றும் அறிவிக்கின்றன. சுந்தரபாண்டியன் கோனேரின்மை கொண்டான், கொங்கு மன்னனை வீரநாராயண இரவிவர்மன் முதலியவர்கள் காலத்திய கல்லெழுத்துக்கள் அவை.

# மலைநாட்டுத் திருப்பதியநுபவம்

[மகாவித்வான் திரு. P. B. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்]

[ஜனவரி இதழ்த் தொடர்ச்சி]

## திருக்காட்கரைப்பதியநுபவம்

கீழ் திருவித்துவக்கோடு திருநாவாய் திருமூழிக்களம் ஆக மூன்று திருப்பதிகளை யநுபவித்தோம். இப்போது திருக்காட்கரைப் பதியை யநுபவிக்கப் புகுகின்றோம். நம்மாழ்வாரொருவரே பாடியது இத்தலம். திருவாய்மொழியில் ஒன்பதாம் பத்தில் ஆறுவது பதிகமாகிய உருகுமால் நெஞ்சம் என்பது இத்தலத்திற்குப் பாடலாக அமைந்தது. இப்பதிகத்தின் தொடக்கம் உருகுமால் நெஞ்சமென்றிருப்பதற்குச் சேர இப்பதிகத்திற்கு நெஞ்சுஉருகாதாரிலர். இதற்கு முற்பதிகத்தைத் தலைக்கட்டும் போது ஆழ்வார்தாமே "தென் குருகூர்ச்சட கோபன் சொல்லாயிரத்துள்ளிவை ஒன்பதோடொன்றுக்கும் மூவுலகுமுருகுமே" என்றருளிச் செய்தார்.

அப்படிப்பட்ட அப்பதிகத்தில் பத்தாம் பாட்டில் "எழநண்ணி நாமும் நம்வான நாடனோ டொன்றினோம்" என்றாராழ்வார். இனித் தாம் ஜீவித்திருக்குமாசை யில்லையாகவும் விண்ணுலகிற் சென்று சேர்ந்துவிட்டதாகவும் அப்பாசுரத்திற் பேசினர். அதனைக் காணுமிடத்து ஆழ்வார் அந்தப் பாசுரத்தோடு திருவாய்மொழியைத் தலைக்கட்டி விட்டதாகவும், இனிப் பாசுரங்களருளிச் செய்ய இந்நிலத்தில் தாம் இல்லையாகவும் தோன்ற நின்றது. ஆனாலும் ஆழ்வார் இன்னமும் இந்நிலத்திலேயே திருப்புளியாழ்வாரடியிலேயே வீற்றிருந்து மேலே பாசுரங்கள் பேச ப்ராப்தமாகிறது. எம்பெருமான் வந்து முகங்காட்டி ஆழ்வாரைத் தரிக்கச் செய்ததனால் தரித்து நின்று பாசுரம் பேசுகிறாரோ வென்னில், இல்லை; இல்லையாகில் ஆழ்வார் எப்படி தரித்து நின்று பேசுகிறரென்னில், அப்பெருமான் வந்து முகங்காட்டாமலே ஒரு விரகு செய்தானாயிற்று. அந்த விரகுதான் ஏதென்னில், கீழ் எட்டாம் பத்தில் "இருத்தும் வியந்தென்னை" என்கிற ஏழாம் பதிகத்தில் ஓர் ஆச்சரியமான கலவி நிகழ்ந்திருந்ததே; அதனை நினைப்பூட்டி ஒருவாறு தரிக்கச் செய்தா னெம்பெருமான். அதுதான் அவன் செய்த விரகு. அதனால் ஆழ்வார் ஒருவாறு தரிப்புற்றிருந்து இப்பதிகம் பேசுகின்றார்.

இதற்கு மூன்று வகையான காரணங்களை நம்பிள்ளை யென்னுமாசிரியர் அருளிச் செய்துள்ளார். அவையாவன :—

1. ஆழ்வார் முதற்பதிகமே தொடங்கி "குருகூர்ச்சட கோபன் சொல்—ஆயிரம்" என்று, எம்பெருமானுக்கு ஒரு ஆயிரம் பாசுரம் பேசித் தலைக்கட்ட வேணுமென்று ஸங்கல்பித்துக் கொண்டாராகையாலே அப்படி அவர் தாம் ஏற்றுக்கொண்ட கைங்கரியத்தை முற்ற முடிய நடத்துகைக்குறுப்பான பாக்கியம் ஆழ்வார்க்கு இருந்தது.

2. ஆழ்வாருடைய ஈரச் சொற்களை இன்னமும் கேட்கவேணுமென்று பாரித்துக் கொண்டிருக்கின்ற எம்பெருமானுடைய பாக்கியமும் ஒன்றுண்டு.

3. "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்று ஆழ்வார்தாமே பணித்தபடி இப்பாசுரங்களைக் கொண்டு போதுபோக்கவிருக்கிற முமுக்ஷு சேதநர்களின் பாக்கியமும் ஒன்றுண்டு.

ஆக இம்மூன்று காரணங்களினாலும் ஆழ்வார் இன்னமும் இந்நிலத்தில் தரித்துநிற்க ப்ராப்தமாகி, போனவுயிர் மீளும்படி பழைய தொரு கலவி ஆழ்வாருடைய நினைவிலே தோன்றுமாறு எம்பெருமான் செய்வித்தான்

அதனல் திருக்காட்கரையைப்பற்றின இப்பதிகம் திருவவதரிக்கின்றது.

இப்போதாகவொரு மகிழ்ச்சி இல்லையாயிருக்க, என்றைக்கோ நிகழ்ந்த கலவியை நினைத்துத் தரிப்பது முண்டோ வென்னில், உண்டு என்பதை இதிகாசங்களினல் அறிகின்ருேம்.

சீதாபிராட்டி இலங்கை யசோகவனத்தில் துன்புற்றிருக்கையில் மாருதி சென்று கிட்டினபோது, இராமபிரான் வந்து முகங்காட்டாத கிலேசம் நடவாநிற்கச் செய்தேயும், காட்டுக்குப் புறப்படுவதற்கு முன்பு அயோத்திமா நகரிலே பன்னிரண்டு வருடகாலம் இராமபிரானும் தானும் ஏகபோகமாகவிருந்து பேரின்பம் நுகர்ந்த நுகர்ச்சி நினைவுக்கு வந்து "ஸமா த்வாதச தத்ராஹம் ராகவஸ்ய நிவேசனே, புஞ்ஜாநா அமாநுஷாந் போகாந் ஸர்வ காமஸம்ருத்திநீ" என்று அந்த நிகழ்ச்சியைச் சொல்லிச் சொல்லிப் போதுபோக்கினளென்று காண்கிருேமல்லவா? அவ்வண்ணமாகவே இருத்தும் வியந்தென்கிற பதிகத்தில் நிகழ்ந்த கலவியின்பம் இப்போது ஆழ்வாருடைய நினைவுக்கு விஷயமாகி ஆழ்வாரைத் தரித்துநின்று பாசுரம் பேசச் செய்ததாயிற்று. இப்படி ஆழ்வாரைத் தரிக்கச் செய்து பேசுவித்த பெருமான் திருக்காட் கரையப்பனே யென்று பாசுரத்தின் போக்கினல் தெரிய வருகின்றது.

1. உருகுமால் நெஞ்சமென்கிற முதற்பாட்டின் கருத்து. பகவானை யநுபவிப்பதற்கு முதன்மையான கருவி நெஞ்சு; அது சிதிலமாகா திருந்தாலன்ருே அநுபவிக்க முடியும். திருக்காட்கரைப் பெருமானுடைய ஆச்சரியமான பரிமாற்றங்களை நினைக்கும்போதெல்லாம் நெஞ்சு நீர்ப்பண்டமாகின்றதே. அநுபவித்துக் களிப்பதற்கு உறுப்பான நெஞ்சு முந்துற முன்னம் சிதிலமாகி யொழிந்தால் என்ன செய்வது! பெருக்காற்றிலே நீஞ்சப் புகுந்தவனுக்கு முதலிலேயே தெப்பம் ஒழுகத் தொடங்கினல் என்னகும்!

வேட்கையாவது ஓரளவிலே அமைந்திருந்தால் ஒருவாறு ஆற்றலாம்; வேட்கையும் மேன்மேலனப் பெருகாநின்றதே! ஆற்றுப் பெருக்குப்போலே மேன்மேலும் பெருகிவருகின்ற காதல் அணுவளவான ஆன்மாவில் அமையக் கூடியதாக இல்லையே. [என்செய்கேன் தொண்டனேன்.] நெஞ்சு உருகாதபடி செய்யவும், வேட்கை பெருகாதபடி செய்யவும் ஓர் உபாயம் தெரியவில்லையே. திருக்காட்கரையப்பனுடைய திருக்குணங்களை நினையாதிருக்க முடிந்தாலன்ருே நெஞ்சு உருகாமலும் வேட்கை பெருகாமலு மிருக்கக்கூடும். அத்திருப்பதியானது குறுந்தெருவோடு நெடுந்தெருவோடு வாசியற எங்கும் செங்கழுநீரின் நறுமணம் கமழநின்றதே! அப்பெருமானே மாயன்; அழகு சீலம் முதலிய திருக்குணங்களினல் என்போல்வாரைப் பிச்சேற்ற வல்லவனை அவன் றன்னுடைய மாயத்தை (அதாவது) கிட்டினபோது தாழநின்று பரிமாறின சில குணத்தை மறக்க வேணுமென்று எண்ண எண்ண அதுவே அதிகமாக நினைவுக்கு வருகின்றதே! அந்தோ! என்று அலமருகின்ருராழ்வார்.

[இனி பாட்டுத்தோறும் ஒவ்வொரு
விசேஷம் மட்டும் காட்டுவோம்.[

## வேம் எனது ஆருயிர்

2. பகவத்கீதையில் ஆன்மாவைப்பற்றிச் சொல்லுமிடத்து "அச்சேத்யோயம் அதாஹ்யோயம் அக்லேத்ய: அசோஷ்ய ஏவச" என்னப்பட்டது. அதாவது, ஆன்மாவைக் கத்தியினல் வெட்ட முடியாது; நெருப்பினல் வேகடிக்க முடியாது; நீரினல் நனைக்க முடியாது; வெய்யிலினல் உலர்த்த முடியாது என்றது. ஆழ்வாருடைய ஆன்மாவானது இத்தகைய நூற்கொள்கைக்குக் கட்டுப்பட்டதன்று; 'எனது ஆருயிர் வேம்' என்கிருரிங்கு. இதனல் ஆழ்வாருடைய ஆத்மஸ்வரூபமானது ஸம்ஸாரிகளான நம் போல்வாருடைய ஆன்மாவைக் காட்டிலும் மிகவும் விலக்ஷணமானதென்று விளங்கும். 'அதாஹ்ய' என்று கீதையில் சொன்னதற்கு மாருக இங்கு 'எனதாருயிர் வேம்' என்றது மட்டுமல்ல; 'அச்சேத்ய:' என்று அதில் சொன்னதற்கு மாருக "வல்வினையேனை ஈர்கின்ற குணங்களையுடையாய்" என்பர்; 'அக்லேத்ய:' என்று அதில் சொன்னதற்கு மாருக "காரியம் நல்லனகள் அவை காணில் என் கண்ணனுக்கென்று ஈரியாயிருப்பாள்" என்பர். 'அசோஷ்ய:' என்று அதில் சொன்னதற்கு மாருக "வேவாரா வேட்கை நோய் மெல்லாவி

யுள்ளூலர்த்த'' என்பர். ஆக நூல்வரம்புக்கு அகப்படாத ஆத்மஸ்வருப முடையவராழ் வார் என்பது தேறிற்று. இதனால் இவரது காதலின் மேன்மை தெரிவிக்கப்பட்டதாம்.

3. நீர்மையால் நெஞ்சமென்கிற மூன் றும்பாட்டில் ''என்னுயிருண்டான்'' என் பது உயிரான சொல்தொடை. இது மேலே பத்தாம்பாட்டில் ஆழ்வார் தம்மாலேயே நன்கு விவரிக்கப்படுவதால் நாமும் அங்கு விவரிக்கப்படுவதால் நாமும் அங்கு விவரிப் போமாக. இப்பதிகத்திற்கே உயிரான விஷ யும் இதுதான். எம்பெருமானை யநுபவிக்க நாம் ஆசைப்படுவதிற்காட்டிலும் அவன் நம்மை யநுபவிக்க ஆசைப்படுவதுதான் மேம் பட்டது என்கிற நூற்கொள்கையை வெளி யிடுவதாம்.

4. தென்காட்கரை யென்னப்பன் திரு வருளை அறிகிலேனென்கிறார். அதாவது, உலகமெல்லாம் தொண்டு செய்யுமதாயும், அவன்தான் தொண்டு கொள்வானாயும் இப் படி முறை தவறாமல் எல்லாரோடும் கலந்து பரிமாறும் பெருமான் 'நீசனேன் நிறை யொன்றுமிலேன்' என்னும்படி மிக அற்ப னை என் திறத்திலே காட்டும் மையல் இன்ன தென்று என்னால் சொல்ல முடிகிறதில்லையே யென்றவாறு. சில அதிகாரிகள் பக்கலிலே எம்பெருமான் முறைகெடப் பரிமாறுவ துண்டு; அதனை ஆழ்வார் தம்முடைய அனு பவத்தாலே காட்டினரென்க.

5. தென்காட்கரை யென்னப்பனென் கண்ணன் கள்வங்களே! என்று அவனுடைய கள்வங்களுக்கு வியக்கிறாராழ்வார். என்ன கள்வமென்னில்; 'ஒழிவில் காலமெல்லா முட னாய் மன்னி வழுவிலாவடிமை செய்ய வேண் டும் நாம்' என்று ஆழ்வார் பாரித்திருக்கிறார். எம்பெருமானுக்குக் கைங்கரியம் பண்ண வேணுமென்பது இவருடைய பாரிப்பு. இதற்கு நேர்முரணாக அவனுடைய பாரிப்பு. அதாவது, ஆழ்வார்க்குத்தான் கைங்கரியம் பண்ணவேணுமென்று அவன் பாரித்திருந்த படி. ஆழ்வாருடைய பாரிப்பை நிறைவேற்று வதாக அவன் உள்ளே புகுந்துதான்பாரிப்பை நிறைவேற்றிக்கொண்டானாயிற்று; இதுதான் கள்வம். அவன் தன்னுடைய பாரிப்பை நிறை வேற்றிக் கொள்வதாவது, ஆழ்வாரே! உம்மை நான் பெறுவதற்கு எத்தனை காலமாக எவ் வளவு பாடுபட்டேன் தெரியுமா? இத்தனை நாளும் விபலமாய் இன்றுதானே பலிக்கப் பெற்றது! என்று சொல்லிப் பெறும்பேறு பெற்றமை காட்டி நிற்றல். ''ஜ்ஞாநீ'து' ஆத் மைவ! மே! மதம்'' என்று கீதையிலே சொன்னபடி ஆழ்வாரை உயிராக வைத்துத் தான் உடலாக நின்று பரிமாறுதலுமாம்.

6. ஒருவனைக் கள்ளனென்றறிந்தால் அவனுடைய ஸஹவாஸத்தைவிட்டு விலகுதல் போல, எம்பெருமானுடைய வஞ்சகங்களை யறிந்த நீர் அவனைவிட்டு அகலவேண்டாவோ வென்று சிலர் கேட்கக் கூடுமே; அதற்குச் சொல்லுகிறார். என் செய்வேன்! அவன் வஞ்சகனென்பதில் ஐயமில்லை; அவனைக் கண்டவாறே அவனது வஞ்சனைகளை மெய் யென்று கொள்ளும்படி நேர்ந்து விடுகிறதே! யென்கிறார். இப்படி மயக்குவதும் எம்பெரு மான்றன்னுடைய ஒரு கள்வமென்க.

7. ஸம்பிரதாயத்தில் ஓர் ஆராய்ச்சி யுண்டு. திவ்யதேசம் உத்தேச்யமா? திவ்ய தேசத்திலுறையும் பெருமான் உத்தேச்யனா? என்று. இரண்டும் உத்தேச்யமே யென்று முதலிலே சொல்லிவிட்டால் இதில் சுவை யில்லை: இதையொரு விவாதமாக வைத்துக் கக்ஷிப்ரதிகக்ஷிகள் ஏற்றவேண்டும். வெறும் ஊருக்கு ஏற்றம் கிடையாது; எம்பெருமா னால்தானே ஊருக்கு ஏற்றம்; ஆதலால் எம் பெருமானே உத்தேச்யன் - என்று சொல்ல நேரும். அதற்குமேல், எம்பெருமான் இல் லாதவிடமேது? அவன் எங்குந்தானிருக் கிறான்; அந்தந்த திவ்ய தேசங்களாலன்றோ அவனுக்கு ஏற்றம். ஆகவே எம்பெருமானைக் காட்டிலும் திவ்யதேசமே உத்தேச்யம் என்று சொல்லநேரும்.

இந்த வாதம் மறுபடியும் திரும்பும். முடி வாக, எம்பெருமானால் திவ்ய தேசத்திற்கு ஏற்றம், திவ்ய தேசத்தினால் எம்பெருமா னுக்கு ஏற்றம். ஆகவே இரண்டும் உத்தேச் யமே யென்று முடிவாகும். ஆனாலும் ஆழ் வார்கள் பதியேபரவித்தொழும் தொண்ட ராகையாலே திருப்பதியையே முக்கியமாகக் கொள்வார்கள்; அந்தக் கோட்பாடு விளங்க இப்பாட்டில் ''காட்கரையேத்தும்'' என்று முந்துறமுன்னமருளிச்செய்து, பிறகு ''அத னுள் கண்ணாவென்னும்'' என்கிறது. இக் கருத்தையெடுத்துக் காட்டுகின்ற திருமங்கை

யாழ்வார் தாய் பாசுரமாக வைத்துத் திருக் கண்ணபுரத்தெம்பெருமானிடத்து ஈடுபாட்டை விளக்கும் பதிகத்தில் ['தெள்ளியீர் தேவர்க்கும்' என்பதில்] "நீணிலாமுற்றத்து நின்றிவள் நோக்கினுள், காணுமோ கண்ணபுரமென்று காட்டினுள்" என்று கூறினர். என் மகள் உயர்ந்த நிலத்திலேறி நின்று 'இதோ திருக்கண்ணபுரம் தெரிகிறது பாருங்கள்' என்று சொல்லுவதாகத் தாய் பாசுரம் அமைந்துளது. 'இதோ திருக்கண்ணபுரத் தெம்பெருமான் ஸேவைஸாதிக்கிருன், ஸேவியுங்கள்' என்னக் கூடாதா? அங்ஙனமே சொல்லுவதைவிட்டு 'காணுமோ கண்ணபுரமென்று காட்டினுள்' என் கையாலே திருப்பதியினுறையும் பெருமானைவிட, திருப்பதிக்கே ஏற்றமென்பது காட்டப்பட்டது. இவ்வர்த்த விசேஷத்திற்கு இப்பாட்டு மூலம்.

8. இப்பாட்டில் "கோளுண்டானன்றி வந்து என்னுயிர்தானுண்டான்" என்பது அரிய பெரிய வார்த்தை. இச்சொற்றொடர்க்கு மூவகையாகப் பொருள் கூறுவர் பேராசிரியர்கள். (1) என்னிடத்தில் ஒருபகாரமும் கொள்ளாமலே வந்து என் ஆத்ம வஸ்துவைத் தான் பூஜித்தான்; (அதாவது) நிர்ஹேதுகமாக என்னளவில் இத்தனை ஆதரம் செய்தானென்கை. (2) இனி இரண்டாவது பொருள், இதற்கு முன்பு இப்படிப்பட்டதொரு சரக்குக் கொண்டறியாதவன்போல் என் பக்கலிலே அளவுகடந்த ஆதரம் கிட்டுகின்ருன். என்னினும் மிகமிக மேம்பட்ட விலக்ஷணவ்யக்திகளை அவன் அநுபவித்திருந்துங்கூட, இதற்கு முன் ஒருவரையும் அநுபவித்திராதவன் போல ஆதராதிசயம் காட்டுகின்ருனென்கை. (3) இனி மூன்ரும் பொருளாவது, என்னலே தான் கொள்ளப்படாதிருக்க, [நான் அவனை ஸ்வீகரியாமலிருக்க அவனுக வந்து என்னை ஸ்வீகரித்துத் தான் பெருப்பேறு பெற்றனையிருக்கின்ருனென்பதாம். இது முதற் பொருளையே நன்கு விவரித்தபடி.

9. 'ஆருயிர்பட்ட தெனதுயிர்பட்டது" என்கிருர். 'எனதுயிர்பட்டது ஆருயிர் பட்டது' என்று மாற்றி இயைக்கவேணும். திருக்காட்கரைப்பெருமான் திறத்தில் என் ஆத்மா பட்டபாடு வேறு யாருடைய ஆத்மா பட்டது? என்கிருர். தாம் பகவத் விஷயத்தி லீடுபட்டது போல வேறு யாரும் ஈடுபட்டதில்லையென்று கூறியவாறு. திருமழிசை யாழ்வார் தமது நான்முகன் திருவந்தாதியில் மூன்ரும்பாட்டில் "பரம்பொருளையானறிந்த வாறு ஆரறிவார்?" என்ருர்; அதனில் மேம் படச் சொல்லுவது இது. அறிவது அதிசயமன்று; அநுபவிப்பதன்ருே அதிசயம். அது, தமக்குப்போல வேறு யார்க்கும் வாய்த்த தில்லையென்று உண்மையை வெளியிட்டாராயிற்று. அநுபவமென்பது, பகவானைத் தாமநுபவிப்பதும், பகவனுல் தாமநுபவிக்கப் பெறுவதும். இவ்விருவகை யநுபவத்திலும் இவ்வாழ்வார் ஈடுமெடுப்பு மில்லாதவரன்ருே.

10. திருவாய்மொழி ஆயிரத்தினுள்ளும் இப்பாட்டு உயிரான தென்னலாம். பாட்டைப் பூர்த்தியாகக் கேண்மின் ;

"வாரிக்கொண்டு உன்னை
விழுங்குவன் காணிலென்று
ஆர்வுற்ற என்னையொழிய
என்னில் முன்னம்
பாரித்துத் தானென்னை
முற்றப் பருகினுன்
காரொக்கும் காட்கரையப்பன்
கடியனே."

வைணவ சம்பிரதாயத்தில், எம்பெருமானைப் பெறுவது சேதநனுக்கும் பேருே? சேதநனைப் பெறுவது எம்பெருமானுக்குப் பேருே? என்ருெரு விசாரம் நிகழும். நூற்களில் மேலெழப் பார்க்குமிடத்து எம்பெருமானைப் பெறுவது சேதநனுக்குப் பேறு என்று தோன்றும். ஆனல் உண்மைப் பொருள் இதுவன்று. சேதனனைப் பெறுவதே எம்பெருமானுக்குப் பேறு என்பது மிக்க வேதியர் வேதத்தினுட்பொருள். அஃது இப் பாசுரத்தில் விளங்கக் காட்டப்பட்டுள்ளது. இது மிகப் பெரிய விஷயமாதலால் இதனை அடுத்த இதழில் பல சான்றுகளுடன் விளக்குவாம்.

(தொடரும்)

# அமர்நீதி நாயனார்

அல்லிமென் முல்லையந்தார்
அமர்நீதிக் கடியேன்

—சுந்தரர்.

மிண்டும் பொழிற் பழையாறை
யமர்நீதி வெண்பொடியின்
முண்டந் தரித்தபிராற்கு
நல்லூரின்முன் கோவணநேர்
கொண்டிங்கரு ளென்றுதன்
பெருஞ் செல்வமுந்தன்னையுந்தன்
துண்டமதி நுதலாளையு
மீந்த தொழிலினனே

—நம்பியாண்டார் நம்பி.

சோழ நாட்டிலே பழையாறை என்பது சிறந்த பதி. அங்கு வணிகர் குலத்தில் அவதரித்த பெரியார் அமர்நீதியார் என்பார். வாணிகம் செய்து வளத்தோடு வாழ்ந்தார்; சிவனடி மறவாச்சிந்தையார்; சிவனடியார்களை அமுது செய்வித்து, கந்தை, கீள், உடை, கோவணம் முதலியவைகளை உதவிவந்தார். திருநல்லூர் சென்று திருமடம் அமைத்து, திருவிழா சேவித்துக்கொண்டு, அமுது அளிக்கும் தம் திருத்தொண்டைச் செய்து வருவாராயினர்.

சிவபெருமான் ஒரு அந்தணப் பிரமசாரி வடிவம் கொண்டு அமர்நீதியாரிடம் வந்தார்; தண்டிலே இரண்டுகோவணங்களையும்கொண்டு அணைந்தார்; "அடியார்களுக்கு கந்தை, கீள், உடை, கோவணம் முதலியவற்றை நீர் ஈவது கேட்டு உம்மைக் காணவந்தோம்" என்றார். அமர்நீதியண்ணல் "திருமடத்தில் அமுது செய்தருளி யிருக்கலாம்" என்று வேண்டினர். "காவிரியில் நீராடி வரச்செல்கிறேன். அதுவரை இந்த காய்ந்த கோவணம் ஒன்று உம்மிடம் தருவதை வைத்திருந்து தரவேண்டும்" என்று கூறித் தண்டிலிருந்து இரண்டு கோவணங்களில் ஒன்றை எடுத்துக் கொடுத்துச் சென்றார். நாயனாரும் அதை ஒரு தனியிடத்தில் சேமமாக வைத்தார்.

சென்ற மறையவர் மழை பொழிய நனைந்து திரும்பி வந்தார்; அமர்நீதியாரிடம் வைத்த கோவண ஆடையைக் கேட்டார். வணிகப் பெருமகனார் வைத்த இடத்திலிருந்து அது மாயமாய் மறைந்து விட்டது. "அடிகளே! அது வைத்த இடத்தில் காணவில்லை. புதுக் கோவணம் தருகிறேன். ஏற்றருள்க" என்று நாயனார் வேண்டினார். அந்தணப் பெரியார், "கோவணம் வழங்குவதாக உலகறியச் செய்த நீர் யான் அளித்த கோவணத்தைக் திருப்பிக் கொடுக்காதது முறையோ" என்று சினந்து கூறினார். நாயனார், "பொறுத்தருள வேண்டும். பட்டாடை முதலிய புதியனவாகக் கொடுக்கிறேன். அதனைப் பெற்றுக்கொள்ளவேண்டும்" என்று பணிந்து கூறினார். "கோவணத்திற்குக் கோவணம் தருதலே நேர்மை" என்றார் அந்த மாயமறையவர். "அதை யெப்படிக்கொடுக்க வேண்டும்" என்று கேட்டார் அமர்நீதியார். "யான் உடுத்தியிருக்கும் இக் கோவணம் உம்மிடம் கொடுத்த ஒன்றுக்கு நேரானது; அதற்குச் சமனாக எடையுள்ள ஒரு கோவணஆடை கொடும்" என்றார் அவ்வேதியர். துலை ஒன்று கொண்டு வரச் செய்து அதன் ஒரு தட்டில் அந்தணரிடம் உள்ள கோவணத்தையும் வைக்கச் செய்து, மற்றொரு தட்டில் புதுக்கோவணங்கள் ஒன்றொன்றாக வைத்தார் வணிக வள்ளல். இரண்டு தட்டுகளும் சமன்பெறவில்லை. பல பட்டாடைகளை இட்டார். அந்தணர் கோவணமிருந்த தட்டு தாழ்ந்தே இருந்தது. பின்னர், மறையவர் இசைவு பெற்று நாயனார் பொன், வெள்ளி, மணிகள் முதலியவற்றைப் பெய்தார். அவை வைத்த தட்டு மேலேயே நின்றது. தமதென உள்ள எல்லாப் பொருள்களையும் வைத்தார்; பயனில்லை. நாயனார், அவர் மனைவி, மைந்தன் இவர் துலைத்தட்டில் ஏறப்போவதாகச் சொல்லி அந்தணர் இசைவு பெற்றார். "இறைவன் திருநீற்றுமெய்யடிமைத் திறத்தில் நாங்கள் தவறவில்லை யென்பது உண்மையாயின் இத்துலை நேர்நிற்க" என்று திருநல்லூர்ப் பெருமானை வணங்கி, ஐந்தெழுந்தோதி, மூவரும் துலைபுக்கனர். இரண்டு தட்டுகளும் சமனாக

நின்றன. எல்லோரும் வியப்படைந்தனர். இறையவரான மறையவர் மறைந்து, விண்ணிலே உமாதேவியுடன் நின்று காட்சி அளித்தனர். அமர்நீதியார், மனைவி, மைந்தர் இவர்கள் வணங்கித்துதித்தனர். பெருமானும், அம்மூவரும் தம்மைத் தொழுதுகொண்டேயிருக்கும் அழிவில்லாத சிவபதம் அளித்தருளினர்.

பழையாறை, கும்பகோணத்திற்கடுத்த தாராசுரம் என்ற புகை வண்டி நிலையத்திலிருந்து சுமார் ஐந்து கல் தொலைவிலிருக்கிறது. திருநல்லூர், கும்பகோணத்திற்கு மேற்கே ஆறு கல் தூரத்திலிருக்கிறது. சுந்தரப் பெருமான் கோயில் என்ற புகை வண்டி நிலையத்திலிருந்து தெற்கே இரண்டு கல் தொலைவிலுள்ளது.

பழையாறை வணிகரமர்
நீதியார் யார்பால்
பரவுசிறு முனிவடிவாய்ப்
பயிலு நல்லூர்க்
குழைகாதர்வந் தொருகோ
வணத்தை வைத்துக்
கொடுத்தநனை யெடுத்தொளித்துக்
குளித்து வந்து
தொழிலாரு மதுவேண்டி
வெருண்டு நீரித்
துலையிலிடும் கோவணநேர்
தூக்கு மென்ன
எழிலாரும் பொன்மனைவி
இளஞ்சே யேற்றி
ஏறினர்வா னுலகுதொழ
ஏறினரே

—உமாபதி சிவாசாரியார்.

திருக்குற்றாலம்: திருக்குற்றாலநாதசுவாமி கோயில் அலுவலகத்தை சென்னை அறநிலையத்துறை அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் 9-2-60-ல் திறந்து வைத்தார்கள். இக் கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் நடக்கப்போகிற திருப்பணிக்கு அடிகோலினார்கள். இலஞ்சி திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, எம்.ஏ., அவர்கள் தலைமை வகித்தார்கள்.

தெற்குவிருதாங்கன்: சுவர்னபுரீசுவரர் கோயிலில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் வாரவழிபாடும், மார்கழி மாதம் 1 தேதி முதல் 29 தேதி முடிய திருவெம்பாவை திருப்பாவை முதலியன நடைப்பெற்றன.

ஆப்புக்கூடல்: கணேச பாலதெண்டாயுதபாணி சுவாமி கோயிலில் இரதோற்சவ விழா 11-2-60-ல் சிறப்பாக நடைபெற்றது.

வடபழநி: வடபழநி ஆண்டவர் கோயிலில் பன்னிரு திருமுறைக்கோயில் பிரதிஷ்டை உற்சவம் 8-2-60-ல் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்களால் துவக்கிவைக்கப்பெற்றது: திரு. எஸ், சச்சிதானந்தம் பிள்ளை, கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார், முதலியோர் கலந்துகொண்டார்கள்.

திருவானைக்காவல்: ஜம்புகேசுவரசுவாமி கோயில் ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக விழா 3-4-60 முதல் தொடங்கி 6-4-60 அன்று நடைபெறும்.

**சாக்கோட்டை**: வீரசேகரசுவாமி முதலிய பரிவாரங்களுக்கு அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 10-2-60-ல் சிறப்பாக நடைபெற்றது.



திருப்பாவைப் பாசுரங்கள்—கல்வெட்டுத் திறப்பு விழா. கலியுக வரதராஜசுவாமிகோயில் —கள்ளங்குறிச்சி.

**கள்ளங்குறிச்சி:** கலியுகவரதராஜப் பெருமாள் கோயிலில் 8-1-60-ல் திருப்பாவை பாசுரக் கல்வெட்டை திரு. பி. டி. இராஜன் அவர்கள் தலைமையில் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு, அ, உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் திறந்துவைத்தார்கள். தஞ்சை அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. K. சோமசுந்தர தேசிகர் M. A. அவர்கள் தலைமையில் ஸ்ரீ ஆண்டாளின் திருவுருவப்படம் சுற்றுலாவும் நடந்தது. திருச்சிராப்பள்ளி அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு. டி. இ. ஜனார்த்தனம் B. A. அவர்களும் கலந்துகொண்டார்கள். அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கும், திரு பி. டி. இராஜன் அவர்களுக்கும் ஆதினபரம்பரை தர்மகர்த்தர் திரு. கோ. கோவிந்தசாமி படையாட்சி அவர்களால் வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டது. சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

✦ ✦ ✦ ✦

**தல்லாகுளம்:** பிரசன்னவெங்கடாசலபதி சுவாமி கோயிலில் வெங்கடேசப் பெருமாள் நூல்நிலையத்தை 14-2-60-ல் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் திறந்து வைத்தார்கள்.

✦ ✦ ✦ ✦

**ஆளுடையார்கோயில்:** ஆத்மநாத சுவாமி கோயிலில் சிவபுராணம் கல்வெட்டுத் திறப்பு விழா 12–2-60-ல் நடைபெற்றது. சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமை வகித்தார்கள், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களும், திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ.பி.எல். அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

எழுவன்கோட்டை: விசுவநாதசுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 10-2-60-ல் சிறப்பாக நடைபெற்றது.

◆ ◆ ◆ ◆

குரங்கணி: முத்துமாலை அம்பாள் கோயிலில் 7-12-59-ல் மகாபாரதம் திரு. மு. பொன்னுநாடார் அவர்களால் வாசிக்கப்பெற்று 7-2-60-ல் பூர்த்திபெற்றது. பூர்த்திவிழா வன்று திரு. பா. நாராயண நாடார் தலைமையில் திரு. ந. அரசகுமார் நாடார், திரு. த. ச. முத்துமாலைநாடார் இவர்கள் மகாபாரதத்தின் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினுர்கள்.

◆ ◆ ◆ ◆

திருக்கோட்டியூர்: சௌமிய நாராயணப்பெருமாள் கோயிலில் திவ்யப் பிரபந்தக் கல் வெட்டுத் திறப்புவிழா 13-2-60-ல் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்களால் திறந்துவைக்கப்பெற்றது. நூல் நிலையத்தையும் திறந்து வைத்தார்கள்.

◆ ◆ ◆ ◆

காளையார்கோயில்: சொர்ணகாளீசுவரர் கோயிலில் தேவாரக்கல் வெட்டுத் திறப்பு விழாவை 13-2-60-ல் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ. எஸ். அவர்கள் திறந்து வைத்தார்கள்.

◆ ◆ ◆ ◆

சிவகெங்கை: சிவகெங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்த சாக்கோட்டை வீரசேகர சுவாமி, கண்டதேவி சொர்ணமூர்த்திசுவரர், கோயிலூர் கொத்தவாளீசுவரர் முதலிய கோயில் களில் 12-2-60-ல் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ. எஸ். அவர்களால் பன்னிரு திருமுறைக் கோயில் விழா ஆரம்பித்து வைக்கப்பெற்றது.

◆ ◆ ◆ ◆

சிவகெங்கை: விசுவநாத சுவாமி கோயிலில் 13-2-60-ல் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்கள் கோயில் திருப்பணி விழாவை ஆரம்பித்துவைத்தார்கள். அத்துடன் நடராஜர் சந்நிதியில் திருமுறைக் கோவிலையும் நிறுவி னுர்கள்.

◆ ◆ ◆ ◆

இராமேசுவரம்: இராமநாத சுவாமி கோயிலில் சிவராத்திரிப் பெருந்திருவிழா 16-2 60 முதல் தொடங்கி 28-2-60 முடிய சிறப்பாக நடைபெற்றது. 25-2-60-ல் வெள்ளித் திருத்தேர் விழா மின் விளக்கு அணியுடன் சிறப்புற நடைபெற்றது.

---


## விளம்பரம்

பத்மனுபபுரம் குரூப்பு தேவஸ்தான சூப்பெரிண்டெண்டாபீசிலிருந்து பரஸியம் செய்வதென்னவென்ருல்,

இந்த குரூப்பைச் சேர்ந்த மேஜர் மண்டைக்காடு தேவஸ்தானத்தில் 1135-ம் ஆண்டு மாசி மாதம் 16-ம் தேதி (1960 பிப்ரவரி 28-ம் தியதி ஞாயிற்றுக்கிழமை திருக்கொடியேற்றும், மாசி மாதம் 21-ம் தியதி (1960-ம் ஆண்டு மார்ச்சு 4-ம் தியதி) வெள்ளிக்கிழமை வலிய படுக்கையும், மாசிமாதம் 25-ம் தியதி (1960-ம் ஆண்டு மார்ச்சு 8-ம் தியதி) செவ்வாய்க்கிழமை கொடையும் (ஒடுக்கு பூஜை) என்றதான விபரம் எல்லா பொதுமக்களுக்கும் இதனுல் தெரிவிக்கப்படுகிறது.

பத்மனுபபுரம், 3-2-1960

டி. சுப்பிரமணிய அய்யர்,
தேவஸ்தானம் சூப்பெரிண்டெண்டு

158337
600 008

# வைஷ்ணவம் – அழகுத்தெய்வம்

## (சங்க காலத்திலும் பிற்காலத்திலும்)

(பி. ஸ்ரீ)

முருகன் வழிபாடுபோல் கண்ணன் வழிபாடும் சங்ககாலத்தில் மக்களிடையே பிரசித்தமாக இருந்தது. இராமன் கதைகளையும் தமிழ் மக்கள் ஒருவாறு அறிந்திருந்த போதிலும் கண்ணனைப்போல் இராமனும் சங்க காலத்திலே வழிபடப் பெற்றான் என்பதற்குத் தக்கசான்று கிடைக்கவில்லை.

### இராமனும் கண்ணனும்

இந்திய மக்களின் வாழ்க்கை இன்றளவும் பெரும்பாலும் இராமன் கதைகளையும் கண்ணன் கதைகளையும் சுற்றிப் படர்ந்து வந்திருக்கிறது என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. பல நூற்றாண்டுகளாகச் சங்க காலத்திற்குப்பின் இந்த நிலைமை தமிழகத்திலும் விஷ்ணு பக்தர்களான மக்களிடையே ஏற்பட்டு வந்திருக்கிறது. அப்படி இல்லா விட்டால் கம்பன் காலத்திற்கு முன்பே இராமாயணத்தைப் பாடத் தமிழ்ப் புலவர்கள் முற்பட்டிருப்பார்களா? தமிழர் நாகரிகத்தின் உச்சநிலையில்,—சோழர் பேரரசு மகோன்னத நிலையுற்றிருந்த காலத்தில், தமிழகத்தின் கவிச்சக்கரவர்த்தி இராமாயணத்தைத் தமிழ்ப் பெருமக்களின் பேரிதிகாசமாக உருவாக்கியிருக்க முடியுமா?

ஆனால் சங்க காலத்திலும் அதற்கு முன்னும் நம் தமிழகத்திலே கண்ணன் கதைகளைப்போல இராமன் கதைகள் மக்கள் உள்ளத்தையும் வாழ்க்கையையும் வசிகரித்திருக்கவில்லை என்ற ஊகத்திற்கும் ஆதாரங்கள் உண்டு. எனவே, கண்ணன் வழிபாடுதான் ஸ்ரீவைஷ்ணவமாகத் தழைத்திருக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுவதில் தவறொன்றுமில்லை.

இன்று கண்ணன் கதைகளைப்போல் இராமன் கதைகளும் நம் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஆழ்ந்து வேரூன்றியிருப்பதைக் காண்கிறோம், தமிழிலக்கியத்தின் சிகரத்தையே பிடித்துக் கொண்டது இராம கதை என்பதை அறியாதார் யார்? கம்பன் கவிதையையே வசமாக்கி மலர்ச்சி பெறச் செய்தது கண்ணன் கதை அல்ல, இராம கதைதானே! இசை யுலகிலும் இராம நாடகக் கீர்த்தனைபோல் பாகவத கீர்த்தனைகள் பிரசித்தி பெறாமல் இருப்பது பலரும் அறிந்ததே. எனினும், சங்க காலத்திற்குப் பின் சிலப்பதிகாரக் காலத்தை ஒட்டியே இராமனை அவதார மூர்த்தியாக வழிபடும் வழக்கம் நமது நாட்டில் நிலைபெற்றிருக்க வேண்டும் என்று கருதுவது பொருந்துவதே.

'மதுர இராமாயண கதை' என்று வால்மீகி இராமாயணத்தைச் சைவ நன்மக்களும் போற்றுவாராயினர். இது சங்கப் பிற்கால நிகழ்ச்சிதான். கண்ணனையோ முல்லை நிலத்திற்கு—அதாவது காட்டுப் பிரதேசங்களுக்கு—உரிய தமிழர் தெய்வமாகச் சேக்கிழார் பெருமானும் குறிப்பிட்டுள்ளார். தமிழகத்திலுள்ள திருமாலின் கோயில்கள் பெரும்பாலும் கண்ணன் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு தோன்றியுள்ளன என்பதும் கவனிக்கத் தக்கது.

கிருஷ்ண பக்தியைப்போல் இராம பக்தியும் சங்க காலத்திற்குப்பின் நம்மவர் ஒழுக்கத்தையும் இலட்சியங்களையும் உருவாக்கி வந்திருக்கிறது. இன்று இலட்சிய சமுதாயத்தை 'இராம இராஜ்யம்' என்றுதான் காந்தியடிகளைப்போல் நாமும் குறிப்பிடுகிறோம். ஆனால் இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? சங்க காலத்திற்குப்பின் தோன்றிய பக்திப் பாசுரங்களும் கம்ப இராமாயணமும் அல்லவா? ஆழ்வார்கள் காலத்திலும் ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியர்கள் காலத்திலும் இராம பக்தி

வெள்ளமாகப் பெருகி மக்கள் வாழ்க்கையைப் பெரிதும் வளப்படுத்தி வந்திருக்கிறது என்று சொல்லவேண்டும்.

இராம பக்தியும், கிருஷ்ண பக்தியும் இந்து மக்களுக்குச் சாதி முதலான வேற்றுமைகளைக் கடந்து ஆறுதலும் ஆனந்தமும் அளித்து வந்திருக்கின்றன; வடநாட்டைப் போல் தமிழ் நாட்டிலும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் ஒற்றுமை யுணர்வையும் உருவாக்கி வந்திருக்கின்றன. கல்வி ஒளி வீசப்பெறாத மக்களும் பக்தி ஒளியால் மானுடப் பண்பின் சிறந்த அம்சங்களை வளர்த்துக் கொண்டு பேறுபெற்றிருக்கின்றனர்.

மக்களின் கலைவாழ்வையும் வளமுறச் செய்திருக்கின்றன இராம பக்தியும் கிருஷ்ண பக்தியும். 'ஓவியத்து எழுத ஒண்ணு உருவம், என்று கம்பன் பாடியிருக்கும் இராமன் திரு உருவம் தமிழகத்திலும் ஓவியக் கலையைச் சிறப்பாக வளர்த்திருக்கிறது கண்ணன் கதைகள் ஓவியக் கலைக்கு ஊட்டம் தந்திருப்பதைச் சொல்லவா வேண்டும்?

சிற்பக் கலைக்குத் தமிழகம் பேர்போனது என்பதற்கு நம் கோயில்கள் தக்க சான்று தருகின்றன. கோயில்களின் கட்டிட வளர்ச்சிக்கும் சிற்பக் கலைவளர்ச்சிக்கும் உதவியிருக்கின்றன முக்கியமாகக் கிருஷ்ண பக்தியும் ஓரளவு இராம பக்தியும். சுருங்கச் சொன்னால், இந்துக்களின் கலைகளையெல்லாம் ஊடுருவிக் கிடக்கும் இரண்டு முக்கியமான பொற்சரடுகள் என்று கண்ணன் கதையையும் இராமன் கதையையும் சுட்டிக் காட்டலாம்.

நமது நாகரிகத்திலும் பண்பாட்டிலும் வட இந்தியச் சகோதரர்களின் தத்துவக் கதைகளும் சிந்தனைகளும் இலட்சியங்களும் மட்டுமா கலந்து குலாவுகின்றன? யவனர் என்ற கிரேக்க-ரோமர்களின் நாகரிக வாடை வீச வில்லையா? அதைக் காட்டிலும் அரேபியர் பாரசீகர் முதலான அன்னியர்களின் நாகரிக மணமும் கமழத்தான் செய்கிறது நம் தமிழகத்திலே. ஆனால் தமிழ் நாகரிகம் வெறும் கூட்டுச் சரக்கன்று; தென்குமரிக்கும் வட வேங்கடத்திற்கும் இடையே வேரூன்றி உரம் பெற்று ஓங்கி வளர்ந்தவை தாம் நமது நாகரிகமும் பண்பாடும். கூட்டுச் சரக்கிலே தாய்ச் சரக்கு தமிழிலே தமிழர் விளைவித்துக் கொண்டதுதான். இதன் உயிர்நிலை சைவமும் வைஷ்ணவமும். வைஷ்ணவத்தில் இராம பக்தி கிருஷ்ண பக்திக்குப் பின் தோன்றிய தாயினும் நாளடைவில் இந்த இருவகைப் பக்தியும் ஸ்ரீ வைஷ்ணவத்தின் மிகச் சிறந்த இன்றியமையாத—பகுதியாகி விட்டன.

கிருஷ்ண பக்தியும் இராம பக்தியும் சூரியன்போலவும் சந்திரன் போலவும் நமது வாழ்க்கையை ஒளிபெறச் செய்கின்றன என்று இராஷ்டிரபதி ஸ்ரீ இராஜேந்திரப் பிரசாத் கூறியுள்ளார். ஸ்ரீவைஷ்ணவ வானத்தில் கண்ணன் சூரியன், இராமன் சந்திரன் என்று குறிப்பிடுவது ஒரு பெருஞ் சரித்திர உண்மைதான். ஆராய்ச்சிப் பேருண்மைதான். நம் மக்களின்—சிறப்பாக ஸ்ரீ வைஷ்ணவர்களின்—சௌந்தரிய உணர்ச்சிகளுடன் சன்மார்க்க உணர்ச்சிகளையும் தூண்டி வந்திருக்கின்றன பல நூற்றாண்டுகளாக இராம பக்தியும் கிருஷ்ண பக்தியும் என்பது திண்ணம்.

### கிருஷ்ண பக்தியின் இரகசியம்

இராமபக்திக்கும் மேலாகக் கிருஷ்ண பக்தி இமயமலை முதல் கன்னியாகுமரி வரையுள்ள மக்களை வசீகரித்திருப்பதும் வெளிப்படை. தமிழகத்திலும் பொதுமக்களை இராம பக்தியைக் காட்டிலும் கிருஷ்ண பக்தி வசீகரித்திருக்கிறது என்பதும் நாம் நன்கு அறிந்ததே. இந்த இரகசியம்தான் என்ன?

நமது இராஷ்டிரபதி இத்தகைய ஒரு கேள்வியைத் தமக்குத் தாமே போட்டுக்கொண்டு விடை காண முயன்றிருக்கிறார். இந்தியர்களும் இந்தியரல்லாதவர்களும் கண்ணனால் வசீகரிக்கப்படுவதற்குக் காரணம் தெய்வ பக்தி அழகுணர்ச்சியுடன் இயற்கையாகக் கிருஷ்ண பக்தியில் இசைந்து ஒன்றுபட்டிருப்பதுதான் என்கிறார். மனித சுபாவத்தின் ஆழத்தில் வேரூன்றியிருப்பது அழகுணர்ச்சி; கண்ணனே அழகுத் தெய்வம். இராமனும் அழகன்தான்; அதனால்தானே,

தோள்கண்டார் தோளே
கண்டார்!

என்றெல்லாம் கம்பன் பாடியிருக்கிறான். எனினும் ஜகன்மோகன பாலகோபாலன் என்றும், ஜகன்மோகன இராஜகோபாலன் என்

றும் போற்றப்படும் கண்ணனைத்தான் சிறப்பாக அழகுத் தெய்வம் என்று போற்றுகின்றன ஸ்ரீவைஷ்ணமும் பொதுமக்கள் உள்ளமும்.

'சிவம் வேறு அன்பு வேறு என்பதில்லை' சிவமே அன்பு, அன்பே சிவம்' என்பது சைவத்தின் சாரமான ஒரு பெருங்கொள்கை யென்றால், 'கண்ணன் வேறு, அழகு வேறு என்பதில்லை, கண்ணனே அழகு, அழகே கண்ணன்; இது வைஷ்ணவத்தின் சாரமான ஒரு பெருங்கொள்கை' என்று சொல்லி விடலாம்.

ஐயோ! இவன் வடிவென்பதொர்
அழியா அழகுடையான்

என்று கம்பன் இராமபிரானின் திருமேனியை வருணிக்கிறான். அழியா அழகே இராமனுக்கு வடிவம் என்ற இக்கொள்கை கண்ணனுக்கே முற்றும் பொருந்தும்.

ஆத்மசம்பத்தையும் சௌந்தரியத்தையும் முழுக்க முழுக்க அடையவேண்டுமென்று ஆசைப்படுகிறவர்கள் கண்ணனுடைய சௌந்தரியத்தால் வசீகரிக்கப்பட்டுத்தான் ஆகவேண்டும் என்கிறார் இராஷ்டிரபதி. இத்தகைய மனநிலைதான் 'கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை' என்று நம்மாழ்வாரைப் போன்ற ஸ்ரீவைஷ்ணவ பக்த மணிகளையும் எண்ணச் செய்திருக்கவேண்டும்.

உலக மக்களில் அழகுக் காதலையும் காண்கிறோம், தெய்வக் காதலையும் காண்கிறோம். தெய்வப் பித்தர்கள் என்றும் அழகுப் பித்தர்கள் என்றும் இரு பெரும்பிரிவினராக மக்களைப் பிரிக்கக்கூடும் என்கிறார் இராஷ்டிரபதி. மனிதனுடைய பக்தி உணர்ச்சியையும் அழகுணர்ச்சியையும் ஒருங்கே திருப்தி செய்வது எதுவோ அது எந்த மனிதனுக்கும் ஆழ்ந்த ஆத்ம சாந்தியையும் அளிக்கக் கூடியது த்தானே. இத்தகைய நிலையைப் பக்தர்கள் வருணித்திருக்கும் குழந்தைக் கண்ணனிடம் (ஜகன்மோகன பாலகோபாலனிடம்) காண்கிறோம். இது கிருஷ்ண பக்தியின் இரகசிய சக்தி.

**வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமை**

இந்திய மொழிகளில் உள்ள பல இலக்கியங்களில் இத்தகைய கிருஷ்ண பக்திப் பாடல்கள் பாடப்பெற்றிருக்கின்றன. வங்க மொழியில் சூர்தாஸ் முதலானவர்கள் பாடியிருப்பதுபோல், நம் தமிழ்மொழியில் பெரியாழ்வாரும் குலசேகராழ்வாரும் பாடியிருக்கிறார்கள். இசை யுலகிலும் இத்தகைய கிருஷ்ணபக்தி ஊடுருவிக் கிடப்பதைக் காணலாம். நாட்டியக் கலையிலும் கிருஷ்ண பக்தி இடம் பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

கலையுலகிலே கிருஷ்ண பக்தி பலவேறு பிரதேசங்களிலுள்ள மக்களை ஒன்றுபடச் செய்திருக்கிறது; பல வேறு மொழிகளைப் பேசுவோரை இணைத்திருக்கிறது. பல்வேறு சமயக் கொள்கையினரும் கிருஷ்ண பக்தி என்ற பாசத்தால் கட்டுண்டிருக்கிறார்கள் நமது நாட்டிலே என்று கூறுவதும் மிகையாகாது. சுருங்கச் சொன்னால், கிருஷ்ண பக்தி இந்தியப் பண்பாட்டின் ஒருமைக்கும் இந்திய நாகரிகத்தின் ஒருமைக்கும் சிறப்பாக உதவியிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

இந்திய சரித்திரத்தில் வைஷ்ணவக் கொள்கையின் உயிர்நிலையான கிருஷ்ண பக்திக்கு வேறு எத்தகைய பக்திக்கும் இல்லாத சிறப்புரிமை ஒன்று உண்டு என்பர். அது தான் இனம், மொழி, பிரதேசம் ஆகிய வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமை காட்டியிருக்கும் சக்தி.

**இன்றும் அன்றும்**

வைஷ்ணவர்கள் வணங்கிவந்த திருமாலை முல்லைநிலத் தெய்வமாகக் கருதிய சங்ககாலத் தமிழ் மக்கள் இன்றுபோல அன்றும் இப்பெருமான் நீலநிறமும் சிவந்த கண்களும் பொன்னுடையும் கருடக்கொடியும் மார்பிலே கௌஸ்துப மணியுமாகக் காட்சி தருவதாய்க் கருதினார்கள். நீலநிறம் எல்லையற்ற சக்தியையும் எங்கும் இறைவன் பரவியிருக்கும் நிலையையும் நினைவூட்டுகிறது. சிவந்த கண்கள் காதலாகிக், கசிந்து மக்களுக்குக் கருணைபுரியும் நிலையை நினைவூட்டுகிறது. வாகனமாகவும் கொடியாகவும் உள்ள கருடன் கடவுளுண்மையைப் போதிக்கும் வேதத்தை நினைவூட்டுகிறது. இத்தகைய உட்பொருளையும் சங்ககாலத்து நல்லறிஞர்கள் உணர்ந்திருந்தார்கள் என்று ஊகிக்கலாம்.

திருமாலின் மார்பில் மகாலட்சுமி தங்குகிறாள், அதனால்தான் திருத்தங்கும் மால்

திருமால் ஆகிறுன் என்ற ஸ்ரீவைஷ்ணப் பேருண்மையைப் பரிபாடல் தோன்றியகாலத்தில் நன்ருக அறியப்பெற்றிருந்தது என்று துணியலாம். பெண்ணின் நல்லாளொடு பெருந்தகையாகிய சிவபெருமான் வீற்றிருப்பதை இங்கே நினைவூட்டிக் கொள்ளலாம்.

அன்பர்கள் விரும்பிய வடிவம்கொண்டு வரைந்து வந்து மக்களை அன்புருவாகிய ஆண்டவன் காப்பாற்றுகிருன் என்ற பெருங்கொள்கையின் இன்றியமையாத பகுதியாக அவதாரம் வைஷ்ணவர்களால் மதிக்கப்படுகிறது. இதுவும் சங்ககாலத்தில் அறியப்பட்டிருந்தது. எல்லாப் பிறப்பிலும் பிறந்த பெருமானை ஒருவரும் பிறப்பிக்கவில்லை என்ற கருத்தும் பரிபாடலில் காணப்படுவதுதான். சில அவதாரக் கதைகளும் இந்த நூலில் காணப்படுகின்றன.

சங்க காலத்திற்கு முன்பே திருமால் வழிபாடு தோன்றி வளர்ந்திருக்கக் கூடும். சங்ககாலத்தின் இறுதிப் பகுதியிலும் சங்க காலத்திற்குப் பின்பும் வைஷ்ணவக் கொள்கைகள் இந்நாட்டில் விரைந்து பரவி வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

ஆலமரம், கடம்பமரம், ஆற்றிடைக் குறை, குன்றம், இவைபோன்ற வேறு இடங்கள் ஆகியவை திருமால் எழுந்தருளியிருக்கும் இடங்கள் என்ற கருத்தும் அக்காலத்து மக்களிடையே காணப்பட்டது. இக்கருத்தும் நாளடைவில் விரைந்து வளர்ச்சி பெற்று வந்தது எனலாம்.

அழகிய இனிய இடங்களிலெல்லாம் அழகனுகிய திருமால் வசிக்கின்ருன் என்பது பண்டைத் தமிழர் கொள்கைதான். அழகுத் தெய்வம் அவர்களுக்கு முருகனுகக் காட்சியளித்ததுபோல் திருமாலாகவும் காட்சியளித்தது. கண்ணனுகக் காட்சி யளித்ததுபோல் அழகுத் தெய்வம் சங்க காலத்திற்குப் பின் இராமனுகவும் தமிழர்களுக்குக் காட்சி யளித்தது.

திருப்பூவனூர், ஸ்ரீ சதுரங்கவல்லபநாதசுவாமி கோயில் ஸ்ரீ சாமுண்டீசுவரி அம்மனுக்கு இலட்சார்ச்சனை 22-1-60 ஆரம்பிக்கபெற்று 12-2-60 முடிய சிறப்பாக நடைபெற்றது.

சென்னை, வடபழநி ஆண்டவர் கோயிலில் இவ்வாண்டு பிறப்பு அன்று 1-1-60ல் இரண்டாயிரம் அர்ச்சனைகளும் முன்நூறு தீபாராதனைகளும் நடைபெற்றன. 8-2-60 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு ஷை கோயிலில் ஸ்ரீ நடராஜர் சந்நிதியில் முதன்முதலாகத் திருமுறைக்கோயில் பிரதிஷ்டையை சென்னை அறநிலையத்துறை ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்-, அவர்களால் நிகழ்த்தப்பெற்றது.

வடலூர், திரு அருட்பிரகாசா வள்ளலார் தெய்வ நிலையங்களில் தைப்பூச விழா 10-2-60 முதல் 13-2-60 வரை சிறப்பாக நடைபெற்றது.

திருவிடைமருதூர், ஸ்ரீ பிருகத்சுந்தரகுசாம்பிகை ஸ்ரீ மகாலிங்க சுவாமி கோயிலில், தைப்பூச விழா 24-1-60 முதல் 11-2-60 வரை சிறப்பாக நடைபெற்றது.

அதிராம்பட்டினம், ஸ்ரீ அபயவரதேசுவரசுவாமி கோயிலில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக விழா 7-2-60ல் நடைபெற்றது.

பூவாளூர், ஸ்ரீதிருமூலநாத சுவாமி கோயிலில் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு 4-1-60 இலட்சார்ச்சனை வெகு விமரிசையாகத் திருப்புகழ் சபையாரின் ஆதரவில் நடைபெற்றது. கடைசி நாளாகிய 15-1-60 தேதியன்று சிறப்பான பூஜையும் நடத்தப்பெற்றது.

# ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்-1

(பி. ஸ்ரீ.)

பலராமாவதாரத்திற்குப் பின்னும் கடைசி அவதாரமாகிய கல்கி அவதாரத்திற்கு முன்னும் நிகழ்ந்த ஒன்பதாவது அவதாரம் கிருஷ்ணாவதாரம். ஜயதேவரோ பலராமாவதாரத்தைக் குறிப்பிடாமல் கிருஷ்ணாவதாரத்தையே எட்டாவது அவதாரமாய்ப் பாடியிருக்கிறார். இவர் புத்தர் பெருமானை ஒன்பதாவது அவதாரமாக்கி இனி வரப் போகும் கல்கி அவதாரத்தைக் கடைசி அவதாரமாகக் குறிப்பிடுகிறார்.

## பெருமையே எளிமை !

இறைவன் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வதற்காகப் பல்வகை அவதாரங்களும் செய்கிறான், இவற்றில் பத்து முக்கியமானவை என்பர். இந்தப் பத்து அவதாரங்களைத் தசாவதாரம் என்கிறோம். அவதார மூர்த்திகளான இராமனும் கிருஷ்ணனும் மக்களுடன் கலந்து அவர்களைத் திருத்திப் பணிகொண்டதைப் போன்ற நிகழ்ச்சிச் சிறப்பை வேறு அவதாரங்களில் காண்பது அரிது. கிருஷ்ணாவதாரத்தின் தனிப்பெருஞ் சிறப்பை இராமாவதாரத்திலும் பார்க்க முடியாது என்பது பக்தர்களின் கருத்து.

'அடியவர்க்கு எளிமை கிருஷ்ணாவதாரத்தில் வெளிப்படுவது போல் வேறு எந்த அவதாரத்திலும் வெளிப்படுவதில்லை. தூது போன கண்ணனின் எளிமையை இராமபிரானிடத்திலும் காண முடியவில்லை. எனவே, சிறையிருந்தவள் ஏற்றம் சொல்வது இராமாயணம் என்றும், கழுத்திலே ஓலை கட்டிக் கொண்டு தூதுபோன வைபவம் சொல்லுவது மாபாரதம் என்றும் ஸ்ரீ வைஷ்ணவப் பேரறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஸ்ரீ வைஷ்ணவத்தை விசிஷ்டாத்வைதம் என்றும், ஸ்ரீ சங்கராசாரியரின் வேதாந்தக் கொள்கையை அத்வைதம் என்றும் கூறுவதுண்டு. கி. பி. பதினாறும் நூற்றாண்டில் வங்காள தேசத்தைச் சேர்ந்த மதுசூதன சரஸ்வதி என்ற அத்வைத ஞானி ஒருவர் இருந்தார். இவர் சங்கர வேதாந்தத்தைப் பின்பற்றிய பெரியாராக இருந்தும், தமக்குக் கண்ணன் தான் இஷ்ட தெய்வம் என்கிறார். நாமரூபம் (பெயரும் உருவமும்) இல்லாத பரப்பிரமத்தை நாடுகிறவர்கள் நாடிப் போகட்டும், தனக்குக் கண்ணனின் எளிமை போதும் என்று பொருள்படப் பேசுகிறார்.

ஸ்ரீ கிருஷ்ணோபநிஷத் என்ற பெயருள்ள உபநிஷதம் ஒன்று இருக்கிறது. இது கிருஷ்ணாவதாரத்தின் சிறப்பை வெளியிடுகிறது. பிரதான உபநிஷதங்களுக்குப் பின் தோன்றிய உபநிஷதங்களில் ஒன்றுதான் இது. இந்த உபநிஷதத்தில், ஆண்டவன் மனிதனாகப் பிறக்க இசைந்ததும் முக்தி தேவியே யசோதையாகப் பிறந்தாள் என்ற ஒரு செய்தி காணப்படுகிறது.

தேவகியாகப் 'பிரமவித்யா மாயை' பிறந்ததாகவும், வேதம் வசுதேவ ரூபத்தில் வந்ததாகவும், இந்த உபநிஷதம் தெரிவிக்கிறது. வேதத்தின் உட்பொருளே வசுதேவ புத்திரனான வாசுதேவன் என்கிறது. ருத்திர மூர்த்தியே கண்ணனது புல்லாங்குழலாக அமைந்ததாகவும் இந்த உபநிஷதம் அறிவிக்கிறது.

கோகுலம் என்ற ஆய்ப்பாடி வைகுந்தமே இறங்கி வந்ததுதானாம். கோகுலத்திலுள்ள மரங்கள் எல்லாம் கண்ணன் இருக்கும் இடத்திலே தவம்புரிந்து பேறுபெற வந்த தவசிகளாம். கோகுலத்தில் அசுரர்களும் வந்தார்களே என்றால் அந்த இரகசியம் என்ன, தெரியவேண்டாமா? எவ்வளவு ரசமாக ஸ்ரீ கிருஷ்ணோபநிஷதம் இதற்கு விடை தருகிறது! கோபம் பேராசை முதலான

துர்க்குணங்களே அசுர உருவங்கள் கொண்டனவாம்.

ஆதிசேஷன் பலராமனுகத் தோன்றினுன் என்றும், இந்த உபநிஷதம் சொல்லுகிறது. பூமிதேவி சத்திய பாமையாக வந்தாள் என்றும், வேதங்களின் ரிக்குகள் ருக்மிணி முதலான தேவிமாராகத் தோன்றின என்றும் இதே உபநிஷதம் தெரிவிக்கிறது. கலிபுருஷனே கம்சனுக வந்து வதம் செய்யப்பட்டானும்.

பாற்கடலில் துயிலும் பரம்பொருளே கண்ணனுக வந்தான் என்பதற்கு ஒரு ரசமான சான்றையும் இந்த உபநிஷதம் காட்டுகிறது. உறியிலுள்ள கலயங்களைக் குழந்தைக் கண்ணன் உடைத்தபோது சில கலயங்களில் உள்ள பால் வெள்ளமிட்டு ஓடியதாம். பாற்கடல் வெள்ளத்தின் அறிதுயில் கலந்து வந்தவன் இவன் என்பதற்கு இப்படிப் பாலை வெள்ளமாக ஓடவிட்டுப் பார்ப்பதும் ஒரு சான்றுதான் என்கிறது இந்த உபநிஷதம்.

பாற்கடலில் இப் பெருமான் அறிதுயில் அமர்ந்திருக்கிருன் என்பது மட்டுமில்லை, ஒரு குழந்தையாக அங்கே விளையாடிக் கொண்டிருக்கிருன், எப்போதும் விளையாடிக்கொண்டிருக்கிருன் என்றும் தெரிவிக்கிறது ஸ்ரீ கிருஷ்ணேபநிஷதம். பக்தியே கிருஷ்ண லீலை நடைபெற்ற பிருந்தாவனமாம்; புத்தியே கிருஷ்ணனது செயல் திறன் என்ற கிரியா சக்தியாம்.

ஜயதேவருடைய கீதகோவிந்தமும் கண்ணனின் எளிமையாகிய தனிப் பெருஞ்சிறப்புக்குச் சான்று தருகிறது. கண்ணன், ராதை, சகி (தோழி) என்ற மூவரையே கதாபாத்திரங்களாகக் கொண்டிருக்கிறது கீதகோவிந்தம். இந்தப் பாத்திரங்களில் கண்ணன் பரமாத்மா, ராதை ஜீவாத்மா, தோழி ஆசாரியன்.

புருஷோத்தமனுகிய கண்ணனே புருஷன், ஜீவாத்மாக்கள் எல்லாம் பெண்கள், புருஷோத்தமனுக்குரிய காதலிமார் என்பது கீதகோவிந்தத்தின் அடிப்படைக் கொள்கை. இந்தக் கொள்கையுடன் அதிதீவிர பக்தியை விளக்கத் தோன்றியது கீதகோவிந்தம். ஆழ்வார்களின் பாசுரங்களில் காணப்படும் நாயகநாயகி பாவத்தையும் உட்கருத்தையும் கி. பி. பதினெராம் நூற்றுண்டில் தோன்றிய கீத கோவிந்தத்திலும் காண்கிருேம்.

கிருஷ்ண கர்ணுமிருதத்திலும் ஸ்ரீ கிருஷ்ணுவதாரத்தின் தனிச் சிறப்பு வற்புறுத்தப்படுகிறது. இதை இயற்றியவர் லீலாசுகர். அழகிற்கு எல்லையான கண்ணன் திருமேனி இவரைத் திருத்திப் பணி கொண்டதாம். ஸ்ரீ பாகவதம் பத்தாம் ஸ்கந்தத்தில் வரும் கோபிகா கீதமும் கண்ணனின் எளிமையாகிய பெருஞ்சிறப்பைப் பேசுகிறது.

கண்ணன் தங்களிடம் காட்டும் காதலுக்குத் தங்கள் அழகே காரணம் என்று கோபிகைகள் செருக்குற்றிருந்தார்களாம். அந்தச் செருக்கைப் போக்கி அவர்களுக்கு அருள் புரியவேண்டுமென்று கண்ணன் மறைந்தருளினுன். கோபிகைகள் அவனைத் தேடிக் காணுமல் வருந்தினுர்கள். அவனது அழகிய குணங்களைப் பாடினுர்கள். இப்படிக் கானம் செய்ததுதான் கோபிகா கீதம். இதில் கண்ணனைத் தங்கள் உறவினன் என்கிருர்கள் இவர்கள்.

விஷ்ணு சகஸ்ரநாமம் மகாபாரதத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது பிற்காலச் சேர்க்கை என்று ஆராய்ச்சியாளர் கருதிய போதிலும் இதுவும் மகாபாரத ஆசிரியரான வியாச முனிவர் வாக்கே என்பது நம் மக்களின் நம்பிக்கை. இது (சகஸ்ரநாமம்) கிருஷ்ணுவதாரத்தின் பெருமையையும் எளிமையையும் சிறப்பாக வெளியிடுகிறது என்கிருர்கள். ஆயிரம் திருப்பெயர்களுக்கும் ஆயர்திலகமான கண்ணனே உரிய தெய்வம் என்று பீஷ்மாசாரியன் சொன்னதாகப் பாரதம் தெரிவிக்கிறது.

**மகத்தான எளிமை**

சகஸ்ரநாமத்தின் பலச்ருதி வாசுதேவ கிருஷ்ணனையே சிறப்பித்துப் பேசுகிறது. இந்த வாசுதேவ கிருஷ்ணனின் பெருமைதான் என்ன ? வசுதேவ புத்திரனுகப் பரம்பொருள் வந்தது என்ற எளிமைதான் இதன் சிறப்பான பெருமை !

கடவுளிடத்தில் எல்லா உயிர்களும் அடங்கி உள்ளன என்பது பிரசித்தம் அல்லவா ? அற்ப உயிர்களையும் அற்பம் என்று

ஒதுக்கி விடாமல் இறைவன் தன்னிடம் தங்க இடம் கொடுத்திருப்பதே எளிமைக்குச் சான்றுதான். அத்ததைய இறைவன் வசுதேவனுக்கும் தேவகிக்கும் குழந்தையாகப் பிறந்தான் என்ற அவதார நிகழ்ச்சி எத்தகைய மகத்தான எளிமைக்குச் சான்ருகிறது பாருங்கள்!

கண்ணன் கீதாசாரியனுகக் காட்சியளிப்பதும் மகத்தான எளிமைக்குச் சான்றுதான். ஜகத் குருவாகிய கீதாசாரிய ஸ்தானம் மகத்தானது; சகலவேத சாஸ்திரங்களின் சாரமான கீதையும் மகத்தான சாஸ்திரம் தான்; ஆனுல் பகவத் கீதையும் பரம்பொருளின் மகத்தான கருணைக்குச் சான்று தானே.

கீதா சாஸ்திரம் பரம ஞான சாஸ்திரமாகப் போற்றப்படுவதும், பக்தியோகப் பெரு நூலாக மதிக்கப்படுவதும் உண்மைதான். எனினும் சரணுகதி தருமத்தைப் பரம தாத்பரியமாக வெளியிடும் பகவத்கீதை தேர்த்தட்டு வார்த்தை என்று எளிமையாகக் குறிக்கப்படும் நிலையில் அர்ச்சுனனுக்குப் போர்க்களத்தில் சொல்லப்பட்டது தானே.

வடமொழியில் முகுந்த மாலை என்ற ஒரு பிரபந்தம் இருக்கிறது. இதன் ஆசிரியர் குலசேகரப் பெருமான் என்பர். இவர் ஆழ்வார் குலசேகரர் தாமா என்பதில் ஐயப்பாடு உண்டு. இந்தப் பிரபந்தத்திலே கண்ணன் மூவுலகையும் காப்பதற்காக வந்த ரட்சமணி என்று வருணிக்கப்பட்ட போதிலும், கோபிகைகளின் கண்களுக்கு மேகமணி என்று சிறப்பாகக் குறிக்கப் பெறுகின்ருன்.

அமரர்களுக்குச் சிரோபூஷணமணியாகிய தேவதேவன் ஆயர்களுக்குச் சூடாமணி என்றும் சிறப்பிக்கப் பெறுகின்ருன். ஸ்ரீ முகுந்த மாலையில் இந்தப் பிரபந்தம் கண்ணனைப் பொதுவாக அழகுக்கு முத்திரா மணி என்கிறது; ருக்மிணிக்கு அலங்கார மணி என்கிறது. கண்ணனிட மிருந்தே—இத்தகைய எளிமை வாய்ந்த கண்ணனிட மிருந்தே-உலகம் தோன்றுகிறது என்றும் முகுந்த மாலை ஆசிரியர் கூறுகிருர்.

**கண்ணனும் பாகவதமும்**

கண்ணன் கதைகள் சிறப்பாகப் பாகவதத்தில் காணப்படுகின்றன என்பது பிரசித்தம். மகாபாரதம், விஷ்ணு புராணம், ஹரிவம்சம் முதலான நூல்களிலும் கண்ணன் கதைகளைக் காண்கிருேம். எனினும் ஸ்ரீமத் பாகவதம் என்று சொல்லப்படும் புராணத்திற்குக் கண்ணனுடன் விசேஷமான தொடர்பு உண்டு.

ஸ்ரீமத்பாகவதம் பதினெட்டுப் புராணங்களில் ஒன்ருகும் என்பர். இதையும் வியாச முனிவர் (மகாபாரதம் சொன்ன வியாச முனிவர்) சொன்னுர் என்பர். வியாச புத்திரரான சுகப்பிரமம் என்ற முனிவர் பரீட்சித்து மன்னனுக்குச் சொல்லும் முறையில் அமைந்திருக்கிறது பாகவதம். இதைச் சிலர் இதிகாச பாகவதம் என்றும் சொல்லுவதுண்டு.

மகாபாகவதம் என்ற புராண பாகவதம் நாரத முனிவர் சொல்ல ருக்மிணி கேட்டதாக அமைந்திருக்கிறது. சம்மிதா பாகவதம் என்ற ஒன்று வைசம்பாயன முனிவர் சொல்ல ஜனமேஜய மன்னன் கேட்டதாக அமைந்திருக்கிறது. உபசம்மிதா பாகவதம் என்ற நூல் ஒன்று திருமாலின் முப்பத்திரண்டு அவதார சரித்திரங்கள் கொண்டதாய் அகஸ்திய முனிவர் சுதர்சனருக்குச் சொன்ன முறையில் அமைந்திருக்கிறது. விஷ்ணு ரகசிய பாகவதம் என்ற ஒரு நூல் ஹாரீத முனிவர் காசியபருக்குச் சொன்ன ரீதியில் காணப்படுகிறது. விஷ்ணு யாமள பாகவதம் பராசர முனிவர் மைத்திரேயருக்குக் கூறிய பாணியில் காணப்படுகிறது. கௌதம சம்மிதா பாகவதம் கௌதம முனிவர் கௌசிக முனிவருக்குச் சொன்ன முறையில் அமைந்திருக்கிறது.

இப்படி வடமொழியில் ஏழு பாகவதங்கள் இருக்கின்றன என்ற செய்தி கௌதம சம்மிதை என்ற நூலில் பாகவத லட்சணம் என்ற ஓர் அத்தியாயத்தில் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இவற்றுள் ஸ்ரீமத் பாகவதம் பல இந்திய மொழிகளிலும் பெயர்த்து எழுதப் பெற்று நாடெங்கும் பரவியிருக்கிறது.

பதினெட்டுப் புராணங்களில் ஸ்ரீமத் பாகவதத்தின் ஸ்தானத்தைத் தேவீ பாகவதத்திற்கு அளிப்பவர்களும் உண்டு. எனவே, பாகவதம் என்றதும் 'எந்தப் பாகவதம்?' என்று கேட்பவர்களும் உண்டு. ஸ்ரீமத் பாகவதம் பிற்காலத்தில் தோன்றியதே என்று

கருதுவோரும் உண்டு. தேவீ பாகவதம் தேவி பக்தர் ஒருவரால் எழுதப்பட்டுப் பதினெண் புராணங்களுடன் சேர்க்கப் பெற்றதுதான் என்று கருதுவோரும் உண்டு.

**பாகவதம் தோன்றியதேன் ?**

**(கிளிகோத்த விழுந்தது)**

நன்மை தரும் பல நூல்களை உலகத்திற்கு அளித்தும் வியாசமுனிவர் தம் உள்ளத்தில் அமைதி பெருமல் இருந்தாராம். அந்த நிலையில் நாரத முனிவரைக் கண்டார். வியாசரின் உள்ளக் கலக்கத்தை உணர்ந்து கொண்ட நாரதர், 'வியாசரே' இதய சாந்தி அளிக்கும் ஆற்றல் பக்திக்குத்தான் உண்டு; அந்தப் பக்தியைத் தாங்கள் எந்த நூலிலும் சிறப்பாக எடுத்துக் காட்டவில்லையே!' என்ருர்.

இப்படிச் சொன்ன நாரதரே பாகவதத்தை இயற்றுமாறு வியாசரைத் தூண்டினுர். எனவே, முழுக்க முழுக்கப் பக்தி புலப்பட வியாசர் பாகவதத்தை இயற்றினுராம். பிறகு வியாசர் இந்த நூலைத் தம் அருமைப் புதல்வரான சுகரிடம் கொடுத்தார். சுகர் இதைப் பிரசாரம் செய்தார். இது பாகவதத்தின் வரலாறு என்பர்.

சுகமுனிவர் தந்தையான வியாசரைக் காட்டிலும் சிறந்த ஞானியாகவும் கடுந்துறவியாகவும் வாழ்ந்தார். இத்தகைய துறவியே கண்ணன் கதைகளை ஞானசிகரமான தத்துவமாகக் காட்டுவதால் இக் கதைகளுக்குத் தனிப்பெருஞ் சிறப்பு உண்டு என்பர். வேதமாகிய கற்பக விருட்சத்தில் உச்சிக் கொம்பிலே கனிந்த கனியாகக் காணப்பட்டதாம் ஒரு பழம். அது கிளிகொத்தக் கீழே விழுந்தது; அது தான் பாகவதம் என்கிருர்கள். கிளிக்குச் 'சுகம்' என்ற ஒரு பெயரும் உண்டு இந்தக் கிளிதான் சுகர் என்ற முனிவர்!

என்ன அழகான கதை எவ்வளவு அழகாய்ப் பாகவதத்தின் தோற்றத்தை வருணிக்கிறது! வேதத்தின் கொம்பிலே கனிந்த கனியாகப் பாகவதம் கிருஷ்ண பக்தியை நமக்குப் புலப்படுத்துகிறதாம். இந்தப் பக்தி நூலைச் சுகர் ஏழு நாளில் மரணமடையப் போகும் பரீட்சித்து மன்னனுக்கு ஆறுதல் அளிப்பதற்காக உபதேசித்தாராம்.

ஸ்ரீமத் பாகவதத்தில் பன்னிரண்டு ஸ்கந்தங்கள் என்ற பிரிவுகள் உண்டு. வசுதேவ புத்திரனுகக் கண்ணன் அவதரித்துத் திருவிளையாடல்கள் புரிந்து உலகத்தை உய்வித்த கதை பத்தாவது ஸ்கந்தத்தில் விரிவாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கிருஷ்ண கர்ணுமிர்தத்தை லீலாசுகர் என்ற பக்தர் இயற்றியதும் சுகமுனிவர் சொன்ன கண்ணன் கதையை ஒட்டித்தான் என்பது வெளிப்படை.

நாராயணீயம் என்ற பிரசித்தமான பக்த காவியம் ஒன்று இன்றும் பிரசாரத்தில் இருக்கிறது. இதனை நாராயண பட்டதிரி என்ற நம்பூதிரி இயற்றினுர். இது குருவாயூரப்பன் என்ற கண்ணபிரானைப் போற்றுவதாக அமைந்திருக்கிறது. இந்த அருமையான பக்தி நூலும் ஸ்ரீமத் பாகவத கதையைத் தழுவியதுதான். வேதாந்த தேசிகர் இயற்றிய 'யாதாவாப் யுதயம்' என்ற நூலிலும் பாகவத வாடை வீசுகிறது என்பர்.

இவையெல்லாம் பக்தியின் தனிச் சிறப்பைப் புலப்படுத்துகின்றன. எளிதில் உள்ளத்தைப் புனிதமாக்கிக் கொண்டு பேறு பெறும் வழியைக் காட்டுவது பக்திதான் என்ற கொள்கையை வெளியிடும் பிற்காலப் பிரபந்தகளெல்லாம் ஸ்ரீமத் பாகவதத்தைத் தழுவியனவே. இந்த நிலையில், பாகவதம் தோன்றியது பக்தியை ராஜவழியாக மக்கள் அனைவர்க்கும் காட்டுவதற்குத் தான் என்று கருதுவது பொருந்துமல்லவா?

**தமிழரும் கண்ணன் கதைகளும்**

பாகவத காலத்திற்கு முன்பே கண்ணன் கதைகள் நம் தமிழகத்திலும் இடம் பெற்றிருந்தன. பாகவதத்தில் காணப்படாத (கண்ணனைப் பற்றிய) செய்திகளும் பழைய தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. கண்ணனும் பலராமனும் விளையாடிய இளம்பருவ விளையாடல்கள் தமிழகத்திலும் நாடக ரூபமாக ஆடப்பெற்று வந்தன. கண்ணனைக் கறுப்பன் என்றும், பலராமனை வெள்ளையன் என்றும் பாமரமக்களும் நீண்ட காலமாக நம் தமிழ்நாட்டில் அறிந்திருந்தனர்.

இப்படி வழி வழியாகக் கண்ணனையும், ஒருவாறு கண்ணன் கதைகளையும் அறிந்

திருந்த தமிழ் மக்களுக்கு வடமொழிப் பாகவதத்தைத் தமிழில் முதல் முதல் மொழி பெயர்த்தளித்த புலவர் மாதவ பண்டிதர் என்ற செவ்வைச் சூடுவார். இவர் வேம்பத்தூரார் என்று பிரசித்தி பெற்றிருக்கும் தமிழறிஞர் கூட்டத்தைச் சார்ந்தவர்.

வேறொரு பாகவதமும் தமிழில் உண்டு. செவ்வைச் சூடுவார் பாகவதத்தைப் பாகவத புராணம் என்று வழங்குகிறார்கள். 'மகா பாகவதம்' என்று சொல்லப்படும் மற்றப் பாகவதத்தை 'ஐயங்கார் பாகவதம்' என்றும் கூறுவதுண்டு. இந்த ஐயங்கார் வரதராஜ ஐயங்கார் என்ற அருளாள தாசர். இந்தப் பாகவதம் பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியது.

ஐயங்கார் பாகவதம் ஸ்ரீமத் பாகவதத்தின் மொழிபெயர்ப்பு அன்று. நாரதர் ருக்மிணிக்குச் சொன்னதாக மகாபாகவதம் என்ற ஒரு நூலைக் குறித்துப் பிரஸ்தாபித்தோமல்லவா ? அதன் மொழிபெயர்ப்பே ஐயங்கார் பாகவதம். இக்குறிப்பை இந்தத் தமிழ்ப் பாகவதத்திலேயே காண்கிறோம். ஐயங்கார் பாகவதத்துப் பாடல்களின் தொகை 9147. வடமொழி மகாபாகவதத்தின் சுலோகங்கள் பதினெண்ணாயிரம்.

ஐயங்கார் பாகவதத்தில் ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீரங்கநாயகி முதலானவர்களுக்கு வாழ்த்துகள் காணப்படுகின்றன. இப்புலவர் ஆழ்வார் ஆசாரியர்களையும் வாழ்த்திச் செல்லுகிறார். இப்புலவருக்குக் கம்ப இராமாயணத்தில் உள்ள பற்று அதிகம். 'கம்பன் மொழி செந்தமிழின் கவித்திறத்தின் காட்சி' என்று இவர் தம் அவையடக்கச் செய்யுளில் கூறுவது நோக்கத்தக்கது.

இராம கதைக்குக் கம்பன் கிடைத்தது போல் கண்ணன் கதைக்கு மகாகவி ஒருவரும் தமிழில் கிடைக்கவில்லை யென்றாலும் கண்ணன் கதைகள் தமிழ் மக்கள் உள்ளத்தில் சாதாரண நூல்கள் வாயிலாகவும் நிலை பெற்றுவிட்டன என்பதற்குக் குசேலோபாக்கியானம், கஜேந்திர மோட்சம் முதலான நூல்கள் சான்றாகும். கண்ணன் திருவிளையாடல்களைக் குறிக்கப்படும் கீர்த்தனங்களும் தமிழர்களிடையே கண்ணனது தனிச்சிறப்பு என்று கருதப்படும் எளிமையாகிய பெருமையை நிலை நிறுத்தியிருக்கின்றன என்று கருதலாம்.

நம் தேசீய கவியாகிய பாரதியாரும் இன்றைய தமிழிலக்கியத்தில் கிருஷ்ண பக்தியை வேரூன்றச் செய்திருக்கிறார். இவரது கண்ணன் பாட்டை அறியாத இன்றைய தமிழர் இல்லை. பாரதியாருக்குக் கண்ணனே பராசக்தியாகவும் காட்சியளித்தான், பிற தெய்வங்களாகவும் காட்சியளித்தான். பாரதியார் வாக்கிலும் கிருஷ்ணவதாரத்தின் தனிச்சிறப்பு இனிது புலனாகிறது.

['கண்ணன் பிறந்தான்' — அடுத்த கட்டுரை.]

**திருஅவளிவணல்லூர்** ஸ்ரீ காமாட்சிநாதசுவாமி கோயிலில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 1-2-60ல் தொடங்கி 10-2-60-ல் சிறப்பாக நடைபெற்றது.

**மதுரை,** ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலில் தெப்ப மகோற்சவம் 30-1-60 முதல் 11-2-60 முடிய சிறப்பாக நிகழ்ந்தது.

**மதுரை,** திருப்பரங்குன்றம், ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயிலில் தெப்ப மகோற்சவ விழா 29-1-60 முதல் 7-2-60 முடிய சிறப்பாக நடத்தப்பெற்றது.

**திருவெண்காடு,** ஸ்ரீசுவேதாரண்யேச்வர சுவாமி கோயிலில் இந்திர மகோற்சவ விழா 7-2-60 முதல் 21-2-60 முடிய சிறப்பாக நடைபெற்றது.

**திருநாங்கூர்,** கீழ்த்திருக்காட்டுப்பள்ளி, ஸ்ரீகோலவல்லிராமசுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகாசம்ப்ரோக்ஷணம் 7-2-60ல் தொடங்கி 10-2-60ல் சிறப்பாக நடைபெற்றது.

# செய்திகள்

**வைத்தீசுவரன்கோயில்,** ஸ்ரீ வைத்தியநாதசுவாமி கோயில் 31-1-60 முதல் 9-2-60 முடிய ஸ்ரீ செல்லமுத்துக்குமாரசுவாமி உற்சவம் நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும், இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

**தென்காசி,** ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமி கோயிலில் 27-1-60 புதன்கிழமை பத்திரதீப விழா சிறப்பாக நடைபெற்றது. கோயில் முழுவதும் தீபாலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. இரவு இடபவாகனங்களில் சுவாமி அம்பாள் வீதி உலாவும் நடைபெற்றது.

**காரைக்குடி,** ஸ்ரீ கொப்புடையம்மன் ஸ்ரீ காட்டம்மன் கோயிலில் ஜீரணோத்தாரண - அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா 10-2-60ல் சிறப்பாக நடைபெற்றது.

**சென்னிமலை,** ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தைப்பூசத் திருவிழா 3-2-60 ஆரம்பிக்கப்பெற்று 16-2-60 வரை சிறப்பாக நடைபெற்றது. 12-2-60ல் இரத உற்சவமும், 14-2-60 தெப்ப உற்சவமும் இன்னிசையரங்கும் நடைபெற்றன.

**திருமண்டங்குடி,** 25-1-60 மாலை பெரிய திருமஞ்சனமும், இராத்திரி பெருமாள் கருடவாகனத்திலும், ஆழ்வார் அன்னவாகனத்திலும் எழுந்தருளினர். மகாசம்ப்ரோக்ஷணை ஆனவுடன், திருவரங்கம், திருமாலிருஞ்சோலை, ஸ்ரீ வில்லிபுத்தூர் திருஇந்தளூர், நாச்சியார் கோயில், திருச்சேறை முதலிய ஏழு திவ்யதேசத்தெம்பெருமான்களது பரிவட்டம், மாலை, பிரசாதங்கள் ஆழ்வாருக்கு அந்தந்த திவ்யதேசப் பாசுரங்கள் சொல்லி வழங்கப்பெற்றன.

**இராமநாதபுரம்,** சமஸ்தானம் கோயில்களைச் சேர்ந்த, சைவ, வைணவ ஆலயங்களில் இவ்வாண்டு, திருப்பாவை - திருவெம்பாவை விழாவும், மாநாடுகளும் நன்முறையில் நடைபெற்றன. ஆங்காங்கு தக்க அறிஞர்களைக்கொண்டு பள்ளிச்சிறுவர் சிறுமியருக்கு முன்னதாகவே பாவைப்பாடல்களைக் கற்றுக்கொடுக்கும்படிசெய்து, போட்டியில் கலந்துகொண்ட எல்லாக் குழந்தைகளுக்கும், திவான் அவர்களால் வெள்ளிப்பதக்கங்களும், காஞ்சிகாமகோடி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன் வந்த பொன் வெள்ளிக்காசுகளும், புத்தகங்களும் பரிசுகளாக வழங்கப்பெற்றன. இதற்காக தேவஸ்தானத்தாரால் விளக்கவுரையுடன் கூடிய பாவைப்பாடல்கள் ஆயிரம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு பள்ளிச்சிறுவர் சிறுமிகளுக்கும் பொதுமக்களுக்கும் இலவசமாக வழங்கப்பெற்றன. இராமநாதபுரம் சொக்கநாதசுவாமி ஆலயத்தில் முதல் தடவையாக திவானவர்களால் மாணவ மாணவிகளுக்கு திருக்குறள் போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டு வெற்றிபெற்ற குழந்தைகளுக்கு வெள்ளிப்பதக்கங்களும் திருக்குறள் நூல்களும் வழங்கப்பெற்றன. இராமநாதபுரம், திருஉத்தரகோசமங்கை, திருச்சுழி, திருவாடானை, நயினர்கோயில், திருப்புல்லணை, முதுகுளத்தூர், கமுதி, இராசசிங்கமங்கலம், சாலைக்கிராமம், கண்ணங்குடி, திருமாலுகந்தான் கோட்டை, பாலவநத்தம், முதலிய கோயில்களில் ஸ்ரீஆண்டாள் ஸ்ரீமாணிக்கவாசகர் திருவுருவுங்கள் வீதி ஊர்வலம் கொண்டுவரப்பெற்றன. ஆங்காங்கு சிறந்த சொற்பொழிவாளர்களைக்கொண்டு பாவைப்பாடல்களின் கருத்துக்களையும் தத்துவப்பொருள்களையும் சொற்பொழிவுகளின் மூலம் பொதுமக்களுக்கு விளக்கப்பெற்றன.

**திருப்புடைமருதூர்,** ஸ்ரீ நாறும்பூநாதசுவாமி கோயிலில் தைப்பூசபெருந் திருவிழா 2-2-60 முதல் 12-2-60 வரை சிறப்பாக நடைபெற்றது.

**திருச்சேறை,** ஸ்ரீ சாரநாதப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 3-2-60 முதல் 11-2-60 முடிய சிறப்பாக நடைபெற்றது.

# திருநெடுங்களம்

நின்னடியே வழிபடுவான்
நிமலாநினைக் கருத
என்னடியான் உயிரை வவ்வேல்
என்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும்
பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய்
நெடுங்களம்மே யவனே

—திருஞானசம்பந்தர்.

சோழநாட்டுப் பாடல்பெற்ற பதிகளில் ஒன்று திருநெடுங்களம் என்பது. இது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இருக்கிறது. சோழகம்பட்டி என்ற புகைவண்டி நிலையத்திலிறங்கித் தெற்கே மட்சாலை வழியே இரண்டு கல் தொலைவு சென்றால் இத்தலத்தை யடையலாம். சிற்றூரின் நடுவே கோயில் சிறப்பாக அமைந்திருக்கிறது. கிழக்கு நோக்கிய சந்நிதி. முன்னால் திருக்குளம் இருக்கிறது. இரண்டு பிரகாரங்கள் உள்ளன. கோயில் திருப்பணி செய்யப்பெற்று அண்மையில் குடமுழுக்கு விழாவும் நடைபெற்றது. திருநெட்டாங்குளம் என்று இவ்வூர் வழங்குகிறது.

கோயிலின் முதல் வாயிலில் கோபுரம் இல்லை. இரண்டாவது வாயிலைக் கோபுரம் அழகு செய்கிறது. மூன்று வாயில்களிலும் உள்ள துவாரபாலகர்கள் மிகுந்த அற்புதச் சிற்ப வேலைப்பாடமைந்தவை. உட்பிரகாரத்தில் தென்கிழக்கில் சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் சந்நிதிகள் இருக்கின்றன. சோமாஸ்கந்தர்—அம்பிகை சடையில் சக்கரத்தில் எழுத்துக்கள் உள்ளன. தென்பிரகாரத்தில் ஏழுகன்னியர், ஜேஷ்டாதேவி, ஐயனார் இவர்கள் காட்சியளிக்கின்றனர். தென்மேற்கு மூலையில் வலம்புரி விநாயகரின் அழகிய திருவுருவம் இருக்கிறது. மேற்குப் பிரகாரத்தில் வள்ளி தெய்வயானையுடன் முருகனும், உபய நாச்சியார்களுடன் வரதராஜப்பெருமாளும் காணப்படுகின்றனர். வடக்குப் பிரகாரத்தில் அகஸ்தீசர் சந்நிதியிருக்கிறது. அதன் எதிரில் அகஸ்திய தீர்த்தம் (கிணறு) இருக்கிறது. அதில் எப்போதும் தண்ணீர் ஒரே மட்டத்தில் இருக்கிறது. பூமிமேல் மட்டத்தில் கையால் எடுக்கக்கூடிய விதத்தில் அமைந்திருக்கிறது. மற்றும் வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுரர், துர்க்கை, நவக்கிரகங்கள், நடராஜர் சந்நிதிகள் இருக்கின்றன. கிழக்குப் பிரகாரத்தின் வடபுறம் பைரவர், சூரியன், மூவர் முதலிய சந்நிதிகளும் இருக்கின்றன. நாள்தோறும் சூரியன் சுவாமி (இலிங்கம்) மேல்படுகிறது.

வெளிப் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் கல்யாண மண்டபமும் அதையொட்டி அம்பிகை சந்நிதியும் இருக்கின்றன. அதன் பக்கத்தில் நந்தவனம் இருக்கிறது. அதில் சந்தன மரங்களும் உள்ளன. இத்தலத்து இறைவன் திருநாமங்கள் நித்தியசுந்தரேசர், நெடுங்களநாதர் என்பன. அம்பிகையின் திருப்பெயர் ஒப்பிலாநாயகி என்பது. இத்தலத்தில் அகத்தியர் வழிபட்டுப் பேறுபெற்றார். வங்கிய சோழன் என்ற மன்னனுக்கு இறைவன் தன் பேரழகைக் காட்டி அருள் புரிந்ததாகச் சொல்லப்படுகிறது. அம்பிகை தவம்செய்ய, இறைவன் கள்ளரூபத்தில் தோன்ற, தேவி பயந்து தாழைக்காட்டுக்குள் புகுந்து மறைந்ததாகவும், இறைவனும் மறைந்ததாகச் சொல்லப்படுகிறது. ஊருக்குக் கிழக்கேயுள்ள ஒளிமதிச் சோலை என்ற இடம் அதுவென்றும் கூறப்படுகிறது. அங்கே திடலில் இலிங்கம், நந்தி இவைகளும் காணப்படுகின்றன. இறைவன் சந்நிதித் திருக்குளக்கரையில் கறுப்பண்ணசுவாமி கோயில் இருக்கிறது. நோயுற்றோர், இவருக்குப் பானகம் வைத்துப் பூசித்து எல்லோருக்கும் வழங்கினால் நோய் நீங்குவதாகக் கூறப்படுகிறது.

**திருஞானசம்பந்தர்** இத்தலத்திறைவன் பேரில் பதினொரு பாடல்களையுடைய ஒரு பதிகம் ஓதியருளியுள்ளார். ஒவ்வொரு பாடலின் ஈற்றடியிலும் ''இடர்களையாய் நெடுங்களம் மேயவனே'' என்று வேண்டுகிறார்.

''தேவனின்னை மனத்தகத்தோர் பாடல் ஆடல் பேணி இராப்பகலும் நினைத்தெழுவார் இடர் களையாய்'', ''கூற்றுதைத்த பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும் நின்னடியார் இடர்களையாய்'', ''நல்லவாய் மொழியால் ஏத்தி இராப்பகலும் நின்றுநைவார் இடர் களையாய்'' என்றெல்லாம் மிக்க ஆராமையோடு பாடியருளுகிறார்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் தமது க்ஷேத்திரத் திருவெண்பாவில்,

**தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது**
**பெட்டப் பிணமென்று பேரிட்டுக்—கட்டி**
**எடுங்களத்தா என்னுமு னேழைமட நெஞ்சே**
**நெடுங்க ளத்தான் பாத நினை**

என்று நெஞ்சுக்கு அறிவுரை பகர்ந்திருக்கிறார்.

அருணகிரிநாதர் இப்பதிக்கு ஒரு திருப்புகழ்ப் பாடல் பாடியிருக்கிறார். அதில் ''அன்பர் குலவுந் திருநெடுங்கள வளம்பதியில் அண்டர் அயனும் பரவுதம்பிரானே'' என்று கூறியிருக்கிறார்.

இக்கோயிலில் பல செய்திகளை யறிவிக்கும் சிறந்த கல்வெட்டுக்கள் நிறைந்திருக்கின்றன. பாண்டிய குலாசனி வளநாட்டு வடக வீரநாட்டுத் திருநெடுங்களம் அல்லது தியாக வல்லி சதுர்வேதிமங்கலம் என்று இவ்வூர் குறிப்பிடப் பெறுகிறது. இறைவனை, திருநெடுங்களமுடைய நாயனார், நெடுங்கள நாத சுவாமி, நெடுங்களத்து மகாதேவர், நெடுங்களம் உடையார், திருநெடுங்களத்து ஆழ்வார், கயிலாயத்து மகாதேவர், களந்தை நாயகர், திருநெடுங்களமுடைய தம்பிரானார், நீமூலார்சோலை வனமுடைய நாயனார் என்ற அழகிய பெயர்களால் அக்கல்லெழுத்துக்கள் அழைக்கின்றன. சோழன் மதுரைகொண்ட பரகேசரிவர்மன் (கி. பி. 905—47), இராஜராஜன் I (கி. பி. 985—1013), இராஜராஜன் III, குலோத்துங்கன் III (கி. பி. 1186—1216), ஆதித்த கரிகாலன் II, ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், ஹொய்சள மன்னன் வீரராமநாத தேவன், விஜயநகர இம்மடி நரசாநாயகர், விருபண்ண உடையார், வீரநாராயண உடையார், மல்லிகார்ச்சுனராயர், விஜயரங்க சொக்கநாத நாயக்கர் முதலிய அரசர்கள் காலத்தவை அக்கல்வெட்டுக்கள்.

கோயிலுக்கு நிலதானம், விளக்கெரிக்க நிலம், பொன் ஆடுகள் வழங்கியது, நெல் தானம், பொன்னாபரணம் கொடுத்தது, நில விற்பனை, பஞ்சகவ்வியத்திற்காகப் பசுக்களை அளித்தது, அக்கினி காரியத்திற்கு நெய் கொடுத்தது, முதலிய செய்திகள் காணப்படுகின்றன. உலகநாதேசுவரமுடையார் என்ற இலிங்கத்தைப் பிரகாரத்தில் பிரதிஷ்டை செய்தது, உலகசுந்தரர் திருவுருவம் நிலை பெறுத்தியது, பிள்ளையார் கணபதிக்கு விளக்கெரிக்கப் பொன் வழங்கியது, மாசி, சித்திரைத் திருவிழாக்காலங்களில் 550 சிவயோகிகளுக்கு உணவளிக்க நிலம்விட்டது, கோயிலைத் தன் சொந்த செலவில் பழுதுபார்த்த ஒருவருக்கு நிலம், வீடு முதலியவற்றைக் கொடுத்தது, நித்தியபூசை முதலியவற்றிற்கு நிலம், நெல் அளித்தது முதலிய அரிய செய்திகளை அக்கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. பிற்காலச் சோழர் ஆட்சியை முதன்முதலில் நிறுவிய விஜயாலய சோழன் அளித்த தானம் ஒன்றை உறுதிப்படுத்தியதாக ஒரு கல்வெட்டுக் கூறுவதிலிருந்து இக்கோயில் மிகப் பழைய கோயில் என்று தெரிகிறது.

**நீடவல்ல வார்சடையான்**
**மேயநெடுங் களத்தைச்**
**சேடர்வாழும் மாமறுகிற்**
**சிரபுரக்கோன் நலத்தால்**
**நாடவல்ல பனுவன்மாலை**
**ஞானசம்பந்தன் சொன்ன**
**பாடல்பத்தும் பாடவல்லார்**
**பாவம்ப றையுமே**

**—திருஞானசம்பந்தர்.**

---

எட்டிகுடி ஸ்ரீமுருகப்பெருமாள் கோயிலில் ஸ்ரீ முருகப்பெருமானுக்குக் கோடி அர்ச்சனை விழா 20-11-59 முதல் தொடங்கி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

# நவதிருப்பதி அனுபவம்

K. பட்சிராஜன் B.A., B.L.,

## திருக்கோளூர்

துலைவில்லி மங்கலத்திற்குத் தெற்கே சிறிது மேற்குத் திசையில், தண்பொருநை யாற்றின் தென் கரையில் இத்தலம் அமைந்துள்ளது. வடமொழியில் இவ்வூரின் பெயர் 'அதர்ம பிசுனம்' என்று கூறப்படுகின்றது. அதாவது மறம் இழிவு பெற்ற இடம் என்று பொருள். தலம் மிகவும் உளங்கவரும் சூழ்நிலையில் அமைந்துள்ளது. சுற்றிலும் தோப்பும், துரவும் அவற்றைச் சூழ நெற்கழனியும் அமைந்து நல்ல நீர்வளத்தோடு விளங்குகிறது. ஊரைக்கண்டாலே, ஒருவன் உளத்திலும் உடலிலும் உள்ள சோர்வு நீங்கும். இங்குதான் எம்பெருமான் மற்ற விடங்கள் போலன்றி நன்றுக் நீட்டி நிமிர்ந்து தன் இரு புயங்களையும் மேலே தூக்கி மடித்து இரு கைகளையும் தலையின் கீழ் வைத்து அயர்வு நீங்கக் கிடக்கும் பாணியில் பள்ளி கொண்டிருக்கிறான். புளிங்குடியில் கிடக்கை போன்று தான் இங்கும். இவ்விரண்டு தலங்களிலும் அவன் கிடந்ததோர் கிடக்கை க்ஷீராப்திக் கிடக்கை போலவன்று, அரங்கத்தே அரவணையில் கிடந்தது போலன்று. இது சோர்வு நீங்க, தக்க குளிர்ந்த ரமணீயமான சூழ்நிலையுள்ள இடம் தேடி உடல் சாய்ந்தபடி என்று தான் ஆழ்வார் கருதியிருக்க வேண்டும். அதன் காரணமாகவே ஆழ்வார் திருவாக்கில்,

"கொடியார் மாடக்கோளூ
ரகத்தும் புளிங்குடியும்
மடியாதின்னே நீதுயில்
மேவி மகிழ்ந்துதான்
அடியாரல்லல் தவிர்த்த
அசைவோ அன்றேல்இப்
படிதான் நீண்டுதாவிய
அசைவோ பணியாயே"

என்ற 'வாய்மொழி' வெளி வந்தது.

இத்தலந்தான் ஆசார்ய நிஷ்டையின் சிகரத் தேறிய ஸ்ரீ மதுரகவி ஆழ்வாரைத் தோற்றுவித்தது. வகுளாபரண பாஸ்கரோதயத்தை வடக்கிருந்தே தரிசித்து அவ்வொளியைப் பற்றி வந்து சடகோபனைக் கண்டு, தெளிந்து தன்னை அவனுக்கு அடிமையாக்கிய பெரியார் அவர். அம்மகான் அவதரித்த தலம் நம்மாழ்வாரை மிகுதியும் ஈடுபடுத்தியது. இவ்வூர்த் தலவரலாறு சற்று சுற்றிச் சுழற்றிக் காணப்படுகிறது. அது வருமாறு :—

கைலையிலே உமை, தன்னை எழில் இலங்க அணி செய்துகொண்டு சிவபெருமானுடன் தனித்து இருந்தாள். அன்று உமையம்மையாரின் தோற்றம் வியப்பை உண்டாக்கும் வண்ணம் அமைந்திருந்தது. சிவ பெருமானின் உயிர் நண்பனான குபேரன் கைலைக்கு வந்தான். குபேரனுக்கு சிவபெருமான் கோயிலினுட் செல்ல என்றுமே அனுமதி தேவையில்லை. தன் இயல்பிலே உள்ள புக்க குபேரன், பெருமானும், உமையும் தனித்திருந்த இடத்திற்கே வந்துவிட்டான். முதலில் உமையை மட்டும் பார்த்த குபேரன் அவளுடைய அலங்காரத்தினால் அவளை அடையாளம் கண்டுகொள்ளாமல், இப்பேரெழில் படைத்தவள் யார் என்று கூர்ந்து நோக்கினான். அதைக் கண்ட பார்வதி சினந்து அக் குபேரனை செல்வம் அனைத்தும் இழந்தவனாகவும், கண்டார் வெறுக்கும் இழிவடிவுடையவனாகவும் ஒரு கண் இழந்தவனாகவும் ஆகுமாறு சபித்தாள். சாபம் பற்றியதும் குபேரன் தன்னறிவு பெற்றவனாய், தன் செயலுக்கு மிக வருந்தி, சிவபெருமானிடம் நிகழ்ந்ததை விண்ணப்பித்தான். நடந்ததை உணர்ந்த ஈசனும், தன் நண்பனை நோக்கி, 'நீ உமையிடமே சென்று, மன்னிப்புக்கோரவேண்டும்' என்று கூறிவிட்டார். குபேரன், உமையம்மையைக் குறித்து தவம் செய்யச் சென்றான்.

அம்மையின் சாபத்தான் அளகேசனை விட்டு அகன்ற ஒன்பது நிதிகளும் பொருநை யாற்றின் தென் கரையிலுள்ள இவ்வூர் எம் பெருமானை நோக்கித் தவம் கிடந்து தங்களை வைத்துக் காப்பற்றவேண்டும் என்று வேண் டின. எம்பெருமான், அவற்றின் முன் தோன்றி, வினவலும், அவை உமை, குபே ரனை சபித்ததையும் தங்களுடைய ஆதரவற்ற நிலையையும் கூறி, தங்களைக் காக்கவேண்டும் என வேண்டின. எம்பெருமான் அவற்றிடம் இரங்கி, அவைகளை நோக்கி, 'அங்குள்ள தீர்த் தத்தில் நீராடினால் எல்லாத் தீவினைகளும் நீங் கும், எனவே இத் தீர்த்தத்தில் நீராடி, இங் குள்ள வனத்தில் வாசம் செய்வீர்களாக' என்று அனுக்ரகித்தான். அங் நிதிகளும் அவ்விதமே செய்து அங்கேயே தங்கின, அதனால் அத்தீர்த்தம் 'நிதிதீர்த்தம்' என்றும், அவ்வனம் 'நிதிவனம்' என்றும் பெயர் பெற் றன. அங்நிதிகளையெல்லாம் சேமித்துப் பாது காத்த காரணத்தால், 'வைத்த மாநிதி' எனப் பெயர் பெற்றான், எம்பெருமான்.

முன் காலத்தில் அறமானது, மறத்தால் நலியப் பெற்று, தங்க இடம் பெறுமல், இங்நிதி வனத்தில் எழுந்தருளிய எம்பெருமானைச் சரண் அடைந்து இவ்வூரிலேயே ஒளிந்து இருந்தன. மறம் மல்கி வருவதைக் கண்ட தேவர்கள், அதைக் குலைக்க விரும்பினர். தரு மத்தை எங்கும் நாடி, இறுதியில் இத்தலத் தில் இருப்பதை அறிந்தனர். உடனே தரு மத்தை அழித்துவிட்டதாக மார்தட்டிய அதர் மத்திடம், தேவர்கள் தர்மம் இங்கு இருப் பதை உணர்த்தினர். அது கேட்டு அதர்மம் ஆர்வாரத்தோடு, இவ்வூருக்கு வந்து, தர் மத்தை போருக்கு இழுத்தது. எம்பெருமானை அண்டை கொண்ட பலத்தால் தர்மம் அதர் மத்தை வென்றது. அதனால் இவ்வூர் 'அதர்ம பிசுனம்' (மறம் இழிவுற்ற இடம்) எனப் பெயர் பெற்று இருந்தது.

குபேரன் வெகு காலம் தவம் செய்த பின் உமாதேவி அவனுக்குப் பிரத்யட்ச மானாள். குபேரன் அவளை வணங்கித் துதித் துத் தன் வடிவம் முன்போல் ஆகவேண்டும் என்றும், தான் இழந்த செல்வமனைத்தும் மீட்டும் தன்னை வந்தடைய வேண்டும் என் றும், அவ்விதம் சாபநீக்கம் அருளுமாறும் வேண்டினான். பார்வதியும் அவன்பால் அருள் பாலித்து அவனை நோக்கி, "வைச்சிரவணனே மனத்துக் கண் மாசுடன், அன்று என்னை உன் கடைக்கண்ணால் நோக்கினாய். நான்தான் என்று உனக்குத் தெரியாமல் இருக்கலாம். எனினும் உன் குற்றம் மன்னிக்க முடியாதது தான். எனவே உன் ஒரு கண் போனதுதான். உடல் குறை நோய் பற்றியது பற்றியதே. அது மாறுது. ஆனால் உன் செல்வம் கிடைக்க ஒரு வழி உண்டு. அவை அனைத்தும் பொருநைக் கரையிலே உள்ள மறையிழிவுறு பதியின்கண் எழுந்தருளியுள்ள பெருமானிடம் அடைக் கலம் புக்கிருக்கின்றன. நீ அங்கு சென்று அப்பெருமானை நயப்பித்து, அவற்றைப்பெற முயல்வாயாக, எனக்கூறி, மேலும் சொல் வாள், இன்னும் கேள் குபேரனே, மேற் சொன்ன பொருநை நதியானது என் உடலி லிருந்து தோன்றியது. இவ்வாற்றங் கரையில் பகவான் உன்னுடைய நவநிதிகளின் மேல், அவற்றுக்குக் காப்பாக சயனித்திருக்கிறான். அத்தலம் விசேடமானது. அங்கு போய் பலன் உண்டா என ஐயுற வேண்டா. முன் பொருகாலத்தில் வியாச பரம்பரையில் உதித்த சுவிருதன் என்ற அந்தணனுக்கு தருமதத்தன் என்ற மைந்தன் இருந்தான். அவன் பிருகுவமிசத்திலுதித்த ஒரு பெண்ணை மணந்து எட்டுப் புதல்வர்களையும் இரண்டு பெண்களையும் பெற்றான். ஆனால் புலபுலெனக் கலகலென மக்களைப் பெற்ற அவன் அவர் களைக் காக்க வழியின்றி கைவிடவும் மன மற்று, தன் வறுமையை எண்ணி நொந்தான். மனைவியும் மக்களுமே தன்னைப் பழிக்குங்நிலை ஏற்பட்டுவிடக் கூடுமோ என்று அஞ்சியவனாய் நர்மதை நதிக்கரையில் தவமாற்றும் பர்த்து வாச முனிவரைக் கிட்டி வணங்கி, தன்நிலையை உரைத்து அதற்கு ஒரு கழுவாய் கூறுமாறு வேண்டினான். அப்பர முனியும் தன் ஞானக் கண்ணால் அவனை நோக்கி அவன் நிலையின் காரணத்தைக் கண்டார். பின் அவனை நோக்கி அவன் நிலையின் காரணத்தைக் கண் டார். பின் அவனை நோக்கி, " அப்பா! நீயும் முற்பிறவியில் அந்தணனாகவே இருந்தாய். அப்போது உன்னிடம் செல்வம் கொழித்திருந் தது. ஆனால் நீ அச் செல்வத்தை வெளிக் காட்டாது மறைத்துப் புதைந்திருந்தாய் உன் உற்றார் துன்புறுங் காலத்து அவர் களுக்கு ஒன்றுங்கொடாது வறுமை வேடம் போட்டாய். உன் செல்வத்தைப் பற்றிக்

கேள்வியுற்ற அரசன் உன்னை அழைத்து உன்னிடம் எவ்வளவு செல்வமுள்ளது என்று வினவ நீ உன்னிடம் யாதும் கிடையாதென்று கையை விரித்தாய். நீ யாவது நன்றாக உண்டுடுத்து அச் செல்வத்தைத் துய்த்தாயா? அதுவுமில்லை. கண்டவிடமெல்லாம் திரிந்து மேலும் பொருளீட்டுவதில் முனைந்ததுமன்றி உன் உடலையும் பிறர் சோற்றாலேயே வளர்த்தாய். இந் நிலையில் நீ மறைத்து வைத்திருந்த பொருளையெல்லாம் கள்வர் தட்டிக் கொண்டு போய் விட்டனர். நீ வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு புலம்பினாய். உன் சுற்றம் உன்னை இகழ்ந்தது. நீ அப்படியே கொஞ்ச நாள் அலைந்து மாண்டாய். பின் சில காலம் நரகவேதனை அடைந்து மீண்டும் அந்தணனாகப் பிறந்திருக்கிறாய். இம்மையிலும் துன் புற்றாய். ஒரு வழி கூறுகிறேன். தெற்கே அதர்ம பிசுனம் என்றொரு தலமிருக்கிறது. அங்கு குபேரனுடைய நவநிதிகளும் பகவான் திருவடிக் காப்பிலிருக்கின்றன. அப் பெருமானைச் சேவித்தால் உனக்கு ஏதேனும் பலன் கிடைக்காமல் போகாது'' என்று கூறினார். தர்மதத்தனும் அப்படியே இந்தத் தலத்தை அடைந்து வைத்த மாநிதியை வணங்கி அங்கே அடிமைத் தொழில் பூண்டு கிடக்க, அப்பெருமானருளால் அவனுக்கு மீண்டும் செல்வம் பெருகிற்று. பழைய தவறை நினைந்து அவன் பலவிதமான அறம் செய்து புகழ்பெற்றான். ஆகையால் நீயும் அங்கே சென்று, வேண்டினால் பலன் பெறுவாய்'' என்று பார்வதிதேவி கூறி மறைந்தாள்.

அந்த ஆணையைச் சிரமேலேந்தி குபேரனும் இத் தலத்துக்கு வந்து நிதி தீர்த்தத்தில் நீராடி பகவானை அனேகவிதமாக வேண்டவும் பகவான் "உன் தனம் யாவும் இனி உன்பால் வராது. ஒரு பாகம் தான் உனக்குக் கிடைக்கும்'' என்று கூறி மறைந்தார், அதன்படி பழஞ்செல்வத்தில் ஒரு பாகம் மட்டும் பெற்றுக் குபேரன் தன் நகரை அடைந்தான். குபேரனுக்கு வைத்த மாநிதி முன் தோன்றிய நாள் மாசித் திங்கள் வளர்பிறைத் துவாதசியாகும். குபேரன் நீராடிப் பேறெய்திய காரணத்தால் அத் தீர்த்தம் குபேர தீர்த்தம் என்று பெயர் பெற்றது. அன்று அங்குள்ள அப் புண்ணிய தீர்த்தத்தில் நீராடி எம்பெருமானை வணங்குபவர் பொருளோடு இறையருளும் பெறுவர்.

இவ்வூர்த் தலபுராண வரலாற்றில் இதற்கு அதர்ம பிசுனக்ஷேத்ரம் என்று பெயர் காண்கிறது. நெல்லை மாவட்டக் கோயில் வரலாறு என்ற ஒரு நூலில் இவ்வூர்ப் பெயர்க்காரணம் பற்றி "கோள்-கொள்கை, புறங்கூறல். புறங் கூறிப் பகை கொண்டிருந்த சேரசோழ பாண்டியர், ஒன்றுபட்டு வாழ்வதே சிறந்த கொள்கை என்று ஒன்றுகூடி சிவபெருமானை வழிபட்ட இடம் இது. அதனால் கோள்ஊர் என இது பெயர் பெற்றது. இவ்வூர் சிவலிங் கப்பெருமான் பெயர் சேர சோழ பாண்டீசர் என இருப்பது இவ் வுண்மையைப் புலப் படுத்தும்'' என்று கூறுகிறது. ஆனால் பார்வதி சாபத்தால் குபேரனை விட்டு நீங்கித் தாம் சேமமாக இருக்க இடம்தேடி அலைந்த நிதியம் (திரு) கொள்ளப்பட்ட இடம் திருக்கோளூர் என்று நிற்கிறது என்று கொள்வது பொருந்தும்.

[எம்பெருமான் பெயர்-வைத்த மாநிதி, தாயார் கோளூர் வல்லி, ஸ்ரீ கரவிமானம், குபேரதீர்த்தம்; தாம்ரபர்ணி நதி; கிழக்கே திருமுகமண்டலம்; அரவணைப் பள்ளித் திருக்கோலம்; குபேரனுக்கும், ஸ்ரீ மதுரகவி யாழ்வாருக்கும் பிரத்யக்ஷம்.]

## தென்திருப்பேரை

இது திருக்கோளூருக்கு இரண்டு மைல் கிழக்கே பொருநையாற்றின் தென்கரையிலே உள்ள தலம். இங்குள்ள கோயில் புராதனமானது. ஊர் தலவகார அந்தணர் நிறைந்தது. இவ்வூரின் பெயர் திருப்பேரையா, திருப்பேரெயிலா என்பதுபற்றி அறிஞரிடையே இன்னும் ஒருமுடிவு ஏற்படவில்லை. ஆனால் பழக்கத்தில் திருப்பேரை என்றுதான் இவ்வூர் வழங்கப் பெறுகின்றது.

திருமகள் கேள்வனுக்கு ஒரு சமயம் ஒரு அபூர்வ யோசனை தோன்றியது. நமக்கு எப்போதும் திருமகள் கேள்வன் என்றும், திருமால் என்றும் இலக்ஷ்மியை இட்டே பெயர் விளங்குகிறது. அவளைப்போல பூமிதேவியும் இருக்க அவள் பெயரை இட்டு நம்மை ஒருவரும் அதிகம் அழைப்பதில்லை. அகலகில்லேன் இறையும் என்று இலக்ஷ்மிதான் நம்மை விடாது பற்றியிருக்கிறாள். ஆனால் பூமிதான் நம் திருமேனியோடு ஒட்டிய நிறமுடையவள். ஆகவே பூமியின்பேரில் நாம் கொஞ்சம்

விசேஷ பரிவு காட்டவேண்டியதுதான். அப்போது இலக்ஷ்மி என்னசெய்கிருள். பூமிதான் நம் விசேஷ அன்பை எப்படி ரஸிக்கிருள் பார்ப்போமே" என்பதுதான் அந்த எண்ணம். அதன்படி இலக்ஷ்மியைக்கொஞ்சம்உதாசீனம் செய்து பெருமான் பூமிதேவியுடன் அதிகமாகக் கூடிக்குலவத் தலைப்பட்டான். இலக்ஷ்மிக்குப் பொறுமை விஞ்சியது. நாயகனைக் கேட்பதும் இழிவு. எனவே உள்ளேயே பொருமி வந்தாள். வெகுகாலமாகத் தன்னையொழித்து.

"அழைக்கும் கருங்கடலே வெண்டிரைக்
கைக்கொண்டு போய் அலர்வாய்
மழைக்கண் மடந்தை அரவணை
ஏறப்பார்த்த மண்மாது
விண்வாய் அழைத்துப் புலம்பி
முலைமலைமேல் நின்றும் ஆறுகளாய்
மழைக்கண்ண நீர்"

அருவிசெய்யா நின்றவளாதலின் பெரும்பேறு கிட்டியபோது பூமிதேவி அதனை முட்டூற்றாக அனுபவித்தாள். பெருமாளும் இவ்விருவர் மனநிலையையும் உள்ளே உணர்ந்து ரசித்து வந்தார்.

திருமகள் பொருமல் எல்லை மீறியது. உடனே அவள் துர்வாசரிடம் சென்று தன் குறையைக் கூறினாள். துர்வாசருக்கு இலக்ஷ்மியிடம் பக்தி அதிகம். அவள் மாலை ஒன்றை யானை அலக்ஷியம் செய்யவிட்டமைக்காக இந்திரம் செல்வம் கடலினுட்புகச் செய்தவரல்லவா அவர். அவர் இதன் காரணத்தை ஆராய்ந்தார். வெகுநாள் இந்தப் பொன்னியுடன் இருக்கிறோம். பூமி என் நிறத்தோடிருக்கிருள். அவளைக் கொஞ்சம் விசேஷ கடாக்ஷம் செய்ய வேண்டுமென்று நினைத்திருப்பரோ என்று தோன்றியது. அதை இலக்ஷ்மியிடம் சொன்னார். அவளுக்கும் தன் நாயகனுக்கும் தன் நிறமோகம்தான் காரணமாயிருக்கலாம் என்று தெரிந்தது. எனவே அவள் துர்வாசரிடம் "அவளையும் என்னிறமாக்கிவிடும்" என்று கூறினாள். துர்வாசரும் புறப்பட்டு பூமிதேவியின் கோயில் புக்கார். அவர் புக்க காலையில் பூமிதேவி தன் கரிய கோலம் பகவானை மயக்கியதில்தான் மயங்கிச் செருக்குற்று, தன் நாயகன் மடிமீதேறி யிருந்தாள், துர்வாசர் வந்தும் தன் மயக்கில் கீழிறங்காதிருக்கவே கோபத்தால் பெயர் படைத்த முனிவர் சீறி "உன் நிறத்தின் மோகத்தில் மயங்கிய நீ உன் சக்களத்தியின் நிறம் பெறுவாயாக" எனச் சபித்தார். உடனே பூமிதேவியும் பூமகள்போல பொன்னிறம் பெற்ருள். உடனே மனம் நடுங்கி அவள் முனிவரிடம் நான் அறியாமையால் செய்த பிழையை நீர் பெரிதாகக் கொள்ளக் கூடாது. என் நிறம் யான்பெற ஒரு உபாயம் நீரே அருளவேண்டும் என்று வேண்டினாள். அவரும் இந்நிறம் சிலகாலம் இருந்தே தீரும். பின் பொருநைக் கரையில் உள்ள அரிபத க்ஷேத்திரத்தில் உள்ள நதியில் நீராடி பெருமானை வணங்கினால் உன் பழைய கருமை யழகு உனக்கு வரும் என்று கூறிச் சென்ருர். தான் செய்ததை இலக்ஷ்மியிடமும்கூறிப் போனார். அரவணையிலே பெருமாள் சயனித்திருக்கையில் அவன் திருவடிகளை இரு தேவியரும் இருமருங்குமிருந்து பிடிக்கையில் பூமியும் தன்னைப்போல் நிறம் பெற்றிருப்பதைக் கண்ட திருமகள் தன் உள்ளே மகிழ்ந்து துர்வாசரைப் புகழ்ந்தாள்.

இப்படிச் சில காலம் சென்றது. பின்பு ஒருகால் பூமிதேவி முனிவர் வாக்கை உட்கொண்டு தன் பழைய நிறம் பெறவும் நாயகன் அன்பைப் பெருக்கிக்கொள்ளவும் உன்னி துர்வாச முனிவர் உபதேசித்த திருவெட்டெழுத்தை உச்சரித்து "பேரை" என்ற பெயர் பூண்டு பங்குனித் திங்களில் மதிநிறைந் நன்னாளில் அரிபத க்ஷேத்திரத்தில், நதியில் தர்ப்பணம் செய்ய முயன்றபோது மீன் வடிவமான இரு காதணிகளைக் கண்டாள். அவற்றைக் கையிலெடுத்து, அவற்றின் அழகை வியந்து, இவை நம் நாயகனுக்கே தகும்என்று எண்ணவும், நிகரில்—முகில்வண்ணன் என்ற பெயருடன் அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் அவள் முன் தோன்றி 'எனக்கே இவற்றை சமர்ப்பி' என்று கூறினார். அவளும் மிக மகிழ்வெய்தி அவ்விரு மகரக்குழைகளையும் எம்பெருமானுக்கு அணிவித்தாள். அப்போது அந்தரத்தில் துந்துபி முழங்கியது. வானவர் அக்குழைகளோடு இறைவனை வணங்கி மலர்மாரி பொழிந்தனர். அக்குழைகளை அணிந்த காரணத்தால் இறைவன் "மகரநெடுங்குழைக் காதன்" எனப் பெயர் பெற்ருன். அவை கிடந்த தீர்த்தம் மகரதீர்த்தம் எனப் பெயர்பெற்றது. நில

மகள் "பேரை" என்னும் பெயருடன் பயன் பெற்ற இடமாதலின் அவ்வூரும் "திருப் பேரை" எனப் பெயர் பெற்றது. மண்மகளும் தன் நிறம் பெற்றுள்.

முன் ஒரு காலத்தில் இந்திரனுல் முறி யடிக்கப்பட்ட அசுரர்கள் மேல்திசையில் வருணனிடம் தம் கோபத்தைக்காட்டி அவனை அவன் நகரை விட்டே விரட்டிவிட்ட னர். வருணன் தோல்வியடையக் காரணம் முன்னே குருவான வசிஷ்ட சாபத்தால் அவ னுடைய பாசப்படையை இழந்ததுதான். கணவனது பரிதாப நிலையைக்கண்ட வருணன் மனைவி அவனை மீண்டும் குருவைப் பணிந்து பரிகாரம்பெறப் புத்தி கூறினுள். வருணனும் வசிஷ்டன் திருவடிகளில் வணங்கித் தன் குறையைச் சொன்னுன். குரு "உன் கெடு மதியால் இவ்வளவும் பட்டாய். உன் பாச மும் நகரமும் கிடைக்க வழி சொல்கிறேன் கேள். தெற்கே பொருநைக் கரையிலே பேரை என்று ஒரு தலமிருக்கிறது. அங்கே பூதேவியுடன் எம்பெருமான் எழுந்தருளி யிருக்கிருன். நீ மகர தீர்த்தத்தில் நீராடி எட்டெழுத்தால் எம்பெருமானை ஏத்தினுல் உன் கவலை ஒழியும்" என்று உபதேசித்தார். அவ்விதமே வருணனும் தன் மனைவியுடன் இத்திருப்பதிக்கு வந்து நீராடிப் பெருமானை வழுத்தி பங்குனிப் பௌர்ணமியில் அப்பெரு மானுக்குத் திருமஞ்சனம் செய்து வழிபட பகவானும் அம்மஞ்சன நீரில் கொஞ்சம் கையிலெடுத்து விடவும் அதுவே பாசமா யிற்று. வருணன் அதைப்பெற்றுப் பேராய் அதன் பலத்தால் அசுரரை வென்று தன்நக ரையும் பெற்றுன். ஒவ்வொராண்டும் பங்கு னிப் பூரணையில் வருணன் வந்து பகவானுக் குத் திருமஞ்சனம் செய்து போகிருன்.


பின்பொருகால் விதர்ப்ப தேசத்தில் மழையின்றி வறட்சி ஏற்படவே அரசன் சோதிடரைக்கொண்டு காரணத்தை ஆராயப் புகுந்தான். சோதிடர் ஆராய்ந்து இது தெய்வ கோபம். இதற்குப் பரிகாரம் திருப்பேரை எம்பெருமான் திருவுளம் உகப்பப் பூசிப்பது தான் என்று கூறினர். அரசனும் அவ்விதம் இத்தலத்துக்கு வந்து தன் பரிவாரங்களுடன் மகர நெடுங்குழைக்காதனைப் பகுவிதமாக ஆராதனம் செய்ய அதன் பயனுய்த்தீங்கின்றி அவன் நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து செல்வம் கொழித்தது.

[எம்பெருமான் திருநாமங்கள்—மகர நெடுங் குழைக்காதர், நிகரில் முகில்வண்ணன்; தாயார் குழைக்காதவல்லி நாச்சியார்; பத்திர விமானம்; சுக்ரபுஷ்கரணி; கிழக்கே திருமுக மண்டலம்; வீற்றிருந்த திருக்கோலம்; சுக்ர னுக்கும், பிரமனுக்கும் பிரத்யக்ஷம்; ஈசான்ய ருத்ரனுக்கும் பிரத்யக்ஷம்;] புஷ்கரணிப் பெயர்க் காரணம் தெரியவில்லை. மூவருக்கும் எப்போது எங்கு எவ்வாறு பிரத்யக்ஷமானுர் என்ற விவரமும் கிடைக்கவில்லை.

(தொடரும்)

***

அதிராம்பட்டினம், அபயவரதேசுவர சுவாமி கோயிலுக்குப் புதிதாக இராஜகோபுரம் அமைப்பதற்கும் ஆலயத்திருப்பணி செய்வதற்கும் 5-10-59-ல் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்களால் திருப்பணி துவக்கிவைக்கப் பட்டது. 5-2-60-ல் மாலை 5 மணிக்கு யாகசாலை பூசையை சென்னை அறநிலையத்துறை அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம், பி.ஏ.பி.எல்., அவர்கள் துவக்கி வைத்தார்கள். திரு. என். சுந்தரேச தேவர் அவர்களால் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது. இன்னிசை யரங்கும் நடைபெற்றது. 6-2-60 மாலை மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பண்டார சந்நிதிகள், ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளார் ஆகியோரின் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன. தஞ்சை அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை, B. A., L.T., துவக்கி வைத்துச் சொற்பொழிவாற்றினுர்கள். 7-2-60-ல் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இரவு முத்துப்பல்லக்கில் பஞ்சமூர்த்திகள் வீதியுலாக் காட்சியும் அன்னம் வழங்குதலும் நடைபெற்றன.



திருமண்டங்குடி — அரங்கநாதனும்—பள்ளியுணர்த்தும்பிரானும்

# திருமண்டங்குடியில் மகாசம்ப்ரோக்ட்சணம்

திருவரங்கத்தரவணையான், அரங்கநாயகித் தாயார் ஆகியோரது கோயில்கள் முற்றிலும் புதிதாக்கப்பெற்றும், புதுவாகன மண்டபம் நிறுவப்பெற்றும், திருக்குளம் சீர்திருத்தப்பெற்றும், நந்தவனம் அமைக்கப்பெற்றும் 25—1—60-ல் அஷ்டபந்தன மகா சம்ப்ரோக்ட்சணம், அறநிலையத்துறை ஆணையர் திரு. அ உத்தண்டராமன், ஐ. ஏ, எஸ்,, அவர்கள் முன்னிலையில் நிறைவேறியது. 22—1—60-லும், 23—1—60-லும் விசேஷ ஆராதனைகளும் நடைபெற்றன. 24—1—60 காலை 9 மணிக்கு தஞ்சை அரசரான ஸ்ரீ ராஜாராம்ராஜா சாகேப் தலைமையில் திவ்யப்பிரபந்த மாநாடு தொடங்கிற்று. 1956-ம் ஆண்டில் அறநிலையத்துறை அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம், ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., ஆகியோர் வந்திருந்து இதனைப் பார்வையிட்டபின் 1958-ம் ஆண்டு இறுதியில் அரசாங்க மான்யமாக ரூ. 5000-ம் நிதிஉதவி கிடைத்து, ரூபாய் இருபதினாயிரத்திற்குத் திட்டமிட்ட திருப்பணி நிறைவேறி மேலும் பல திருப்பணிகள் நடைபெறவிருக்கின்றன. இவ்வாண்டில் இம்மாநாட்டை தஞ்சை மன்னர் தலைமைதாங்கி நடத்தி வைத்தார். தலைவர் தமதுரையில் தமது மூதாதையர் காலத்தில் பல திவ்யதேசங்களுக்குத் திருப்பணி செய்வித்துள்ளதுபற்றிய குறிப்பு சரசுவதிமகால் நூல்நிலையத்திலிருப்பதாகவும் திவ்யபிரபந்தத்தின் சிறப்பு, திருப்பணி முதலியனபற்றி எடுத்துரைத்தார். திருவாளர்கள் டி. இராமானுஜ அய்யங்கார், ஜீ. தனவேல் பிள்ளை, கோ. சிவஞானம், வரதராஜ அய்யங்கார், உ. வே. விஜயராகவாச்சாரியர் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். 25-1-60ல் தொண்டரடிப்பொடியாழ்வார் மங்களாசாசனம் செய்த "திருமாலை", "திருப்பள்ளியெழுச்சி" பாசுரங்களைக்கொண்ட கல்வெட்டுக்களையும், திருப்பணிக்கு நிதி உதவியவர்களது பெயர்களைக்கொண்ட கல்வெட்டினையும் ஆணையர் அவர்கள் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினார்கள். விநாயகருக்குத் தனிக்கோயில் ஒன்று அமைத்து அதன் கும்பாபிஷேகமும் ஆணையர் முன்னிலையில் நடைபெற்றது. 26—1—60 முதல் தொடர்ந்து திருமஞ்சனம் நடைபெற்று வருகிறது. 13—3—60-ல் மண்டலாபிஷேகவிழா அறநிலையத்துறை அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

◆ ◆ ◆ ◆

திருவண்ணாமலை, ஸ்ரீ அருணாசலேசுவரசுவாமி கோயிலைச் சார்ந்த "ஸ்ரீ அருணாசல விலாசம்" என்னும் புதிய கட்டிடத்திற்கு கால்கோள் விழாவை 7-2-60ல் சென்னை அறநிலையத் துறை அமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள் துவக்கி வைத்தார்கள்,

# திருவுந்தியார்

திரு. K. வச்சிரவேல் முதலியார் பி. ஏ., எல். டி.,

சித்தாந்த சைவத்துட் கொள்ளப்படும் ஞானநெறியை முறைப்பட வைத்துத் தெளிவாக உணர்த்தும் பிரமாண நூல்கள் பதினுன்கு என்பது உமாபதி சிவனர் (14-ஆம் நூற்ருண்டின் தொடக்கம்) காலந்தொட்டுச் சைவ ஆதீனங்களில் வழங்கிவரும் மரபு. அப்பதினுன்கனுள் முதலாவதாக வைக்கப் பட்ட நூல் திருவுந்தியார் என்பது ஆகும்.

**நூலின் அமைப்பு :**

இது 45 கலித்தாழிசைகளால் அமைந்த இனிய அழகிய நூலாகும்.

அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானுகத் தந்ததென் றுந்தீபற

என்பது முதற்பாட்டு. 'உருவமில்லாத, யாராலும்சுட்டியறியப்படாத முதற்பொருள் (கடவுள்) (என் பக்குவம் கருதி) உருவத்தோடு (யான் காண) வந்தது. (வந்து), அடியேன் தான் ஆம் தன்மை எய்தும்படி (திருவருள் ஞானத்தை)த் தந்தது'—என்பது இதன்பொருள். இதுபோலும் நாற்பத்தைந்து பாட்டுக்களால் ஆனது இந்நூல். இப்பாட்டுக் கலித்தாழிசை எனப்படும்.

**பிரபந்த வகை :**

உந்தி பறத்தல் என்பது பெண்-குழந்தைகள் இருவர் கைகளை மாறிக் கோத்து நின்று, எழுந்து எழுந்து குதித்துச் சுழலும் ஒருவகை விளையாட்டு. இஃது இக்காலத்துத் தும்பி பறத்தல் என வழங்குகின்றது அவ்வாறு உந்திப்பறந்து சுழலும்போது, ஒருத்தி முதற்கண் சில தொடர்களைக் கூற, மற்றொருத்தி, அதனை உடன்பட்டோ மறுத்தோ, தான் ஒன்று கூறிமுடிப்பள். அங்ஙனம் விளையாடும் மகளிர் கூற்ருக வைத்துப் பாடப்பட்டமையின், திருவுந்தியார் எனப்பட்டது. திரு என்னும் அடைமொழியும் ஆர் என்னும் இறுதியும் நூலுட் கூறப்படும் பொருளின் உயர்வு தோன்றச் சேர்க்கப்பட்டவை ஆகும். இவ்விளையாட்டைப் பிறவாறும் உரைப்பர்.

உந்தி என்னும் பிரபந்தம் தமிழ்மொழியில் முதற்கண் திருவாதவூர் அடிகளால் இயற்றப்பட்டது என அறிகிருேம். அது திருவாசகத்து உள்ளது. இரண்டாவதாக எழுந்த பிரபந்தம் இதுவே ஆகும். பிற்காலத்து, இவற்றை முன்மாதிரியாகக் கொண்டு எழுந்தவையே அவிரோத வுந்தியார் முதலியவை.

**காலம்**

இது சாலி. 1070 (கி. பி. 1147)ல் இயற்றப்பட்டது எனக்கூறி வருவது மரபாக உள்ளது.

**ஆசிரியர்**

திருவுந்தியாரை அருளிச் செய்த ஆசிரியர் உய்யவந்தான் என்னும் பெயருடையவர் என்பது நூலின் இறுதியில் வரும்,

வையம் முழுதும் மலக்கயம் கண்டிடும்
உய்யவந் தானுரை உந்தீபற
உண்மை யுணர்ந்தாரென் றுந்தீபற

என்னும் பாட்டால் உணரப்படுகிறது. 'உய்ய வந்தானது உரையாகிய இந்நூல் உலகம் முழுவதும் பாசக்ஷயம் (மலக்கயம்) செய்தே விடும்; இதனுல் மக்கள் உண்மை ஞானத்தைப் பெறுதல் நிச்சயம்' என்பது இத் திருக்கடைக் காப்பின் பொருள். இவர் திருவியலூரில் தங்கியிருந்தவராதல் வேண்டும் என்பது திருக்களிற்றுப்படியாரில் வரும் குறிப்புப்பற்றி ஊகிக்கப்படுதலின், இவர் 'திருவிசலூர் உய்யவந்த தேவநாயனுர்' என

வழங்கப்படுவர். திருவியலூர் என்பதும் திருவிசலூர் என்பதும் ஒன்றே ஆகும். இது காவிரியின் வடகரையில் உள்ள சிவதலங்கள் 63-ல் ஒன்று.

இனி, இவர் தம் மாணுக்கர் **திருவிசலூர் ஆளுடைய தேவநாயனர்** என்பவர் ஆவர். அவர் சிறந்த சிவயோகியாராகப் பல அடியார்களுக்கும் தலைவராகத் திகழ்ந்தவர். அவருக்கு அருள் ஞானத்தை விளக்கி, அதனை இடையருது சிந்தனைசெய்து உணர்தற்கு வாயிலாக அருளிச்செய்து அளிக்கப்பட்ட நூல்தான் திருவுந்தியார் என்பது. பின், அவரிடமிருந்து இந்நூலைக் கேட்டுணர்ந்தவர் **திருக்கடவூர் உய்யவந்த** தேவநாயனர் என்பவர். இவர் தம் மாணுக்கர் ஒருவருக்குத் திருவுந்தியாரின் பொருளை விரித்து விளக்கி யருளியபோது, அவ்விளக்க வுரையைத் திருக்களிற்றுப்படியார் என்னும் ஒரு நூலாகச் செய்தருளினர். திருக்களிற்றுப்படியார் பதினன்கு சாத்திரங்களுள் இரண்டாவதாக வைக்கப் பெற்றுள்ளது. இதனுல், திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் முறையே முதல் நூலும் வழிநூலும் ஆகக் கொண்டு மெய்யுணர்ந்தோரால் பயிலப்பட்டு வந்தன என்பது விளங்கும். திருக்களிற்றுப்படியார் கி. பி. 1177-ல் இயற்றப்பட்டதெனக் கொள்ளுதலும் மரபாக உள்ளது. இவ்விரு நூலும் தனித்தொகுதியாகக் கருதத் தகும் சிறப்புடையவை ஆகும்.

திருக்களிற்றுப்படியாரை இயற்றியருளிய உய்யவந்த தேவரைத் திருவுந்தியார் ஆசிரியருக்கு நேர் மாணுக்கர் எனக் கூறினேரும் உளர்.* அங்ஙனம் கூறுதல் தவறு என்பது பின்வரும் சான்றுகளால் இனிது விளங்கும். யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களும் மேலே யாம் கூறியபடியே கூறுகின்றுர்கள்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் மெய்கண்ட சாத்திரப் பதிப்புரையும் (1925) யாம் கூறிய மரபையே எடுத்தோதி வலியுறுத்துகிறது.

'ஆளுடையான் எந்தரம் ஆளுடையா
னேயறியும்
தாளுடையான் தொண்டர் தலைக்காவல்-நாளும்
திருவிசலூர் ஆளும் சிவயோகி யின்றென்
வருவிசையை மாற்றினன் வந்து'

என்பது திருக்களிற்றுப்படியாரின் 96-ஆம் பாட்டு. இதனுல் திருக்களிற்றுப்படியார் இயற்றிய ஆசிரியருக்கு ஞானசிரியர் **திருவிசலூர் ஆளுடையதேவர்** என்பது ஐயமின்றித் தெளியப்படும்.

இனி,

'என்னறிவு சென்றளவில்
யானின் றறிந்தபடி
என்னறிவி லாரறிக
என்னெருவன் - சொன்னபடி
சொல்லக்கேள் என்றெருவன்
சொன்னுன் எனக்கதனைச்
சொல்லக்கேள்
நானுனக்கச் சொல்'

என்பது திருக்களிற்றுப் படியாரின் 3-ஆம் பாட்டு. இது நூலால் உணர்த்தப்படும் மெய்ப்பொருள் தமக்கு வந்த வரலாற்றை ஆசிரியர் மாணுக்கருக்கு உணர்த்துவது.

இதில் நான் என்பது நூலாசிரியராகிய திருக்கடவூர் உய்யவந்தாரைக் குறிக்கின்றது. "சொன்னபடி சொல்லக்கேள் என்று ஒருவன் எனக்கு அதனைச் சொன்னுன்" என்னும் தொடரில் வரும் ஒருவன் என்பது நூலாசிரியருக்கு ஆசிரியராகிய **திருவிசலூர் ஆளும் சிவயோகி, ஆளுடைய தேவரைக்** குறிக்கின்றது. இத் தொடருக்குமுன் "தற்போதம் நீங்கிய அளவில் யான் கிட்டை நிலையில் நின்று அறிந்தபடி தற்போதம் நீங்கிய பக்குவர்கள் கேட்டறிக என்று ஒருவன் சொன்னபடி" என்றதில் வரும் ஒருவன் என்பது திருவுந்தியார் ஆசிரியராகிய **உய்யவந்த தேவரைக்** குறிக்கின்றது. இதனுல் திருவுந்தியார் ஆசிரியருடைய பெயராகிய **உய்யவந்தார்** என்பதே, ஞானசந்தானத்தில் அவர்தம் பெயரர் என்ற முறையில் மூன்றுமவராகத் திருக்கடவூரில் எழுந்தருளியிருந்த திருக்களிற்றுப்படியார் ஆசிரியருக்கும் பெயர் ஆயிற்று என்பதும் உணரப்படும். அஃது அவர்க்குத் தீக்ஷா நாமம் ஆகலாம்.

* மறைமலையடிகள் இயற்றிய சிவஞானபோத ஆராய்ச்சி என்னும் நூல்; 1951-ல் திருவாவடுதுறை ஆதீன வெளியீடாக வந்துள்ள (திருவுந்தியார் மூலமும் உரையும்) என்பதன் முகவுரை பக்கம் 9—இவை ஒப்பு நோக்கத்தக்கவை.

திருவுந்தியார் ஆசிரியரைப் பற்றி பிற செய்தி ஒன்றும் தெரியவில்லை. ஆயினும், இவர் திருவாதவூர் அடிகளைப் போன்று இறைவனல் நேரே ஆட்கொள்ளப் பெற்ற **முதலாசிரியர்** ஆவார் எனக்கருதுவது பொருத்த மாகத் தோன்றுகிறது. **'உருவமில் முதல்வன் உருக்கொண்டு வந்து சிவமாந் தன்மையைப் பெற அருளினன்'** என முதற்பாட்டிற் கூறி, முடிவில்,

"சிந்தையின் உள்ளும்என்
சென்னியினும் சேர
வந்தவர் வாழ்கவென்
றுந்தீபற
மடவாள் உடனேயென்
றுந்தீபற" (44-ஆம் பாட்டு)

என அம்மையப்பரையே வாழ்த்துவதாலும், வேறு தமக்கு ஆசிரியராயினர் ஒருவரைக் குறித்து வாழ்த்தாமையாலும் விளங்குதற்கு உரியது.

ஒரு ஞானசிரியரை அடுத்து ஞானம் பெற்றோர் எல்லாரும் தாம் நூல் இயற்றும் போது தம் ஆசிரியரை எடுத்தோதி வாழ்த்து வதே மரபாக உள்ளது என்பது சிந்தித்தற் குரியது. திருக்களிற்றுப்படியார் அருளிச் செய்த ஆசிரியர் தம் ஞானசிரியரைப் பெயரும் ஊரும் கிளந்து வாழ்த்தினமையும், தம் நூல் வந்த வரலாற்றை முதற்கண்ணே குறிப்பித்தமையும் மேலே காட்டப்பட்டன. அவ்வாறு திருவுந்தியார் ஆசிரியர் ஒன்றும் கூருமையால் அவர் முதலாசிரியர் என்பதே துணிபு.

இன்னும், நூலின் இறுதியில் திருக் கடைக்காப்புச் சாத்தி, "தம் உரை உலகத் தார் அனைவருக்கும் மலநீக்கம் செய்து உண் மையை உணர்த்த வல்லது" என உள்தெளி வும் திட்பமும் அமைய ஓதியருளினமையும் இவர் முதல்வன் அருளை நேரே பெற்ற முத லாசிரியர் ஆவார் என்பதை வலியுறுத்து கின்றது.

**நூற்பொருள்**

இந்நூலுட் கூறப்படும் பொருளைக் **குருவருள், சாதனம், அணைந்தோர் தன்மை** என மூன்று தலைப்பின் கீழ்ப் பாகுபடுத்தி உணர லாம். அவற்றுள் முதல் ஆறுபாட்டுகளால் குருவருளும், பின் வரும் 25 பாட்டுக்களால் சாதனத்தின் இயல்பும், அவற்றின் பின்வரும் 12-பாட்டுக்களால் அணைந்தோர் தன்மையும் உணர்த்தப்படுகின்றன. இறுதியில் உள்ள இரண்டு பாட்டுக்கள் முறையே குருவாழ்த் தும் நூற்பயனும் உணர்த்துகின்றன.

**1. குருவருள்**

முதற்பொருள் உருவம், பெயர், தொழில் என்பவை ஒன்றும் இன்றி, உயிர்களின் அறிவைக் கடந்து நிற்பது. இத்தகைய முதற் பொருளே பக்குவம் எய்திய ஆன்மாக்களுக்கு மெய்யுணர்வை விளக்குதற் பொருட்டுத் தன் அருளால் திருமேனிகொண்டு தோன்றியருளி அருள் ஒளியைத் தருகின்றது. அவ்வருளே கண்ணகை உணர்கின்றவர், அதனை, உலகப் பொருள்களைக் கண்டு வந்தாற்போலத் தமக்கு வேருகச் சுட்டிக்காணர், காலத்தலாலும் இடத்தாலும் வரையறப்பட, ஏகதேசமாக வும் காணர். அரும்பு மலராகும்போது, அதி லிருந்து விரிந்து எழும் மணம் யாங்கணும் பரவி, அம்மலரையும் தன்னகத்தே அடங்கக் கொண்டு எழுதல் போல, முதற்பொருள் உயிரின் உணர்வினின்று முளைத்து விளங்கி, யாங்கணும் வியாபித்து, அவ்வுயிரையும் தன் பேரருட் பரப்பில் அடங்கக் கொண்டு விளங் கும். அங்ஙனம் விளங்குகையில், உயிர் அதனேடு ஒற்றித்துநின்று, அதனை உணரும். உணரும் நிலையில், தன்னை வேறு காணது. சிவமாகவே காணும். இதுவே **தான் ஆதல்** எனப்பட்டது.

இவ்விடத்துப் 'பூவினிற் கந்தம் பொருந் திய வாறுபோல்-சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது' (திருமந்திரம்), "யானகிய என்னை விழுங்கி வெறுந்—தானய் நிலைநின் றதுதற் பரமே" (கந்தர் அனுபூதி)—என்னும் அனு பவ வாக்குகள் ஒப்ப நோக்கத் தக்கவை.

அந்நிலையில், ஏகதேசப் பொருள்களை அறிந்து, அவ்வப்பொருளின் உணர்வே தன் வடிவமாய் ஏகதேசப்பட்டு வந்த அறிவு, அவ்வரம்புக்கும் தன்மை நீங்கி, வியாபகமாய் விளங்கும். அவ்வியாபக உணர்வு அளப்பரிய ஆகாயம் என நிற்ப, அதன்கண் விளங்கும் திருவருள் ஒளி ஞாயிற்றின் ஒளியென அனு பவப்படும். இதனை,

"இன்றெனக் கருளி இருள்கடிந்(து) உள்ளத்(து)
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்"

என்னும் திருவாசகம் கொண்டு தெளிய லாம்.

இவ்வனுபவ நிலையைக் குறித்தே ஆசிரியர் "தான் ஆகத் தந்ததென் றுந்தீபற" என முதற்கண்ணே கூறுகின்றார். "சேர்வார் தாமே தான் ஆகச் செயுமவன்" என்னும் திருஞானசம்பந்தர் திருவாக்கும், "சித்தமலம் அறுவித்துச் சிவம்ஆக்கி எனையாண்ட அத்தன் எனக் கருளியவா(று) ஆர்பெறுவார் அச்சோவே" என்னும் திருவாசகமும் இத்தொடரோடு ஒப்புநோக்கிச் சிந்திக்கத் தக்கவை. இவ்வனுபவ முடிநிலைமுடிவே "தத்துவமசி" (அது நீ) முதலிய வேதாந்த மகாவாக்கியங்களால் உணர்த்தப்பட்ட முடிபு என்பது சித்தாந்த சைவத்தின் துணிபு ஆகும்.

மேற்கூறியவாறு அருள்புரியும் அருளாசிரியன் சிவபிரானுகவோ, அவன் அருள்பெற்றுச் சிவமாந்தன்மை எய்தினுராகவோ தான் இருத்தல் கூடும். பிறரால் மலநீக்கமும் சிவத்துவ விளக்கமும் செய்தல் இயலாது. உலகத்து அனுபூதிமான்கள் ஞானதிக்கை செய்யும்போது சிவபிரான் அவர்களை ஆவேசித்து நின்று அருள்கின்றுன் என்பதே உண்மை நூல் துணிபு ஆகும். (1)*

அருளாசிரியன் அறிவுறுத்தும் அருளுரை ஒரு நெறிப்பட்ட உணர்வைத் தருவது. ஆதலால், அவ்வருள் உரை குறிப்பிக்கும் குறியில் நின்று, அதுவரை ஏகதேசப்பட்டுப் பலதலைப்படப் பொருள்களை உணர்ந்து, இன்பத்துன்ப மயக்கம், அவலக்கவலைக் கையாறு என்னும் இவற்றால் அலைப்புண்டுவந்த பழைய பிறவிப்பழக்கம் நீங்கும்படி நிட்டையில் நின்று பழகுவதே செய்யற்பாலது. அவ்வாறன்றி, வீண் கலைஞான ஆரவாரங்களில் அகப்பட்டு, மனவுணர்வைப் பலதலைப்படச் செல்லவிடுதல் அறிவுடைமை ஆகாது. (2)

காணப்பட்ட ஆசான் மூர்த்தியை அகங்கொண்டு சிந்தித்தும், அருளுரையின் வழி நின்றும் சாதிப்போர் உடம்பு வயப்பட்டு, அவ்வுடம்பின்கண் உள்ள மனம், மெய், வாய், கண் முதலிய கருவிகளால் காட்டப்படும் உலக பதார்த்தங்களைப் பார்த்து, அவற்றில் அழுந்தி வேதனை உறமாட்டார்; அன்னோர் இருள்சேர் இருவினையும் சேரப்படார்; ஆகலின் அவர்களுக்கு மேல்வரக்கடவ பிறப்பிறப்புக்கள் இல்லையாம். (3)

மேற்கூறியபடி ஆசான் அருள்வழி நின்று, உடம்பின் வயப்பட்டு ஏகதேசப்படாது, வியாபக உணர்வு விளங்கப்பெற்று, முதற்பொருளை 'அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் அருளொடு நிறைந்ததாய்'த் தலைப்பட்டு உணர்வார்க்கு, அது ஞான ஆனந்தமயமாய் விளங்கி அனுபவப்படும். அவ்வனுபவத்தில் விளைந்த பேரின்பத்தை இவ்வாறு இருந்தது என எந்த உவமையிலும் வைத்து உணர்த்துதல் இயலாதது. ஞானமயனுகிய முதல்வன் அளவையறிவால் அறியப்படாதவன்.

"இரந்திரந்து உருக என்மனத்துள்ளே எழுகின்ற சோதியே" எனவும், "ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே, என்னுடை அன்பே" எனவும் எழுந்த திருவாசகத்தால் முதல்வன் ஞானனந்தமயனுக அனுபவப்படுதல் உணரற்பாற்று. (4)

முதல்வன் உலகப் படைப்பின்முன் ஒருவனுக எஞ்சிநின்று, பின் சிருட்டியின் பொருட்டுத் தனது அருட் சத்தியால் பசு பாசங்களில் அவையே தானேயாம் தன்மையில் கலந்து எல்லாமாயும் நிற்பவன். ஆதலால், அங்ஙனம் உலகெலாமாகி உயிர் தோறும் உண்ணின்று உணர்த்திவந்தவன், பக்குவ காலத்தில் ஆசானுகவும் எழுந்தருளினன் எனக்கொள்க. அவன் ஆசானுய் ஆண்டருள்வது பக்குவம் எய்திய தவமுதல்வர்களையே என அறிக. (5)

5-ஆம் பாட்டில் "ஏகனும் ஆகி அனேகனும் ஆனவன்" என்ற தொடர் பின்வரும் சாந்தோக்கிய உரையோடு பொருந்த வைத்து உணர்தற்கு உரியது: "நல்லோய்! இது (காணப்படும் உலகு) முதற்கண் ஒன்றேயாக, செம்பொருளேயாக இரண்டாவது ஒன்றும் இன்றி இருந்தது; அச்செம்பொருள் 'பல ஆவேன் ஆக' எனச் சங்கற்பித்தது" என்பது சுவேதகேது என்பானுக்கு அவன் தந்தை அறிவுறுத்திய உரை.

---

* இங்ஙனம் ஆங்காங்குப் பத்திகளின் இறுதியில் கொடுக்கப்படும் எண்கள் நூலில் அப்பொருள் நிலையைத் தரும் பாட்டின் எண்ணைக் குறிக்கும்.

"ஓர் உருவாயினை மான் ஆங்காரத்து
ஈரியல்பாயொரு
விண்முதல் பூதலம் ஒன்றிய இருசுடர்
உம்பர்கள் பிறவும் படைத்தளித் தழிப்ப
மும்மூர்த்திகள் ஆயினை"

எனவரும் சம்பந்தர் வாக்கும் அச்சுருதிப் பொருள் தெளிவிப்பதே ஆகும்.

நாதன் அருள்பெற்றோர் தம் உடல் பொருள் ஆவி அனைத்தும் தம்வயத்தால் அன்றி முதல்வன் அருள்வயத்தால் இயங்கு வதை உணர்வர். ஆதலால், அவ்வாறு அவர் தம்செயல் என்பதும், தாம் ஒருமுதல் என்ப தும் ஆகிய எனது யான் எனும் செருக்கு அறுத்தபின், தம் கரணங்கள் எல்லாம் சிவ கரணங்களாக நிகழப்பெறுதலையும், தம் செயல் எல்லாம் முதல்வன் செயலேயாய் நிகழ்தலையும் அனுபவித்து உணர்ந்து அந் நிலையில் நிற்பர். இவ்வாற்றால் அவர்க்கு முதல்வன் தன்னையே பெறும்பேருகக் கொடுத் தருள்வன் என உணர்தல் வேண்டும்.

முதல்வன் திருவருளே முத்திநிலைக்கண் ஆன்மாக்கள்மீது மேம்பட்டு நிகழ்ந்து சிவ போகமாக விளையும் என்பது கருத்து.

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்?
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்(று) என்பால்?

என்னும் திருவாதவூர் அடிகள் திருவாக்கு இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. (6)

(தொடரும்)




தென்கரை மூலநாதசுவாமி கோயிலில் திருவெம்பாவை திருப்பாவை மாநாடு.

158337

# அறநிலையத்துறை ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 10-2-60 | அவனிவணல்லூர் - சர்ட்சிநாதசாமி கோயில் | குடமுழுக்குப்பெருஞ்சாந்தி விழா. |
| | கிழத்திருக்காட்டுப்பள்ளி - கோலவல்லி இராமர் கோயில் | மகாசம்ப்ரோக்ட்சணம். |
| | மஞ்சக்கொல்லை - வெற்றிவேலாயுத்சாமி கோயில் | பசுமடம் திறப்புவிழா; திருப்பாவை - திருவெம்பாவை மாநாடு. |
| | திருநாங்கூர் - வைகுந்தநாதர் கோயில் | திருப்பணிக் கால்கோள் விழா. |
| 11-2-60 | வேதாரண்யம் - வேதாரண்யீசுவரர் கோயில் | சுவாமி கோயில் திருப்பணிக்கு கனம் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும், அம்மன் கோயில் திருப்பணிக்கு ஆணையர் அவர்களும் கால்கோள் விழாவினை நடத்தினர். |
| | முத்துப்பேட்டை - சுந்தரேசுவரர் கோயில் | தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழா. |
| 12-2-60 | சாக்கோட்டை - வீரசேகரசாமி கோயில் | திருமுறைக்கோயில் நிறுவுதல். |
| | கண்டதேவி - சுவர்ணமூர்த்திசுவரர் கோயில் | ,, ,, |
| | இராமநாதபுரம் - கோயிலூர் - கோதவல்லி ஈசுவரர் கோயில் | ,, ,, |
| | ஆவுடையார் கோயில் - ஆத்மநாதசாமி கோயில் | சிவபுராணக் கல்வெட்டுத் திறப்பு விழா. |
| 13-2-60 | காளையார்கோயில் - சுவர்ணகாளீசுவரர் கோயில் | சம்பந்தர் தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழா. |
| | திருக்கோட்டியூர் - சௌமியநாராயணப் பெருமாள் கோயில் | பாசுரக் கல்வெட்டுத் திறப்பு விழா, நூல்நிலையத் திறப்புவிழா, |
| | சிவகங்கை - விசுவநாதசுவாமி - சுப்பிரமணியசாமி கோயில் | திருப்பணி - கால்கோள் விழா, திருமுறைக்கோயில் நிறுவுதல். |
| 14-2-60 | திருப்புத்தூர் - திருத்தளீசுவரர் கோயில் | தேவாரக் கல்வெட்டுத் திறப்புவிழா திருமுறைக்கோயில் நிறுவுதல். |
| | பிரான்மலை - மங்கைநாதர் கோயில் | ,, ,, |
| | மதுரை - தல்லாகுளம் - பிரசன்னவெங்கடாசலபதி கோயில் | நூல் நிலையத்திறப்பு விழா. |

Printed at Paari Achakam, 127, Broadway Madras-1.
Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Nungambakkam, Madras-6.

உ

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

# திருவெம்பாவை

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

[திருவண்ணாமலைப் பெருமான் திருவடிகளைத் தேவர்கள் வணங்கும் போது அவர்களுடைய முடிகளில் உள்ள நவமணிகள் திருவடி ஒளியில் மங்கும். அதுபோல நட்சத்திரங்கள் ஒளி மழுங்கவும் இருள் அகலவும் ஞாயிறு தோன்றும் வரை எல்லாமாய் அல்லவுமாய் உள்ள முதல்வன் புகழ்பாடி இந்நீர் நிலையில் குதித்து ஆடுவோமாக.]

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

# திருப்பாவை

உந்துமத களிற்றன் ஓடாததோள் வலியன்
நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தம்கமழும் குழலீகடை திறவாய்
வந்தெங்கும் கோழிஅழைத்தன காண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார்விரலி உன்மைத்துனன் பேர்பாட
செந்தா மரைக்கையால் சீரார்வளையொலிப்ப
வந்துதிறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்

[மதயானைகளையுடையவனும் தோள்வலி மிக்கவனுமான நந்தகோபாலன் மருமகளான நப்பின்னையே! கதவைத் திறப்பாயாக. கோழிகள் கூவின; குருக்கத்திப் பந்தரின்மேல் குயில்கள் பலமுறை கூவின. பெண்ணே! உனது கணவன் புகழை நாங்களும் பாடும்படி, வளைகுலுங்க நடந்துவந்து, உன் செந்தாமரைக் கையால் திறப்பாயாக.]

## அடியவர் திருநட்சத்திரங்கள்

விகாரி—பங்குனி


சைவம்

3உ—காரைக்காலம்மையார்


12உ—தண்டியடிகள் நாயனார்

21உ—கணநாத நாயனார்

23உ—முனையடுவார் நாயனார்



திருப்பராய்த்துறை—தாருகாவனேசுவரர் ஆலயத்தோற்றம்.



அமைச்சர் அபயவரதேசுவரர் கோயில் கும்பாபிஷேகத்தைத் துவக்கிவைத்தல்.